# செம்மண்

நிலம் 2 துகள் 78 வள்ளுவர் ஆண்டு 2052, 15 - 21 தை 2022 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

# பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீள இந்தியா நிச்சயம் உதவும்

## அந்த நாட்டு அயலுறவுத் துறை அமைச்சர் இலங்கைக்கு உறுதியளிப்பு

கொழும்பு, தை 16

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் கொரோனா பெருந்தொற்றின் பின்னர் ஏற்பட்டுள்ள ஏனைய சவால்களை எதிர்கொள்வதற்கும் இந்தியா சாத்தியமான எல்லா வழிகளிலும் உதவும் என்று தெரிவித்தார் அந்த நாட்டு அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவுடன் மெய்நிகர் தொடர்பு முறையில் பேசியபோதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார். இரு அமைச்சர்களும் புத்தாண்டில் முதல் முறையாக மெய்நிகர் வெளியில் பேசிக் கொண்டனர்.



இந்தச் சந்திப்பில் இரு நாடுகளும் தமக்கிடையலான நிதிப் பரிமாற்றங்களை மேலும் விரிவாக்குவது குறித்துப் பேசப்பட்டது. தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் அமைப்பின் ஊடாக 400 மில்லியன் ரூபா நிதி பரிமாற்றம் செய்வது குறித்து இரு நாடுகளின் அமைச்சர்களும் சாதகமாகப் பரிசீலித்தார்கள் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு உதவும் வகையில் மேலும் ஒரு 515.2 மில்லியன் ரூபா பணப் பரிமாற்றம் குறித்தும் அவர்கள் பேசியுள்ளனர். உணவு, மருந்துப் பொருள்கள், அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றை இறக்குமதி செய்வதற்காக இந்தியா ஏற்கனவே வழங்கியுள்ள 1 பில்லியன் ரூபாவுக்கான கடன் வசதி மற்றும் இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் ரூபாவுக்கு எரிபொருள்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கம் தொடர்பான செயற்பாடுகள் குறித்தும் இரு அமைச்சர்களும் ஆராய்ந்துள்ளனர். பக்கம் 02




## டொங்காவை தாக்கியது சுனாமி

கடலுக்கடியில் இருந்த எரிமலை ஒன்று வெடித்துச் சிதறியதில் பசுபிக் நாடான டொங்காவை சுனாமி எனப்படும் ஆழிப்பேரலை தாக்கியுள்ளது.

எரிமலை வெடித்ததை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கரையோரப் பகுதி மக்கள் அனைவரும் மேடான பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டனர். நேற்றுமுன்தினமே மக்கள் இடம்பெயர்க்கப்பட்ட நிலையில் நேற்று ஆழிப்பேரலை கரையோரங்களைத் தாக்கியது.


இதனால் உயிரிழப்புக்கள் பக்கம் 02

## சீனாவிடம் மேலும் 500 மி. டொலர் கடன் கேட்கிறது இலங்கை

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள ஆசிய கட்டுமான முதலீட்டு வங்கியிடமிருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இலங்கை ஆட்சியாளர்கள் கோரியிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. பக்கம் 02

## ஜெனரல் சவேந்திரவுக்கு எதிராக பிரிட்டனில் தடை கோரி பரப்புரை

இலங்கையில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் தரைப் படைத் தளகர்த்தாவுக்கு எதிராக பிரிட்டிஷ் அரசு தடைகளை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தும்



புதிய பரப்புரை ஒன்றை பிரிட்டன் வாழ் தமிழ் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

பூகோள மக்னிட்ஸ்கி சட்டத்தின் கீழ் இலங்கைப் படைத்துறை உயர் அதிகாரிகள் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இந்தப் பரப்புரை வலியுறுத்துகின்றது. "தடைகளுக்கு இதுதான் நேரம்" என்ற தலைப்பில் இந்தப் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது. பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பின்புல ஆதரவுடன் இந்தப் பரப்புரை தொடங்கப்பட்டுள்ளது. இலங்கையின் பக்கம் 02

## இலங்கையில் ஓமிக்ரோன் மேலும் 160 பேருக்கு பரவல்

கொழும்பு, தை 16

இலங்கையில் மேலும் 160 பேருக்கு ஓமிக்ரோன் கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. இதுவரையில் மொத்தம் 200 பேரிடம் ஓமிக்ரோன் கண்டறியப்பட்டுள்ளது.

மார்கழி 31ஆம் நாள் வரையில் இலங்கையில் 48 பேருக்கு மட்டுமே ஓமிக்ரோன் தொற்றிருந்தது. அடுத்த 15 நாட்களில் இந்த எண்ணிக்கை நான்கு மடங்காக அதிகரித்திருக்கின்றது.

கொரோனா பெருந்தொற்றின் மற்றொரு திரிபான ஓமிக்ரோன் மிக வேகமாகப் பரவும் தன்மை வாய்ந்தது என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்திருக்கிறது. இலங்கையில் ஏற்கனவே பரவியிருந்த டெல்ரா திரிபைவிடவும் வேகமாகப் பரவும் இயல்பு ஓமிக்ரோனுக்கு இருக்கிறது.

இலங்கையில் டெல்ரா சமூகத்திற்குள் பரவத் தொடங்கி விட்டது என்று அண்மையில் சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது. ஆய்வுகூட பரிசோதனைகளில் இருந்து ஓமிக்ரோன் பரவல் அதிகரித்திருப்பது தெரிவதாக சுகாதார மேம்பாட்டுப் பிரிவு பணிப்பாளர் மருத்துவர் ரஞ்சித் பதுவந்துடவ தெரிவித்தார். பக்கம் 02

## போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி அவசியம்



போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கச்செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் ஐக்கிய மக்கள் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச. அதன் மூலமே இலங்கை மீது மீண்டும் மீண்டும் போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதைத் தடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்குக்கான தனது பயணத்தின்போது வியாழக்கிழமை அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார் என்று டெய்லிமிரர் ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டது. பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது சஜித் இதனைக் கூறினார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சில நலத் திட்டங்கள் [illegible] பக்கம் 02

## அரசியல்வாதிகள் நாட்டின் சுமை!



அரசியல்வாதிகளும் அரச அலுவலர்களும் நாட்டிற்குச் பெரும் சுமையாக மாறிவிட்டனர் என்பது மக்கள் மத்தியில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என அமைச் பக்கம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்


# மரியசீலன் சாவுக்கு நீதி வேண்டும்

துடிப்பான தமிழ் அரசியல் செயற்பாட்டாளரான எட்வேட் மரியசீலனின் உயிரிழப்புத் தொடர்பில் நியாயமான, நீதியான, பக்கச்சார்பற்ற ஒரு விசாரணை நடத்தப்பட்டு உண்மை வெளிக்கொண்டுவரப்படவேண்டும்.

மரியசீலன் கடலில் மீன்பிடிப்பதற்குச் சென்ற சமயம் கடற்படையினரின் படகால் மோதப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று அவரது உறவினர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். கடற்படை அதனை மறுக்கின்றது. இந்திய இழுவைப்படகுகள் மோதியே மரியசீலனின் படகு சேதமடைந்திருக்கலாம் என்று கடற்படை தெரிவிக்கின்றது.

மரியசீலன் பல அரசியல் போராட்டங்களில் முன்னணியில் கலந்துகொண்ட ஒருவர். குறிப்பாகக் படையினரின் காணி சுவீகரிப்புகளுக்கும் அபகரிப்புக்களுக்கும் எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களில் முன்னணியில் நின்று செயற்பட்டிருக்கிறார். கடற்படையினரின் முகாம்களுக்கு காணிகளைச் சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட போராட்டங்களிலும் அவர் முன்னணிச் செயற்பாட்டாளராக இருந்திருக்கிறார்.

இதுவே அவர் கடற்படையினரால் கொல்லப்படுவதற்கான காரணமாக அவரது உறவினர்களால் சொல்லப்படுகின்றது. படையினருக்கு எதிரான செற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் அல்லது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவானவர்கள் என்று கருதப்பட்டவர்கள் கேட்டுக்கேள்வியின்றிச் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்கள் கடந்த காலங்களில் நடந்துள்ளன.

அந்த வரலாற்றுப் படிப்பினையில் அடிப்படையிலுமே மரியசீலன் கடற்படையினரால் கொல்லப்பட்டிருக்கக் கூடும் என்று அவரது குடும்பத்தினர் அஞ்சுகின்றனர்.

மாதகலைச் சேர்ந்தவரான மரியசீலன் தீவிரமாக அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தபோதும் தனது வாழ்வாதாரத்துக்காக கடற்றொழிலில் ஈடுபட்டுவந்தார். சம்பதினமான செவ்வாய்க்கிழமை அவர் கடலுக்குச் சென்ற சிறிது நேரத்தில் அவரது படகுடன் கடற்படைப் படகு மோதியதில் அவர் இறந்தார், இது திட்டமிட்ட படுகொலை என்பதே அவரது குடம்பத்தினரின் வாதம்.

மரியசீலனின் படகு மற்றும் வெளியிணைப்பு இயந்திரம் என்பன சேதமாகிய நிலையில் கரையொதுங்கியது. அவரது சடலமும் அவ்வாறே கரையொதுங்கியது.

கடலில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான, நியாமான, பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட்டு உண்மை வெளிக்கொண்டுவரப்படவேண்டும். மரியசீலனின் குடும்பத்தினர் சொல்வது போன்று அவர் கொலை செய்யப்பட்டிருந்தால் அது தீவிர அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு விடுக்கப்படும் கொலை அச்சுறுத்தலாகவே இருக்கும். இது வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மக்களின் எதிர்ப்பை அடக்குவதற்காக மீண்டும் நீதிக்குப் புறம்பான கொலைகள் இடம்பெறத் தொடங்கிவிட்டன என்பதை வெளிக்காட்டுவதாக அமையும்.

இந்தக் கொலையை வழக்கம் போல காவல்துறையினர் விசாரணை செய்து நீதியை நிலைநாட்டப்போவதில்லை. இதற்கு முன்னரும் கடற்படையினர் மற்றும் ஏனைய படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களின் விசாரணைகளில் காவல்துறையினரின் செயற்படுதிறன் மெச்சத்தக்கதாக இருந்ததில்லை. எனவே படையினரிடம் முழுமையான விசாரணை நடத்தவும் திடீர் சோதனைகளை நடத்தவும் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு சுயாதீன குழு மூலம் நீதியான விசாரணை நடத்தப்பட்டு அதனடிப்படையில் குற்றவியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இன்றைய ஆட்சியாளர்கள் அதனைச் செய்வார்கள் என்கிற நம்பிக்கைய் இல்லை என்றபோதும் அவ்வாறு செய்யவில்லை எனில் மரியசீலனின் இறப்பு தொடர்பில் அவரது குடும்பத்தினர் எழுப்பும் குற்றச்சாட்டின் மீதான நியாயத்தின் சாயல் தொடர்ந்தும் படிந்தபடியே இருக்கும்.

## பொருளாதார...

இந்தச் சந்திப்பில் பேசிய அமைச்சர் பசில் ராஜபக்ச, இலங்கையில் இந்திய முதலீடுகளைப் பெரிதும் வரவேற்றார். துறைமுகங்கள், கட்டுமானத்துறை, சக்தி, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மின்உற்பத்தி மற்றும் உற்பத்தித்துறைகளில் இந்தியா முதலிடத்தக்க சூழல் ஏற்படுத்தித் தரப்படும் என்றும் உறுதியளித்தார்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பாகவும் இந்திய அமைச்சர் இந்தச் சந்திப்பில் பேசினார். மனிதாபிமான ரீதியில் இந்த விவகாரத்தைக் கையாளவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## ஜெனரல்...

தற்போதைய தரைப்படைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில் வாவுக்கு எதிராகத் தடை விதிக் கப்படவேண்டும் என்று வலியு றுத்தும் 100 பக்க அறிக்கை ஒன்று இது தொடர்பில் பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் மூலம் பிரிட்டனின் தடைகளுக்கான திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

பூகோள மக்னிட்ஸ்கி சட்டம் என்பது, மனித உரிமை மீறல்கள் அல்லது குறிப்பிடத்தகுந்த ஊழலில் ஈடுபட்ட வெளிநாட்டவர்களுக்கு எதிராக இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளில் வழக்குத் தொடர்வதற்கான சட்ட ஏற்பாடாகும். 2012 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் முதன் முதலில் அமெரிக்காவில் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் கனடா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிலும் இது நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழேயே ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

இலங்கை குத்துச்சண்டை தெரிவுக் குழுவின் தலைவராகவும் இருக்கிறார் சவேந்திர சில்வா. 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளிடையிலான விளையாட்டில் குத்துச் சண்டைப் போட்டி இங்கிலாந்தின் பெர்மிங்காமில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை அணியும் பங்கேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்தப் பரப்புரை தொடங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இலங்கை போட்டியில் பங்கேற்குமா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று பொதுநலவாய விளையாட்டுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

## இலங்கையில்...

ஒமிக்ரோன் மிகச் சீராகப் பரவி வருவதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டு மக்கள் மூன்றாவது கட்டத் தடுப்பு மருந்தை ஏற்றிக்கொள்வதன் அவசியத்தை ஒமிக்ரோன் தொற்றுப் பரவல் வலியுறுத்துகின்றது என்றும் தெரிவித்தார் அவர்.

இருப்பினும் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் போடுவதில் இலங்கையர்கள் போதிய ஆர்வம் காட்டவில்லை என்று மருத்துவ வட்டாரங்கள் கூறுகின்றன.

## அரசியல்வாதிகள்...

சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட திஹா கொட பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கண்ணோட்டத்தை மாற்றுவதற்கு அனைத்து அரச ஊழியர்களும் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும் அரச அலுவலர்கள் நேர்மையாகவும் பொறுப்புடனும் செயற்படவேண்டும் என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

## போர்க்...

உதவிகளை வழங்குவதன் மூலம் போர்க் காலச் சம்பவங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

எதிர்காலத்தில் தன் தலைமையில் அமையவுள்ள அட்சி அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சீனாவிடம்...

ஆசிய கட்டுமான முதலீட்டு வங்கி உலக நாடுகளில் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டு நோக்கத்தோடு செயற்படும் பல்தரப்பு அபிவிருத்தி வங்கியாகும். 2016ஆம் ஆண்டில் இந்த வங்கி தொடங்கப்பட்டது. இலங்கை அதன் தொடக்ககால உறுப்பினர்களில் ஒன்று.

இந்த வங்கியிடமிருந்து இலங்கை கடன் கேட்டிருப்பதான செய்திகள் குறித்து இதுவரையில் உறுதிப்படுத்தப்பட்ட தரவுகள் கிடைக்கப்பெறவில்லை என்று டெய்லிமிரர் ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்தது.

இதேவேளை இலங்கையின் ஆடைக் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன் வசதிகளைச் செய்துதரும்படியும் சீனாவிடம் ஏற்கனவே ஆட்சியாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சீனாவின் அயலுறவுத்துறை அமைச்சர் இலங்கைக்கு ஒரு நாள் பயணமாக வந்திருந்தபோது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

## டொங்காவை...

பெருமளவில் குறைக்கப்பட்டன என்று அதிகாரிகள் கூறினர். எனினும் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள ஒரு சிறிய நாடு டொங்கா.

ஆழிப் பேரலையால் மட்டுமன்றி எரிமலைச் சாம்பல் மழையாகப் பொழிவதாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ரவீந்திரன்

# ஜல்லிக்கட்டு என்கிற அன்பு கலந்த வீரம்

தென்னிந்தியாவில் மிகப் பெரிய பாரம் பரியங்களைத் தன்னகத்தே கொண்டது மதுரை. இந்த மதுரை மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையே இன்றைய வீர விளையாட்டாக மாறியிருக்கிறது. பண்டைய காலத்தில் ஓர் ஊரில் இருக்கும் மந்தைகளையும் (அப்போதைய செல்வங்கள்) பெண்களையும் திருடிச் செல்வதற்காக வேற்றூர்களில் இருந்து திருடர்கள் களமிறங்குவார்கள். தமது செல்வமான மாடுகளையும் உறவுகளான பெண்களையும் பாதுகாப்பதற்காக மிகவும் வீரம் மிக்கவர்களாக இருக்கவேண்டிய தேவை ஊரிலுள்ள ஆண்களுக்கு இருந்தது. இதன் தொடர்ச்சியே தமிழ்த் திரைப்படங்களில் பலர் ஆங்காங்கு குந்தியிருந்து கதைப்பதும் பிரதான வீதியை நோக்கி மரங்களுக்குக் கீழ் கட்டப்பட்ட கட்டுகளில் காத்திருப்பதும் ஏதாவது ஒரு அவலக் குரல் கேட்டால் அந்த இடத்துக்கு அனைவரும் பொல்லுகள் தடிகளுடன் ஓடிச்செல்வதும். பழைய அவல வாழ்க்கையின் தொடர்ச்சியே..

மந்தைகளைப் பாதுகாப்பது என்ற விடயத்தில் ஊர் மக்கள் அதிக கவனம் செலுத்திக் காத்திருந்தபோதும் திடீரென ஊருக்குள் புகும் திருடர்கள் ஊரவர்கள் எதிர்பார்த்ததைவிட வேறு யுக்திகளைக் கையாண்டு (தீ மூட்டுதல், வேறு கலகங்களை ஏற்படுத்தித் திசை திருப்புதல்) மந்தைகளைத் திருடிச் சென்றபின் அதைத் தடுப்பதற்கான வியூகம் ஒன்றை வகுத்து மாட்டுப் பட்டியிலுள்ள முறுக்கான காளைகளைப் பறிற்றுவித்துத் திருடர்களைத் தாக்கும் பயிற்சிகளை வழங்கினார்கள் இதுவே இன்று காணப்படும் திமிறிப் போகின்ற அடங்காத மாடுகளாகும். ஒரு வகையில் பயிற்றப்பட்ட இந்தக் காளைகளை ஊரவர்க ளுக்கு மிகவும் உதவியாகவும் ஊரிலுள்ள மந்தைகளைக் காப்பாற்றியதற்காகவும் மிகவும் அன்பாக வளர்க்கும் வழக்கம் ஏற்பட்டது.

இவ்வாறு பயிற்றப்பட்ட காளைகள் தம்மை நோக்கி மூர்க்கமாகப் பாயும்போது அதை அதன் திமிலில் பிடித்து அடக்கி அங்கிருந்த

**சிந்து நாகரீகத்தை முறியடித்து இந்தியாவுக்குள் புகுந்த ஆரியர் பசுக்களைத் தமது செல்வாமாகக் கொண்டிருக்கின்றனர். பாரம்பரிய இந்துக்களின் - இந்தியர்களின் விருப்பத்துக்குரியதாகக் காளைகளே இருந்துள்ளன**

ஏனைய மாடுகளையும் விரட்டிச் செல்லும் வல்லமை திருட வந்த ஒரு சில இளைஞர்களுக்கு இருந்திருக்கிறது. மாடுகளின் தாக்குதல்களை முறியடிப்புச் செய்பவர்கள் தமது சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த மாடுகளின் தாக்குதல்களும் அதைத் தடுத்த வீரமும் இன்று ஜல்லிக்கட்டு விளையாட்டாக மாறிவிட்டது. மனிதனும் மனிதனும் - மிருகமும் மிருகமும் மோதிக்ககொள்வது இயற்கையானது. ஆனால் ஜல்லிக்கட்டில் ஒரு காளையும் மனிதர்களும் மோதிக் கொள்வதைக் காணமுடிகிறது. அதிலும் ஒரு மாடும் ஓர் இளைஞனும் ஒத்தைக் கொத்தை முட்டிக்கொள்வதே இந்த விளையாட்டின் வெற்றி -தோல்வியை நிர்ணயிக்கிறது. இதில் ஒளிவு மறைவுக்கு இடமில்லை நேருக்கு நேர் மனிதனும் மிருகமும் முட்டிக்கொள்வது. இந்த மூர்க்கத் தனமான தாக்குதல்களால் பல இளைஞர்கள் கடந்த காலங்களில் சாவடைந்த போதும் மீண்டும் மீண்டும் காளையுடன் மோத அடுத்த சந்ததி தயாரகவிருப்பது வியப்புத்தான்.




தமிழர்களின் தொன்மை மற்றும் தொடர்ச்சிக்கு சான்று

### மதுரையில் மையம்

ஏறுதழுவுதல், மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு (ஜல்லிக்கட்டு) என இந்த விளையாட்டுக்குப் பெயர்சூட்டப்பட்டாலும் வாடி வாசல் எனப்படும் கோவில் மதிற் சுவரிலுள்ள ஒரு சிறிய வாசலால் மாடுகளை வெளியே விரட்டும்போது அதற்கு நேர் எதிரக நின்று முகங்கொடுத்துக் காளையின் திமிலில் பாய்வது என்பது ஒரு கணப்பொழுதில் காளையை மனிதன் மடக்குவது. இது வெறும் கற்பனையல்ல.

மதுரையில் அவனியாபுரம், பாலமேடு, அலங்கா நல்லூர் ஆகிய ஊர்கள் இந்த விளையாட்டுக்குப் பிரசித்தமானவை. இது தமிழரின் பாரம்பரியமான ஒரு வீர விளையாட்டு என்பதை சிந்துவெளி நாகரீகத்தில் கண்டெடுக்கப்பட்ட காளைகளின் முத்திரைகளை வைத்து அடையாளம் காணமுடிகிறது. இந்த முத்திரைகள் ஜல்லிக்கட்டின் தொன்மையை எடுத்துக் காட்டப் போதுமானவை. சிந்து நாகரீகத்தை முறியடித்து இந்தியாவுக்குள் புகுந்த ஆரியர் பசுக்களைத் தமது செல்வாமாகக் கொண்டிருக்கின்றனர். பாரம்பரிய இந்துக்களின் - இந்தியர்களின் விருப்பத்துக்குரியதாகக் காளைகளே இருந்துள்ளன.

ஜல்லிக்கட்டு ஒரு வீர விளையாட்டு என்பதற்கு அப்பால் ஒரு பண்பாட்டின் தொடர்ச்சி அல்லது விழுமியம் என அடையாளப்படுத்த முடிகிறது. தற்போது இந்த விளையாட்டில் ஈடுபடும் வீரர்களுக்கு காளைகளை அடக்கினால் பரிசு, காளைகளை மடக்க முடியாவிட்டால் அந்தக் காளைகளுகுப் பரிசு என உடனுக்குடன் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

மண்ணெண்னை அடுப்பு. பிளாஸ்ரிக் கதிரைகள், அலுமாரிகள், தங்கக்காசு, வெள்ளிக் காசு, மிதிவண்டி, மோட்டார் சைக்கிள், கார் எனப் பல மட்டங்களிலும் பரிசுகள் மாடு பிடிப்பவர்களுக்கும் மாடுகளுக்கும் கொடுக்கப்படுகின்றன.

இதுவரை தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு வீர விளையபட்டைப்பேணி வருவதும் அதற்கான அரச அங்கீகரம் நீக்கப்பட்டபோது தமிழ் நாடே அதை எதிர்த்து வென்றதும் பெறுமதியான விடயங்களே முக்கியமாகக் களமிறங்கும் மாடுகள் தமது எஜமான் கூறுவதைச் செவிமடுக்கும் அளவுக்கு அன்புள்ளம் கொண்டிருப்பதும் உண்மையே. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்...? எப்படி...?



நட்சத்திரா

## 02 நிலமும் நிலையமும்

யாழ்ப்பாணத்து இந்துக்கள், சைவர்கள் மத்தியில் நிலையம் எடுப்பது என்றொரு பழமைவாதப் பண்பு இருந்து வருகிறது. நிலையம் எடுப்பது என்பது நிலத்தில் கட்டடங்கள், நுழைவாயில், மனை, கிணறு மற்றும் கழிப்பறை உள்ளிட்ட தொகுதிகள் எந்த அளவில் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதே. நிலையம் எடுப்பதைப் பழங்காலத்திலிருந்தே செய்துவருபவர்கள் தற்காலத்தில் அதிகரித்துள்ள சனத் தொகைப் பெருக்கம், அதற்கேற்ப குடிகள் நெரிசலடைவது, வசதி வாய்ப்புகள் நிலத்தில் குறுகலடைவது போன்றவற்றை ஆராய்ந்து செயலாற்றும் திறனில்லாமல் இருப்பதால் நிலையம் எடுக்கும் இந்தப் பழங்கால முறை சிக்கல் அளிக்கும் ஒன்றாக மாறியிருக்கிறது.

**சிக்கல் 1** - அண்மையில் எனது நண்பி ஒருத்தி தன்னிடமிருந்த நிலத்தை விற்றுவிட்டதாகவும் அந்தக் காணியில் நிலையம் இல்லை என்று நிலையம் எடுப்பவர் சொன்னார் என்றும் சொன்னாள். அவளுடைய காணியில் ஏன் நிலையம் இல்லாது போனது?

**காரணம் 1** - தமிழ்ச் சமூகத்தில் நிலையம் எடுக்கும் மரபு வழிவந்த பழைய மனிதர்களுக்கு அந்த விடயம் சார்ந்த படிப்பு இல்லை. மரபு வழியாக அறிந்த சில விடயங்களை வைத்துக் கருத்துக் கூறுகின்றனர். ஏக்கர் கணக்கிலும் பரப்புக் கணக்கிலும் உள்ள காணிகளுக்கு மட்டும் நிலையம் பார்க்கும் பழங்காலத் திறனே இவர்களுக்கு இருக்கிறது. தற்போது நகர மயமாக்கலாலும் சனத்தொகைப் பெருக்கத்தாலும் ஏதேதோ வடிவங்களில் எல்லாம் காணிகள் உருவெடுக்கின்றன. அந்தக் காணிகளுக்குத் தக்கவாறு வீடுகளை அமைக்கும் கட்டட முறை பெரு நகரங்களில் தானாகவே வந்துவிட்டது.

பல இடங்களில் காணிகள் இல்லாத போது குளம் குட்டை சேற்றுநிலங்களை நிரப்பி அதன்மேல் கட்டடங்கள் அமைக்கின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. அதாவது காணிக்குத் தக்கவாறு அதில் வசதிகளை அமைப்பதே இன்றுள்ள தேவையாகிவிட்டது. இந்த விடயங்களை நிலையம் எடுப்பவர்கள் கருத்தில் கொள்வதில்லை.

**சிக்கல் 2** - வீடுகட்டுவதற்குப் பாரம்பரிய முறைப்படி நிலையம் எடுக்கும்போது அந்தக் காணியில் தெற்கு, வடக்கு திசைகளில் காணியின் ஒரு பகுதியைக் கழித்து மிகுதி நிலங்களை எடுப்பது வழக்கம். ஒரு ஏக்கர் காணி என்று வைத்துக்கொண்டால் 16 அடி நீளத்துண்டைக் கழிக்க வேண்டும் என்கிற கடைப்பிடிப்பு நிலையம் எடுப்பவர்கள் மத்தியில் இருந்து வருகிறது (இந்த அளவு ஓர் உதாரணத்துக்கே) அவ்வாறாயின் சிறிய காணி ஒன்றில் 3 அடி கழித்தால் போதுமானது. ஆனால் நிலையம் பார்ப்பவர்கள் ஒரு பரப்புக் காணிக்குக் கழிக்கவேண்டிய நிலத்தையே எதிர்பார்த்து இதுவிடயத்தில் பிழை விடுகின்றனர். மிகுதிப் பகுதியில் வீடு கட்டப் போதுமான நிலம் இருப்பதில்லை. தமது அறிவுக்கு எட்டிய வகையில் அதற்குப் பதில் ஒன்றையும் கூறுகின்றனர். அதுதான் சில காணிகளுக்கு நிலையம் இல்லை என்பது.

இந்தப் பழைய நிலையம் எடுக்கும் முறையால் பொருத்தமற்ற இடத்தில் வீடும் பொருத்தமற்ற இடத்தில் கழிப்பறையும் அமைக்கப்பட்டுப் பலர் சிரமப்பட்டிருக்கிறார்கள். பெறுமதியான இடத்திலுள்ள காணிகளைப் பலர் இழக்கின்றனர்.

> **பழைய நிலையம் எடுக்கும் முறையால் பொருத்தமற்ற இடத்தில் வீடும் பொருத்தமற்ற இடத்தில் கழிப்பறையும் அமைக்கப்பட்டுப் பலர் சிரமப்பட்டிருக்கிறார்கள். பெறுமதியான இடத்திலுள்ள காணிகளைப் பலர் இழக்கின்றனர்**

**சிக்கல் 3** - நிலையம் எடுக்கும் முறையால் ஒரு பெரிய காணியில் ஏதோ ஒரு மூலையில் வீடு, இன்னொரு மூலையில் கழிப் பறை, இன்னோரிடத்தில் கிணறு, மற்றோர் இடத்தில் முதன்மை வாசல் என அமைத்துவிட்டுப் பின்னர் அந்தக் காணியைத் தமது பிள்ளைகளுக்குப் பிரித்து எழுதும்போது பலர் சிக்கல்படுகின்றனர்.

பெரிய காணி ஒன்றில் வீட்டுக்கு நிலையம் எடுப்பதற்கு முன்னர் அந்தக் காணியை எதிர்காலத்தில் எத்தனை துண்டுகளாகப் பிரிக்கவிருக்கிறோம் என்பதை தொடக்கத்திலேயே காணி உரிமையாளர் தீர்மானித்துவிட்டால் அதற் கேற்ற வகையில் பொதுவான கிணறு ஒன்றையும் பாதையையும் மலக்குழியையும் அமைத்துவிட முடியும். எதிர்காலத்தில் மலக்குழியில் இருந்து கழிவுகளை வெளியேற்றுவதற்கு வாகனம் செல்லக்கூடிய வழி உள்ளதா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள சனப்பெருக்கம், அவர்களது தேவைகள், காணிப் பிரச்சினை, கழிவகற்றல், குடிநீர், வடிகால்கள், வாகனங்கள் நிறுத்துமிடம், பொதுவான பாதைகள் போன்ற பலதையும் கருத்தில்கொண்டு நிலையம் எடுக்கத் தெரியாதவர்களை நம்பிப் பலர் தமது காணிகளை இழக்க இந்துக்கள் அல்லாத ஏனைய மதத்தவர்கள் இந்தக் காணிகளைக் குறைந்த விலையில் வாங்கி நவீன வசதிகளுடன் கூடிய வீட்டைக் கட்டி சுகபோகமாக வாழ்வதையும், வாங்கிய விலையைவிட பல மடங்கு அதிக விலைக்கு விற்பதையும் காணமுடிகிறது.

யாழ்ப்பாணத்தில் செத்தவீட்டுக்குப் போய்வந்து வீட்டு வாசலில் ஒரு வாழித்தண்ணியைத் தலையில் ஊற்றிவிட்டுக் கிணற்றடியில்போய் குளிக்கும் அதே குடும்பம் கொழும்பில் தொடர்மாடி வீடுகளில் வசிக்கும்போது அல்லது வெளிநாடுகளில் வசிக்கும்போது செத்த வீட்டுக்குப் போய்வந்து நேரடியாக வீட்டுக்குள் சென்று சுவாமி அறையைத் தாண்டிக் குளியலையில்போய் குளிக்கவும் சமையல் அறை அருகில் கழிப்பறையை வைத்திருக்கவும் செய்கிறார்கள்.

எனவே நிலையம் எடுக்கும் விடயத்தில் நிலையம் எடுப்பவர்களின் அறிவுக்கு ஏற்ப மற்றவர்களும் செயற்படுவதைத் தவிர்க்கவேண்டும்.

ஒரு விடயத்தில் இறங்க முன்னர் ஏன் அப்படிச் செய்ய வேண்டும் என விசாரித்து அறிந்துகொள்வதன் மூலம் அந்தப் பிரச்சினையை சாதகமாகக் கையாள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வானூர்தியின் சக்கரம் தண்டவாளத்தில் தேயுமளவுக்குத் தாழப் பறந்தேன்"

கமலநாதன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எனது வானோடி அனுபவத்தில் மறக்க முடியாத மற்றொரு தாக்குதல் 1997 ஒக்ரோபர் 10ஆம் திகதியளவில் நடந்தது. அப்போது வவுனியாவிலிருந்து உலங்கு வானூர்தியில் படையினரையும் படைத் தளவாடங்களையும் ஏற்றிக்கொண்டு ஆணையிறவுக்குப் புறப்பட்டோம். முதலாவது வானூர்தியை நானும் இரண்டாவதை தம்மிக்க டயசும் மூன்றாவதைத் தினேஸ் குணசேகரவும் இயக்கினோம். எமக்கு உதவியாக இன்னும் 3 வானோடிகள் இருந்தனர்.

வவுனியாவிலிருந்து புறப்பட்டு முல்லைத்தீவு கடற்கரையோரமாகப் பறந்து வெற்றிலைக்கேணிப் பகுதியூடாக ஆணையிறவில் இறங்குவதே எமது திட்டமாக இருந்தது. முதலில் பறந்துசென்ற எனது வானூர்தியின் ராடரில் விமான எதிர்ப்புத் தொடர்பான சமிக்ஞை வந்தது. முல்லைத்தீவு சாலைக் கடற்பகுதியில் காலைச் சூரிய ஒளியில் பல படகுகளை அவதானித்தேன். அந்தக் காலத்தில் யாரும் கடலில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதில்லை. எல்லாப் படகுகளும் சூரிய ஒளியில் வெண்மையாகத் தெரிய ஒரு படகு மட்டும் இராணுவக் கமோ தீந்தை பூசப்பட்டிருப்பது தெரிந்தது.

திருகோணமலையில் உள்ள சைனாபே தளத்துடன் தொடர்புகொண்டு கடற்படைக் கப்பல்கள் ஏதாவது சாலைக் கடற்பகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனவா என்று கேட்டேன். அங்கிருந்து இல்லை என்று பதில் வந்தது. உடனடியாகக் காரைநகர் கடற்படைத் தளத்துடன் தொடர்பு கொண்டு அங்கிருந்து ஏதாவது நடவடிக்கையில் கடற்படை இறங்கியிருக்கிறதா என்று கேட்டேன். அங்கிருந்தும் இல்லை என்றே பதில் வந்தது.

**"காயப்பட்டவர்களை ஏற்றுவதற் குத் தயாரானபோது வானூர்தியின் வலது பக்கத்தில் பெரிய சத்தம் ஒன்று கேட்டது. உடனே வானூர்தியை வேகமாக உயர்த்தினேன் பறக்க முடியாதபடி நெருப்புப் பிடித்தது. கரும்புகை மறைத்தது. மேலே எழுப்ப முடியாததால் திரும்பவும் இறக்கினேன். எரிபொருள் இருந்த பக்கம் பாதிப்புக்குள்ளாகி உலங்குவானூர்தி சுழன்று மரங்களில் அடிபட்டு தலைகீழாக விழுந்தது"**

இலங்கைக் கடற்படையினர் தமது கப்பலுக்கு உருமறைப்பு வர்ணம் பூசுவதில்லை. எனவே அது கடற்புலிகள் அணி என்பதை உறுதிப்படுத்திக்கொண்டேன். நான் இந்த விடயத்தை உறுதிப்படுத்திய கணத்தில் அந்தக் கப்பலில் இருந்து எனது வானூர்திக்கு மிசைல் அடித்தார்கள். ஏதோ வெளிச்சம் ஒன்று வானவெடிபோல அருகாகப் போவதை அவதானித்தேன். அப்போது நான் நூறு அடி உயரத்தில் இருந்து திருப்பியதால் இலக்குத் தவறி வானூர்தியின் பின்புறத்தில் சிறிதாய் அதுபட்டது.


கிளிநொச்சிக்கும் ஆணையிறவுக்கும் இடையில் படையினர் மண் பாதுகாப்பு அரண் ஒன்றை அமைத்திருந்தார்கள். அதைப் புலிகள் தகர்த்துக் கிளிநொச்சிக்கும் ஆணையிறவுக்கும் இடையில் படையினரைத் தனிமைப்படுத்தியிருந்தனர். அங்கு தனிமைப்படுத்தப்பட்டிருந்த படையினருக்கான உணவு, துப்பாக்கி ரவைகள் போன்றவற்றை வானூர்தி மூலமாக மட்டுமே இறக்கவேண்டியிருந்தது. அதேவேளை அங்கிருந்த காயப்பட்டவர்களை ஏற்ற வேண்டியிருந்தது.

பலாலியிலிருந்து எம்.ஐ. 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகள் இரண்டும் எமக்கு உதவிக்கு வந்திருந்தன. படையினரின் தடுப்பணைகளுக்கு அருகில் நின்ற புலிகள் பை சீரோ (பிப்ரி கலிபர்) துப்பாக்கியால் தாக்கினார்கள். ஹெலிகளை இறக்கியே ஆகவேண்டும் என்ற தேவையிருந்ததால் துணிந்து இறக்கினோம் கொண்டுவந்த பொருள்களை மிக வேகமாக இறக்கிவிட்டுக் காயப்பட்டவர்களை ஏற்றினோம். இறக்கும்போது அங்கிருந்த மரங்களின் உயரத்துக்குப் பதித்துப் பறந்ததால் புலிகளின் இலக்கிலிருந்து தப்பினோம். மேல் எழுந்தபோது புலிகள் மோட்டார் தாக்குதல்களை ஆரம்பித்தார்கள். அதிகம் உயர்த்தாமல் பதிந்தபடி செலுத்தினேன்.

அங்கிருந்த தொடருந்துப் பாதைகளில் இருந்த சிலிப்பர் கட்டைகளும் தண்டவாளங்களும் புலிகளால் கழற்றப்பட்டுச் சிறு கற்கள் மட்டுமே கிடந்தன. எனது வானூர்தியை நன்றாகப் பதித்து தொடருந்துப் பாதையில் பின்சில்லுப் பட்டு உருளுமளவுக்கு மிகவும் தாழ்வாகப் பறந்து பின்னர் உயர்த்திப் பறந்து தப்பினேன். எனது வானோடி அனுபவத்தில் அதிகம் தாழ்வாக வானூர்தியைப் பறக்க வைத்தது அன்றுதான்.

**மாங்குளம் தாக்குதல்**

1998 தை 2ஆம் திகதியன்று உணவு, துப்பாக்கி ரவைகளை இறக்கிவிட்டுக் காயமடைந்தவர்களை ஏற்றுவதற்காக அனுராதபுர வான் தளத்திலிருந்து மாங்குளம் நோக்கி எம்.ஐ.17 சீ எச் 594 உலங்கு வானூர்தியில் புறப்பட்டேன். வவுனியாவுக்கு அருகில் பறந்துகொண்டிருந்த போது மாங்குளத்துக்கு வரவேண்டம் புலிகள் ஊடுருவி விட்டார்கள் அவற்றைக் கிளியர் பண்ணியபின்னர் அறிவிக்கிறோம் என்று செய்தி வந்தது. அன்று வவுனியா படை முகாமுக்குள் வானூர்தியை இறக்கினேன். பின்னர் பிற்பகல் 1.55 மணியளவில் புறப்பட்டு ஒலுமடு தளத்தில்



இறக்கினேன். மிக வேகமாகப் பொருள்களை இறக்கினார்கள். காயப்பட்டவர்களை ஏற்றுவதற்குத் தயாரானபோது வானூர்தியின் வலது பக்கத்தில் பெரிய சத்தம் ஒன்று கேட்டது. உடனே வானூர்தியை வேகமாக உயர்த்தினேன் பறக்க முடியாதபடி நெருப்புப் பிடித்தது. கரும்புகை மறைத்தது. மேலே எழுப்ப முடியாததால் திரும்பவும் இறக்கினேன். எரிபொருள் இருந்த பக்கம் பாதிப்புக்குள்ளாகி உலங்குவானூர்தி சுழன்று மரங்களில் அடிபட்டு தலைகீழாக விழுந்தது. எனது ஆசனப் பட்டியைக் கழற்ற முடியாதிருந்தது. பட்டியைத் தோளுக்குள்ளால் கழற்றினேன். வானூர்தியிலிருந்து வெளியேற முடியாததால் அதன் முன் கண்ணாடிக்கு அடித்தேன் அதன் றப்பர் பட்டி எரிந்துவிட்டதால் அது கழன்று தெறித்தது.

சாதாரணமாகப் பறப்பில் ஈடுபடும்போது வெளவலால், மயில் பருந்து போன்றன அடிப்பட்டாலும் உடையாத அளவுக்குப் பலமான கண்ணாடி அது. நான் அணிந்திருந்த சீருடையில் தீப்பிடிக்காத பாதுகாப்பு ஏற்பாடு இருந்ததால் எனக்கு எரிகாயம் ஏற்படவில்லை. எனது உதவியாளர் எனது இருக்கையின் கீழ் விழுந்து கிடந்தார். அவரை இழுத்து எடுத்தேன். அவரால் நடக்க முடியவில்லை. அவரைத் தூக்கியபடி மரங்களுக்குள் சென்று நிலையெடுத்தேன். அந்த வானூர்தியில் ஆயிரத்து 800 லீற்றர் பெற்றோல் இருந்தது. அது வெடித்து எரிவதற்குள் அந்த இடத்தை விட்டு ஓடிவிடவேண்டும். என்னுடன் இருந்த சகாவை இழுத்துக்கொண்டு ஓடியபோது வானூர்தி வெடித்துச் சிதறியது.

வானூர்தியைத் தாக்கியது புலிகள்தான் என்று பின்னர் தெரியவந்தது. படையினரின் சீருடையில் முகாமுக்குள் ஊடுருவியிருந்து ஆர்.பி.ஜி. அடித்ததனர் என்று பின்னர் தெரியவந்தது. அந்த இடத்தில் புலிகளா படையினரா இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாத நிலை இருந்தது. எங்கள் இருவரையும் படையினர் டிரக்ரர் ஒன்றில் ஏற்றி படைத்துறை மருத்துவப் பிரிவில் இறக்கினார்கள். அப்போது புலிகள் சரமாரியாக எறிகணை அடித்தார்கள். நான் பதுங்கு குழி ஒன்றுக்குள் ஒதுங்கிக்கொண்டேன். அங்கு கிடந்த சாக்கு ஒன்றை எடுத்துத் தலையைச் சுற்றிக் கட்டிக்கொண்டேன். செல் துகள்கள் படாதிருக்கவே அவ்வாறு செய்தேன்.

பின்னர் 6 மணியளவில் வானூர்தி ஒன்று வந்தது. அதில் ஏற்றி அனுராதபுரத்துக்கு அனுப்பினார்கள். எனது வலது காலில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் வானூர்தியில் அனுராதபுரத்திலிருந்து ஒலுமடுவரை பயணம் செய்தபோது அதில் ஏற்றப்பட்ட பொருள்களுக்குப் பொறுப்பாக வந்தவர் நான் அவசரத்தில் அதை மேல் எழுப்பும் போது திரும்பவும் அதில் ஏறவில்லை. அந்தச் சூழலைப் புரிந்துகொண்டு காட்டுக்குள் ஓடித் தப்பினார் என்று பின்னர் அறிந்தேன். 2001ஆம் ஆண்டில் வான்படையில் இருந்து நான் ஓய்வு பெற்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சம் தரும் தமிழர் பெருக்கம்

வி.அருணாசலம்

மட்டக்களப்பிலுள்ள எனது நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பெடுத்தார். தனக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது என்றார். அதேநேரம் அவர் ஒரு புள்ளி விவரத் தகவலையும் கூறினார். தனக்கு மகள் பிறந்த அன்றிரவு மட்டக்களப்புப் போதனா மருத்துவமனையில் **51** குழந்தைகள் பிறந்தன என்றும் அதில் தனது மகளும் இன்னொரு பிள்ளையும் மாத்திரமே தமிழ்த் தம்பதிகளுக்குப் பிறந்த பிள்ளைகள் என்றும் ஏனைய **49** குழந்தைகளும் முஸ்லிம், தம்பதிகளுக்குப் பிறந்த குழந்தைகள் என்றும் கூறினார்.

இந்த நிலை தற்போது மேலும் அதிகரித்திருக்கிறது. முஸ்லிம்களுக்கு அடுத்தபடியான இனப்பெருக்க வீதத்தைக் கொண்டிருப்பவர்கள் சிங்களவர்கள். இலங்கையின் சனத்தொகையில் **80** வீதம் வரை அவர்கள் இருப்பதால் அது சாத்தியப்படுகிறது. பிறப்பு வீதம் மாத்திரமல்ல இலங்கையில் இறப்புவீதமும் அதிகமாகவுள்ள இனம் முஸ்லிம்களே. பிறப்பு பற்றிக் கவனிக்கப்படும் போது அதுவும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

தமிழரின் இனப்பெருக்கம் அச்சம் தரும் வகையில் குறைந்துவிட்டது. அதை உடனடியாக அதிகரிக்கச் செய்யும் நிலமையோ, அதற்கான புறச்சூழல்களோ, அதற்கான ஆதரவோ தமிழ்ச் சமூகத்தில் இல்லை. அதற்குத் தமிழ்ச் சமூகம் சாரந்த குறைபாடுகளே காரணம். இதை நிவர்த்தி செய்யத் தமிழ்ச் சமூகம் மீள் உருவாக்கப்பட வேண்டும்.

**1983க்குப் பின்பான வெளியேற்றம்**

**1956, 1958, 1977** ஆகிய காலப்பகுதிகளில் இலங்கையில் இனக்கலவரங்கள் இடம்பெற்ற போதும் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறவில்லை. **1983** கலவரத்தின் பின்னர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் போன்ற அரசியல் தலைவர்களும் கொழும்பில் வாழ்ந்த வசதியான தமிழர்களும் நாட்டைவிட்டு வெளியேறினர். அப்போதைய அரச தலைவர் ஜெ.ஆர்.ஜெயவர்த்தன எதிர்பார்த்ததுபோல அது நடந்தது. தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவது அவர்களின் எண்ணிக்கையை குறைக்க உதவும் அது எதிர்காலத்தில் அவர்கள் தொடர்பான சிக்கல்களைச் சமாளிக்க உதவும் என்று ஜெ.ஆர். ஜெவர்த்தன கருதினார். இது விடயத்தில் ஜெ.ஆர். நினைத்ததற்குச் சார்பாகவே தமிழர்களும் முடிவெடுத்தார்கள்.

**1983** காலப்பகுதியிலிருந்து இன்றுவரை தமிழர்கள் இலங்கையைவிட்டு ஓடிக்கொண்டே இருக்கின்றனர். தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதைச் சிங்கள ஆட்சியாளர்கள் ஒரு போதும் தடுக்கவில்லை. போர் முடிவுற்றதும் இந்த நாட்டில் இருக்கமுடியாது என்ற மனநிலையுடன் கப்பல் மூலம் சட்டபூர்வமற்ற வகையில் ஆஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகளுக்குச் செல்ல முயன்றவர்களை இலங்கைக் கடற்படை தடுக்காது விட்டிருந்தது. இதற்கு மகிந்த அரசின் அரசியல்வாதிகள் சிலரின் அனுசரணை இருந்தது என்று செய்திகள் அடிபட்டன.

**பட்டதாரிகளின் வெளியேற்றம்**

இலங்கையில் மருத்துவம், பொறியியல் உட்படப் பல துறைகளிலும் இலவசக் கல்வியைப் பெற்றுப் பட்டப் படிப்பை முடித்தவர்கள் தமது படிப்புத் தகுதியை வைத்து வெளிநாடுகளுக்குச் சென்றபோதுகூட இலங்கை அரசு அதைக் கண்டும் காணாதுவிட்டது. இலவசக் கல்வியைப் பெற்றுப் பட்டம் பெற்றவர்கள் இந்த நாட்டில் சேவையாற்ற வேண்டும். இல்லாதுவிட்டால் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பு இலவசக் கல்விக்கான கட்டணத்தை அரசுக்குச் செலுத்த வேண்டும் என்று அரசதலைவராக மைத்திரிபால சிறிசேன கூறி வந்தார். ஆனால் அது நடைமுறையில் சாத்தியப்படவில்லை. சிங்கள ஆட்சியார்களைப் பொறுத்தவரை தமிழர் ஒருவரை வெளிநாடு செல்ல அனுமதித்தால் அவர் அங்கு சென்று தன்னை நிலைப்படுத்திக்கொண்டதும் இங்கிருந்து தனது குடும்பத்தையும் பிடுங்கி எடுப்பார்கள் என்று நம்பினார்கள். இது விடயத்திலும் பட்டம் பெற்றவர்கள் ஆட்சியாளர்கள் நினைத்ததுபோலவே நடந்துகொண்டார்கள். ஆனால் ஏனைய சிறுபான்மை இனங்களான முஸ்லிம்களோ மலையகத் தமிழரோ இவ்வாறு எந்தக் காரணங்களாலும் நாட்டைவிட்டு வெளியேறவில்லை. அவ்வாறு மிக மிகச் சொற்பத் தொகையினர் மட்டுமே வெளியேறினர். இதனால் அவர்களின் இன விருத்தி, இனப் பரம்பல் என்பன உறுதியாகவே உள்ளன.

**வேளாளரின் இனவிருத்தியில் வீழ்ச்சி**

**1983**ஆம் ஆண்டுக்கு முன்பான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்து வேளாளர்களே கொழும்பில் உத்தியோகத்திலும் வணிக நடவடிக்கைகளிலும் அதிகம் ஈடுபட்டிருந்தனர். அவர்களே முதலில் வெளிநாடுகளை நோக்கிச் செல்லக்கூடிய வாய்ப்பிருந்தது. இதனால் சாதிய அடிப்படையில் இங்கு வேளாளர்களின் பரம்பல் குறையத் தொடங்கியது. இதைவிட இவர்கள் நீண்ட காலமாக (போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயர் காலத்தில்) விவசாய நடவடிக்கைகளை கைவிட்டு அரச உத்தியோகத்தில் கவனம் செலுத்தியவர்கள். இதனால் உடற்பலத்தை முதலில் இழந்தார்கள். இதைவிட கோவில் விடயத்தில் பிராமணர்களுக்கு அடுத்தபடியாகத் தம்மை நினைத்துக்கொண்டதால் (வர்ணாச்சிரம தர்மத்தின் பிரகாரம் வேளாளரும் ஏனைய சாதிகக்காரரும் சூத்திரர்களே) வருடத்தில் **6** மாதங்களாவது விரதங்களில் கழிப்பதால் போசாக்கான உணவையும் இழந்தார்கள். இதுவும் அவர்களின் பிறப்பு வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

**முதிர்கன்னிகள் மற்றும் திருமணத்தில் தாமதம்**

யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட காலமாகவே முதிர் கன்னிகளின் தொகை வேளாளர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகிறது. இதற்குச் சாதியும் சீதனம் வழங்குவதிலுள்ள பின்னடைவுகளுமே முக்கிய காரணங்கள். இதைவிட சாதகப் பொருத்தம் பார்ப்பதிலுள்ள பிரச்சினைகள் எனப் பெண்களின் திருமண வயது எகிறிச்செல்வதால் அதன் பின்னர் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளையே பெறுவதற்கு அவர்களால் முடிகிறது. இத்தகைய தொடர் பிறப்புவீதப் பாதிப்பின் காரணமாகவே தற்போது யாழ் குடநாட்டில் வேளாளர்களின் தொகை குறைந்திருக்கிறது.


**ஊனமுற்றோர் தொகை அதிகம்**

வயதாகித் திருமணம் செய்துகொள்வதாலும் உறவுக்காரர்களைத் திருமணம் செய்துகொள்வதாலும் ஊனமுற்ற அல்லது நோயுற்ற குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது. இதனால் ஊனமுற்ற குழந்தைகளைப் பெற்றுத் தமது மிகுதி வாழ்க்கையையும் சந்தோசமாகக் கழிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்தில் மட்டும் **5** குடும்பங்களுக்கு ஒருவர் பிறப்பால் ஊனமுற்றவராக இருக்கிறார் என்று ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் ஒருவர் தெரிவித்தார். இவ்வாறான பிள்ளைகளை ஊனமுற்ற பிள்ளகளுக்குக் கல்வி புகட்டும் சிவபூமி போன்ற நிலையங்களுக்குக் கூட அனுப்பாது தமது குடும்ப கௌரவத்தை பேணிக்கொள்வதற்காக அந்தப் பிள்ளைகளை அறைகளில் பூட்டி வைத்திருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

**போரில் இறந்த இளைஞர், யுவதிகள்**

ஒரு சிறிய இனம் **30** வருட கால ஆயுதப் போராட்டத்துக்கு முகங்கொடுத்ததும் ஏகப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. இதைச் சமூகச் செயற்பாட்டாளர்களோ மதத் தலைவர்களோ அரசியல்வாதிகளோ கண்டுகொள்வதில்லை. போராளிகளாக இருந்தவர்கள், ஊனமுற்றவர்கள் தமிழ்ச் சமூகத்தில் ஏற்கனவேயுள்ள சாதிகளுக்கு மேலதிகமாகத் தீண்டப்படாத புதுச் சாதியாகியி



“ சிங்கள ஆட்சியார்களைப் பொறுத்தவரை தமிழர் ஒருவரை வெளி நாடு செல்ல அனுமதித்தால் அவர் அங்கு சென்று தன்னை நிலைப்படுத்திக்கொண்டதும் இங்கிருந்து தனது குடும்பத்தையும் பிடுங்கி எடுப்பார்கள் என்று நம்பினார்கள் ”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோவா வறை...!

இந்த வாரச் சமையல் பகுதியில் கோவாவில் வறை வறுப் பது எவ்வாறு என்று பார்ப்போம். கோவா என்பது இலைக ளின் சேர்க்கையால் ஆனதாகையால் வறைக்கு ஏற்றது. வறை தவிர வெள்ளைக்கறி மற்றும் உறைப்புக் குழம்பின் சேர்க்கை என்று பல விதங்களில் கோவாவை எம்மவர்கள் பயன்படுத்தி னாலும் கோவா வறையே சிறப்பானது.

கோவாவும் வறைக்கே அதிக ருசியும் சேர்க்கிறது. இலைக் கறியான கோவாவை உற்பத்தி செய்யும்போது அது அதிக நோய்த் தாக்கங்களுக்கு முகங்கொடுக்கும் வழக்கமிருப்பதால் செய்கையாளர்கள் அதற்கு அதிக கிருமிநாசினிகளை விசிறுகி றார்கள் என்று சொல்லப்படுகிறது. அதனால் இலைகளின் சேர்க்கையால் கூடாரம்போன்றிருக்கும் கோவாவுக்குள் கிருமி நாசினிகளின் தாக்கம் அதிகம் இருக்கும் என்கிற அச்சமும் பலருக்கும் இருக்கிறது. ஆனாலும் கோவா வில் இருக்கின்ற ஊட்டத்தால் அது தவிர்க்கப்பட முடியாததாயும் இருக்கிறது. முருங்கை இலை, முசுட்டை, முல்லை, மொசு மொசுக்கை என வேலிகளில் வளர்ந்திருந்த பழங்கால இலை வகைகளைக் கை விட்டுவிட்ட இன்றைய மனிதர்களுக்கு இலைக் கறியாகக் கைகொடுப் பதற்குக் கோவா ஆவது இருப்பது அதன் சிற ப்பே.



அந்த வகையில் கோவாவில் வறை வறுப்பது எவ்வாறு என்று இந்த முறை பார் ப்போம்.

**தேவையானவை...**

கோவா அரைக் கிலோ, தேங் காய்த் துருவல் - பாதித் தேங்காயில் அரைவாசி, செத்தல் மிளகாய்கள் - 4, பெரிய வெங்காயம் 2, மிளகாய்த் தூள் அரை மேசைக்கரண்டி, கடுகு, சீரகம் ஆகியன ஒரு தேக்கரண்டி, மஞ்சள்தூள் அரைத்தேக்கரண்டி, மரக்கறி எண்ணெய், உப்பு ஆகியன தேவைக்கேற்ப.

**எப்படி வறையாக்குவது...?**

கோவாவைத் துருவலாக்கிக் கொள்ளுங்கள். உணவகங் களில் பெருமளவில் வறுப்பவர்கள் சுளகில் போட்டுப் பேணிச் சுண்டால் குத்தியும் துருவலாக்குகிறார்கள். கோவாத் துரு வலை உப்பு நீரில் நன்கு கழுவிக்கொள்ளுங்கள். கழுவி வடி கட்டியதும் அதனுடன் தூள் உப்பையும், மஞ்சள் தூளையும் சேர்த்துப் பிரட்டிக்கொள்ளுங்கள். தாச்சி ஒன்றுக்குள் மரக்கறி எண்ணெய்யை விட்டு கடுகு, சீரகம், நறுக்கிய செத்தல் மிளகாய்கள், வெங்காயம் ஆகியவற்றைப்போட்டுத் தழித்துக் கொள்ளுங்கள். தாழித்ததும் கோவாத் துருவலைச் சேர்த்துச் சிறிதுநேரம் மெல்லிய சூட்டில் மூடிக்கொள்ளுங்கள்.

கோவா அவிந்த பின்னர் அது வதங்கும் வாசைன வரும் போது தேய்காய்த் துருவலைச் சேருங்கள். நன்கு கிளறிக் கொள்ளுங்கள். கடைசியாகக் கறிவேப்பிலையைச் சேர்த்து இறக்குங்கள். சுவையான கோவா வறை தயார்.

## அச்சம்...

ருக்கிறார்கள்.

இலங்கைப் படைகளால் கொல்லப்பட்டவர்கள் இந்திய படைகளால் கொல்பப்பட்டவர்கள் இயக்க முரண்பாடுகளால் கொல்லப்பட்டவர்கள் எனத் தமிழ் இளம் சந்ததி ஆண் பெண் வேறுபாடின்றி அழிக்கப் பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் படையினரின் சுற்றி வளைப்புகளின் போது **15-35** வயதுக்குட்பட்ட ஆண்கள் தேடி அழிக்கப்பட்டனர். கொல்லப்பட்ட இளைஞர், யுவதிகளின் இனப்பெருக்க வாய்ப்பு இல் லாமல்போனதால் தமிழரின் இனப்பெருக்கத்தில் மேலும் பின்னடைவு ஏற்பட்டது.

**விதவைகிளின் மறுமணம்**

போர்க் காலத்திலும் அது முடிந்த பின்னரும் அதிகம் பாதிக்கப்பட்ட வர்கள் இளம் விதவைகளே. காரணமின்றியே பல பெண்களின் கண வர்கள் கொல்லப்பட்டடார்கள். விதவைகளை மறுமணம் செய்வதற்கு எந்தவொரு அமைப்பும் சமூக மட்டத்தில் இல்லை. திருமண சேவை கள் பல தமிழர் மத்தியில் முளைத்துள்ள போதும் அவை மறுமணம் பற்றிச் சிந்திப்பதில்லை. ஒரு வியாபாரமாக சீதனத்தை மையாமாக வைத்து தம்மை வளப்படுத்திக்கொள்ளும் நிறுவனங்களாகவே அவை காணப்படுகின்றன.

தமிழரின் இனப்பெருக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் வருடா வருடம் பல தொடக்கநிலைப் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன. யாழ் நகரில் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் மாணவர்கள் இல்லாமல் அண்மையில் மூடப்படுகிறது. இந்தப் போக்கு மாற வேண்டும்.

தமிழரின் இனப்பெருக்கத்தில் மாற்றம் நிகழவேண்டுமானால் சமூக ரீதியில் பெரியளவில் சீர்திருத்தம் ஏற்படவேண்டும். பிரதேச வாதம் மதம் சாதி ஆகிய கட்டமைப்புகள் உடைக்கப்பட்டு பழமை வாதங்கள் தூக்கியெறியப்பட்டு சமூக மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட் டாலேயே இனிவரும் காலங்களிலாவது தமிழ் இனம் தழைத்தோங்கும். இதனை யார் செய்யப்போகிறார்கள்?

---

சுருங்கி
துவண்டு கிடக்கும்
மங்கிய பச்சை நடுவினிலும்
ஒன்றும் இரண்டுமாய்
பூத்திருக்கிறது
தொட்டாற் சுருங்கி

தந்தபடியே
இருக்கிறது
நிலவு

ஏந்திக்
கொள்ள
குளமாகு


உதிர
மறுப்பதனால்
எத்தனை கிழிசல்கள்
வாழை இலையில்

பகலை விட
அதிகாலையும்

இரவை விட
அந்தியும்

அழகு


இரண்டும்
கொஞ்ச நேரம்



வாசுதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருக்கிறதெண்டு காட்டிற வேலைதானோ?



கதிரேசன் காத்தவராயன்

கோயிலடியிலை கதைச்சுக்கொண்டிருந்துபோட்டு பூசை தொடங்கினதாலை நான் போட்டு திரும்பி வரேக்கையும் முருகேசர் கனகர் தம்பராக்களின்ரை கதை முடியயில்லை. வல்லியம் மான் சேந்திருந்தார். எல்லாரும் சிரிச்சபடியிருக்க நான் போய் இருந்து கொண்டு "என்னப்பா சிரிப்பு பலமாக் கிடக்குது?" எண்டு கதையைத் தொடக்கினன்.

"அதோ... வல்லியம்மான்ரை கதைக்குச் சிரிக்காமலுக்கிருக் கலாமோ?" எண்டார் முருகேசர். "அது கதிரேசண்ணை! உந்தச் சம யத் தலைவர்மாற்றை கதையள்தான் போகுது... அதிலைதான் வல் லியம்மான் இப்ப பழக்கிற நாம்பனுகளுக்கு குறி சுடலாமோ? இல் லையோ? எண்டதிலைதான் நிக்கிறம்" எண்டார் கனகர். "அதுக் கென்னப்பா தைப்பூசத்துக்கு குறி வைக்கிறதுதானே நடைமுறை?" எண்டன் நான்.

"எடப்பா கதிரேசு நீ எங்கையிருக்கிறாய்? சுடக்கூடாதாமல்லே... சுட்டால் வழக்காம்?" எண்டார் எரிச்சலோடை வல்லியம்மான். "ஓஓஓ... பேப்பரிலை செய்தி வந்ததல்லே...! வல்லியம்மான் நீங்கள் அப்ப போறது தெளிவாயிட்டுது என்ன?" எண்டு சொல்ல எல்லாரும் சிரிச்சினம். (வல்லியம்மானுக்கு குறி சுடுகிறது ஒரு கலை எண்டது பிரபலம்.) "அட போடா கதிரேசு...! இந்த வல்லி இவ்வளவு காலமும் போகாத இடம் அதுதான்... எனியும் போக மாட்டன்... மாட்டுக் காறர்தான் போவினம்..." எண்டு சிரிச்சார் வல்லியம்மான்.

"சுட்டது ஆரெண்ட பிடிச்சால் என்னம்மான் செய்வியள்?" எண் டார் கனகர் கேலியாய். "மாடு பாவமெண்டது சரிதான்.. மனிசர் பாவ மில்லையோ எண்டு கேப்பன் பாருங்கோ கேள்வி, எல்லாரும் தலை யைத் தொங்க விடுவினம் பாருங்கோவன்... இந்த வல்லியை என் னண்டு நினைச்சியள்...?" எண்டு சீறினார் வல்லியம்மான். "என்ன கேள்வியை அம்மான் கேக்கப்போறியள்?" எண்டார் தம்பர் ஆவலோடை.

"அதோ... உந்த லவுட்ஸ்பீக்கருளாலை காது கிழியுது... சிவ னேயெண்டு அருமை பெருமையாய் வாற நித்திரை குழம்புது.... அதுகள் மட்டுமே! மிருக சாதியள் குடிக்க தண்ணியில்லை குளத்தை மூடியிருக்கிறியள்... இழுத்துவிடுவன் கண்டியளோ இன்னும் கனக்கக் கிடக்குது.... வரட்டுக்கன் கேக்கிறனோ இல்லையோ பாப்பி யள்தானே?" எண்டு கொதிச்சார் வல்லியம்மான். புது வரிச ஞானமோ என்னவோ முருகேசருக்கு, "இஞ்சார் அம்மான்! நீங்கள் செய்யிறதும் பாவந்தான்.. கதையை விடுங்கோ" எண்டு அந்தக் கதைக்கு முடிப்பு வைச்சார். வல்லியர் தொண்டையைச் செருமிப்போட்டு பேசாமரிருந்தது ஆறுதலாயிருந்துது.

"அது கிடக்கட்டும் இப்ப பொங்கலுக்கு அரிசி கிடைக்குமோ கிடைக் காதோ?" எண்டார் கனகர். "இஞ்சார் கனகு உதைவிட வாய்க்கரிசி கிடைக்குமோ எண்டு கேட்டிருந்தியெண்டால் பிரயோசனமாயிருந்தி ருக்கும் என்ன?" எண்டார் முருகேசர். "நிலமை அப்பிடியல்லே போகுது? வெட்டு வேளாமையை மழை குழப்புமெண்டலலே பயப்பி டுகினம்" எண்டார் தம்பர் கவலையோடை. "உண்மைதானப்பா... விளைச்சலே குறைவு.. அதுக்குள்ள பயிரழிவுமெண்டால் என்னதான் செய்யிறது? பாணுக்கும் வழியில்லை..." எண்டார் அதிலையிருந்த ஒராள்.

"அதுக்குத்தான், பயங்கரவாதத்தை முறியடிச்சவையை வைச்சு விவசாயம் செய்யிறதாமல்லே... அவங்கள் கெட்டிக்காறரல்லே? வெள்ளமெண்டாலென்ன? வறட்சியெண்டாலென்ன? வெல்லலாம் பாருங்கோ..." எண்டு முருகேசர் சொல்ல வல்லியம்மான் தணிக்கைச் சொல்லுகளை அள்ளிக் கொட்டிப்போட்டு எழும்பிப் போட்டார். நாங்கள் அதுக்கும் சிரிச்சம்.

"எல்லாம் நெடுகவும் நான் சொல்லுகிறமாதிரித்தான்.... இருக்கிற இடங்கள் உப்பிடியிப்பிடிக் கனக்க யோசினையளைக் கொண்டு வரத் தான் செய்யும்... நாங்கள்தான் காதிலை வடிகட்டவேணும் கண்டி யளோ? தங்களை சனம் மறக்கக்கூடாதெண்டதிலை வலு கவனமா யல்லே எல்லாரும் கதைக்க வெளிக்கிட்டிருக்கினம்" எண்ட நான் சொன்னதுக்கு தலையை மட்டும் ஆட்டிச்சினம்.

"அறிக்கையளும் செய்தியளும் இல்லையெண்டால் விசர் பிடிச்சி ருக்கும் என்ன?" எண்டார் கனகர். "உண்மைதானப்பா கனகு... அதுகள்தானே சிரிக்கக்கூடினதாயிருக்குதுகள்... துன்பங்களை மறக்க நல்லதல்லே?" எண்டுகொண்டு வீட்டை வந்திட்டன்.


---

## மீண்டும் முரளியின் படம்...!

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீர ரான சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முர ளிதரனின் வாழ்க்கையைப் பேசும் திரைப் படப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட் டுள்ளன. இந்தத் திரைப்படத்தில் முத் தையா முரளிதரனின் பாத்திரத்தைத் தேவ் படேல் ஏற்று நடிக்கவுள்ளார் என்று இந்திய ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள் ளன. முத்தையா முரளிதரனின் கிரிக்கெட் சாதனையைப் பேசும் விதத்தில் எடுக்கப்படு கின்ற இந்தப் படம் பல்வேறு எதிர்ப்புகளால் முடங்கிக் கிடந்த நிலையில் இப்போது அதை மீண்டும் கையில் எடுத்திருக்கிறது திரைப்படக்குழு.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன் னாள் வீரரான முத்தையா முரளிதரனின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட இந்தப் படத்துக்கு '800' என்று தலைப்பிட்டு முத்தையா முரளிதரனின் கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதி நடிப்பதாக அறிவிக்கப் பட்டிருந்த நிலையில் அதற்கான முதல் பார்வை சுவரொட்டிகளும் வெளியிடப் பட்டன. முத்தையா முரளிதரன் இலங்கை சார்பில் விளையாடி வீரரே தவிர அவர் உள்நாட்டுப்போரில் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகம் தொடர்பிலோ, தனது பூர்வீகமான மலையகத் தமிழர்கள் குறித்தோ எவ்வித கரிசனையையும் கொண்டிருக்கவில்லை என்பதால் அவருடைய பாத்திரத்தில் நடிப் பதற்கு விஜய்சேதுபதிக்கு எதிர்ப்புகள் எழுந்தன. சமூக வலைதளங்களில் எழுந்த தொடர் எதிர்ப்பலை மற்றும் தமிழக திரைப் பட நட்சத்திரங்களிடம் எழுந்த எதிர்ப்புக் காரணமாக, அந்தப் படத்திலிருந்து விலகு வதாக விஜய் சேதுபதி அறிவித்தார்.

அதன் பிறகு இப்படம் குறித்த தகவல்கள் எதையும் வெளியிடாமல் படக்குழு அமைதி காத்தது. படமும் முடங்கிப்போனது. இந்த நிலையில்தான் இந்தப் படத்தில் முத்தையா முரளிதரன் கதாபாத்திரத்தில் 'ஸ்லம்டாக் மில்லியனர்' படம் மூலம் பிரபலமான தேவ் படேல் நடிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஸ்ரீபதி ரங்கசாமி இயக்கும் இந்தப் படத்தை பெரும் பொருட் செலவில் தர்மோசர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது என்றும் சொல்லப்படு கிறது. இதற்குத் தமிழகத்திலும் தமிழ் மக்கள் மத்தியிலும் எப்படிப்பட்ட எதிர் வினையாற்றப்படும் என்பதைப் பொறுத்தி ருந்துதான் பார்க்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்குள்...

39



தர்மராசா

## தனிப்பட்ட தேவைகளுக்குச் சிறை வாகனங்களைப் பயன்படுத்தும் அதிகாரிகள்

சிறைச்சாலைப் பேருந்தில் அனுராதபுரத்தை நோக்கிச் செல்லும்போது திருகோணமலை நகர் முழுதும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுத் புரட்சிப் பாடல்கள் ஒலிபெருக்கியில் ஒலிக்க ஏராளமான மக்கள் திரண்டு நிற்பதைக் காண முடிந்தது. மறுநாள் (19.3.2002) பொங்கு தமிழ் நிகழ்வு திருகோணமலையில் நடக்கவிருந்தது. மாலை 5.30 மணியளவில் அனுராதபுரச் சிறைச்சாலையைச் சென்றடைந்தோம். 20.3.2002 அன்று அதிகாலை 3.30 மணியளவில் எழுந்து போகம்பரைச் சிறைச்சாலைக்குப் போகத் தயாரானோம்.

சிறை அறைகளில் இருந்து பல மணிநேரத்துக்கு முன்பே எங்களை வெளியே எடுத்தபோதும் காலை 6.30 மணியளவிலேயே அனுபுரத்திலிருந்து பேருந்து புறப்பட்டது. இந்தப் பயணம் முதல் நாள் போவதாக எனக்கு அறிவிக்கப்பட்டு நான் தயாராகியிருந்தேன். எனினும் அது மறுநாளுக்குப் பிற்போடப்பட்டது. அதற்குக் காரணம் ஜெயிலர் ஒருவரின் தாயோ, தந்தையோ பேராதனையில் இறந்துவிட்டதால் அந்தச் செத்த வீட்டுக்குச் சிறை ஊழியர்கள் பலர் போகவேண்டியிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்காக என்னைச் சிறைக்குப் கொண்டுசெல்வதற்காக அன்று பெரிய பேருந்து ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார்கள். உண்மையில் என்னைக் கொண்டு செல்வதற்காக அல்ல அந்தப் பேருந்து சிறைச்சாலை ஊழியர்கள் செத்தவீட்டுக்குப் பயணிப்பதற்கு வசதியாகவே அந்தப் பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் காலை 6.30 மணிவரையில் அந்தப் பேருந்தில் காத்திருந்தபோதிலும் யாரும் செத்தவீட்டுக்குச் செல்வதற்காக வரவில்லை. எனினும் ஏற்பாட்டின்படி நானும் தீங்கியல் கைதி ஒருவரும் போகம்பரைக்கு அனுப்பப்பட்டோம். இருவருக்கும் கைவிலங்கு போடப்பட்டது. அந்த எஸ்கொட்டுக்குப் பொறுப்பாக வந்த அதிகாரி கடைசி நேரத்தில் இப்படிக் கூறினார், ''அவன்ர செத்த வீட்டுக்கு யார்தான் போவார்கள் அவன் ஒரு நாய் தானே'' என்று.

**சிறைச் சாலை வாகனங்களைத் தமது குடும்பப் பயணத்துக்குப் பயன்படுத்துவதாக இருந்தால் சாட்டுக்கு ஒரு கைதியை வேறொரு சிறைச்சாலைக்குக் கொண்டு போவதாக எழுதி விட்டு அதைக் காரணம் காட்டிச் சிலர் தமது அலுவல்களையும் முடிப்பதுண்டு**

இவ்வாறு கைதிகளுக்கான பயணப் பேருந்தைச் சிறைச்சாலை ஊழியர்கள் தமது சொந்தத் தேவைகளுக்கும் பயன்படுத்துவதுண்டு. சிறைச்சாலை வாகனங்களைத் தமது குடும்பப் பயணத்துக்குப் பயன்படுத்துவதாக இருந்தால் சாட்டுக்கு ஒரு கைதியை வேறொரு சிறைச்சாலைக்குக் கொண்டு போவதாக எழுதி விட்டு அதைக் காரணம் காட்டிச் சிலர் தமது அலுவல்களையும் முடிப்பதுண்டு. இதெல்லாம் அவர்களின் தொழில் இரகசியம்.

20.3.2002இல் தேர்தல் நடந்ததால் எல்லா இடங்களிலும் தேர்தல் பதாதைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அனுராதபுரத்திலிருந்து கண்டி வரை ஐக்கிய தேசியக் கட்சியின் பச்சைக் கொடியை அதிகம் காணமுடிந்தது. மாத்தளைக்கு அருகிலுள்ள அலவத்துகொட எனுமிடத்தில் பேருந்து நிறுத்தப்பட்டது. எமக்குத் தேநீர் வாங்கித் தந்தார்கள். மிகவும் சுவையான தேநீர் அது. நான் சிறைக்கு வந்தபின் குடித்த தரமான தேநீர் அது. தரமான தேயிலைத்தூளை மலையகப் பகுதிகளில் இருந்து வடியுண்ட சுத்தமான நீருடன் சேர்த்துக் கொதிக்க வைத்துத் தேநீர் தயாரிக்கும்போது அதன் சுவையே தனி.

ஏற்கனவே எனக்குக் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்ட ஒரு வழக்குக்குக் கண்டி நீதிமன்றம் 7 மாதத் தவணை போட்டிருந்தது. அன்றைய நாள் 20.3.2002 என்னை உடனடியாகவே கண்டி மேல் நீதிமன்றத்துக்குக் கொண்டு போவதற்கு ஏற்பாடுகள் செய்தார்கள். பூசா செல்லவிருந்த பேருந்து என்னை ஏற்றிக்கொண்டு நீதிமன்றம் சென்றது. அங்கு சென்றதும் அன்று நீதிமன்றம் நடத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டு 25ஆம் திகதி தவணை போடப்பட்டது. அங்கு சென்று பேருந்தில் காத்திருந்தபோது இதைச் சிறைச்சாலை ஊழியர் ஒருவர் வந்து கூறினார். என்னை மீண்டும் சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் விடுமாறு பூசா செல்லவிருந்த பேருந்துத் தரப்பிடம் என்னுடன் வந்த அதிகாரிகள் கேட்டபோது அந்த எஸ்கொட்டுக்குப் பொறுப்பாக இருந்த ஜெயிலர் அதற்குச் சம்மதிக்கவில்லை.

போகம்பரைச் சிறையிலிருந்த கல்குடாவைச் சேர்ந்த கைதி டயஸ் என்பவரின் தந்தையார் 26.3.2002 அன்று இறந்துவிட்டார் என்று செய்தி கிடைத்தது. இறப்பு வீட்டுக்கு அவரை அழைத்துச் செல்லும் ஏற் பாட்டின்படி அவரை பதுளைச் சிறைக்கு மாற்றி அங்கிருந்து வெலிக்கந்தைக்கு மாற்றுவதாகக் கூறினார்கள். இவ்வாறான எஸ்கொட்டுக்குக் காவல் துறையினரின் அனுமதி தேவை. வெலிகந்தையிலிருந்து கல்குடா வரை எஸ்கொட் கொடுக்கமுடியாது என்று காவல்துறையினர் கைவிரித்ததால் அவர் மீண்டும் சிறைக்குள் வந்தார். வெலிக்கந்தையிலிருந்து கல்குடா செல்லும் வழியில் புலிகளின் ஆதிக்கம் இருந்தது. அவர்கள் தாக்கக்கூடும் என்ற பயம் அரச தரப்புக்கு இருந்தது. எல்லா இடங்களை விடவும் வெலிக்கந்தையிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்வது மிகவும் சிரமமானது. அந்தக் காலத்தில் அந்தப் பகுதி ஒரு கொலை வலயமாக இருந்தது.

29.3.2002 அன்று காலை 5.30 மணிக்குச் சிறை அறையைத் திறந்து களுத்துறைக்குப் போவதற்குத் தயாராகுமாறு கூறினார்கள். எனினும் 7.30 மணியளவில்தான் அங்கிருந்து பேருந்து புறப்பட்டது. 2001.1.20 அன்று களுத்துறையிலிருந்து பூசாவுக்கு ஏற்றப்பட்ட பின்னர் எனது லொக்கேசன் மீண்டும் களுத்துறைக்கு மாற்றப்பட்டது. அன்றுதான் பூசா சிறைச்சாலை பூட்டப்பட்டு அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகள் களுத்துறைக்கு ஏற்றப்பட்டனர். பகல் 2 மணியளவில் களுத்துறைக்குச் சென்றடைந்தோம். கண்டியிலிருந்து புறப்படும்போது புலிச் சந்தேகநபர்கள் 9 பேரும் அச்சுக் கைதிகள் சிலரும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு ஏற்றப்பட்ட இளம் பெண்கள் மூவரும் எமது பேருந்தில் இருந்தனர். அவர்கள் வெலிக்கடையில் இறங்கிய பின் நாம் தொடர்ந்தும் பயணித்தோம்...

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்கொலின்

# மனம் தொட்ட சினிமா




ஆய கலைகள் 64 இருந்தாலும் இன்றைக்கு அதிகளவானவர்களைக் கட்டிப்போட்டிருப்பது திரைப்படங்களே. விளையாட்டு என்றால் கால் பந்து, கிரிக்கெட்போல கலை என்றால் திரைப்படத்துக்குத்தான் பார்வையாளர்கள் அதிகமிருக்கிறார்கள்.

அடிமட்ட மனிதர்கள் தொடங்கிப் புத்திஜீவிகள், எழுத்தாளர்கள் என எல்லோரும் பார்க்கின்ற - கொண்டாடுகின்ற - விமர்சிக்கின்ற கலை திரைப்படங்களே. இதனால் தான் வருடம் முழுதும் திரைப்படங்களின் வருகையும் தோற்றமும் சலிக்காமல் நடக்கிறது. திரையுடன் நின்றுவிடாது சமூகத்துக்குள், எழுத்துச் சூழலுக்குள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், சமூக வலைத்தளங்கள், மரத்தடி மாநாடுகள், சந்தைகள் என எங்கெங்கு காணினும் வியாபித்துள்ளது சினிமா பற்றிய கதைகள். எனவே தவிர்க்க முடியாத சினிமா கடந்த காலத்தில் ஏற்படுத்திச் சென்ற தடத்தைக் கவனிப்பது அவசியம். அளவுகணக்கில்லாமல் பல திரைப்படங்கள் வெளியாகினாலும் அவை அனைத்தும் தொடர்ந்தும் பேசப்படுவதில்லை. நிலைப்பதில்லை. கால ஓட்டத்தில் நிலைப்பவை சில காத்திரமான படைப்புகளே அந்த வகையில் கடந்த வருடத்தில் மனதில் சிம்மாசனமிட்ட சில திரைப்படங்கள் குறித்துப் பார்க்கலாம்...!

**மாறா**

**2021** ஆம் ஆண்டில் தமிழில் வெளியான சிறந்த காதல் நாடகத் திரைப்படம் என்று தயக்கமின்றி மாறாவைச் சொல்ல முடியும். புதுமுக இயக்குநர் திலீப் குமார் இதை இயக்கியிருந்தார். மாதவன் மற்றும் சிரத்தா சிறீநாத் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தாலும் படத்தின் முக்கியமான காதல் கதை இவர்களுடையதாக இருக்கவில்லை. இவர்களுடைய காதலுக்கு ஈடாக அல்லது அதைத் தாண்டியதாக வெள்ளையா என்கிற மௌலியின் காதல் கதை ஈர்ப்பது படத்தின் பலம். காட்சியமைப்புகள், இசை என எல்லாமே படத்தைத் தூக்கி நிறுத்தும் தூண்கள். பாத்திர வார்ப்புகளும் படத்தின் பலம்.

மார்ட்டின் பிரகாட் எழுதி **2015**ஆம் ஆண்டில் வெளியாகிய மலையாளத் திரைப்படமான 'சார்லி' யின் மறு ஆக்கமாக இருந்தாலும் மனதைக் கவர்ந்த படம் மாறா. ஜிப்ரான் இசையமைக்க ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பைத் தினேஷ் கிருஷ்ணன், கார்த்திக் முத்துகுமார் மற்றும் புவன் சீனிவாசன் ஆகியோர் செய்திருப்பார்கள்.



**ஜெய் பீம்**

கடந்த ஆண்டில் கொடி கட்டிப் பறந்த படம் என்றால் அது 'ஜெய் பீம்'. அதுவரை சூர்யா நடித்துவந்த படங்களில் இருந்துவந்த நாயகத்தனம் இல்லாமலே அவருக்கும் அந்தப் படத்துக்கும் கிடைத்த வரவேற்பும் வெற்றியும் எதிர்வினைகளும் ஏராளம். காவல்துறையினரின் வன்முறையால் கொல்லப்பட்ட இருளர் இளைஞரின் குடும்பத்துக்கு தன்னுடைய சட்டப் போராட்டத்தின் மூலம் நீதியைப் பெற்றுக் கொடுத்த வழக்கறிஞராக இருந்து ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துருவின் வழக்காடும் போக்கில் அவிழும் பழங்குடி மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பொதுச் சமூகத்தின் பார்வைக்குக் காத்திரமாகப் பதிவு செய்தார் இயக்குநர் த.செ.ஞானவேல்.




**தேன்**

கணேஷ் விநாயகன் எழுதி இயக்கிய தேன் திரைப்படத்தில் தருண், அபர்ணதி ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். படிப்பறிவற்ற கிராமத்து இளைஞன் தனது மனைவிக்கு ஏற்பட்ட நோயைக் கண்டறிந்து முகங்கொடுக்கும் சவால்களை விவரிப்பதாக இருக்கிறது கதை. யதார்த்தமான காட்சியமைப்பு மற்றும் நடிப்பிற்காகப் பாராட்டுகளைப் பெற்ற தேனுக்கு சனத் பரத்வாஜ் இசையமைத்துள்ளார். குறிஞ்சி மலை வாழ் மக்களின் வாழ்க்கையை குறிஞ்சிக்குடி ஊரில் வசிக்கும் வேலு அவனது மனைவி பூங்கொடி ஆகிய பாத்திரங்களுடாகக் காட்டியிருப்பதும் திறன். பூங்கொடி நோய்க்குள்ளானதால் சிகிச்சைக்காக நகரத்துக்கு வந்ததும் அவர்களின் வாழ்க்கை மாறுகின்றது. வெளியுலகில் கொட்டிக்கிடக்கும் கயமைகளும், சூதுகளும் அந்த "வெள்ளை" மனிதர்களை ஆட்டிப்படைக்கின்றன.

மருத்துவமனையிலும் அரச அலுவலகங்களிலும் - 'ஆதார்' அட்டை, மருத்துவ அட்டை, காப்பீடு அட்டை ஆகியவை இல்லாமலும் அவற்றைப் பெற முனைகையிலும் எதிர்கொள்ளும் அவலநிலைமைகள் சித்திரிக்கப்படுகின்றன. நகர - படித்த மனிதர்களின் கையூட்டு, மனிதத்தன்மையற்ற நடத்தைகள் தெரிகின்றன. மாறாக மருத்துவமனையில், இரக்கமுள்ள மருத்துவரும் செவிலியும் உதவுவதும் காட்டப்படுகின்றது.

மலையில் அமைந்துள்ள தொழிற்சாலையின் இரசாயனக் கழிவுகள் ஆற்று நீருடன் கலப்பதால், அதைப் பயன்படுத்தும் மலைவாழ் மக்களிடம் நோய்த் தாக்கம் ஏற்படுவதையும் சிறுநீரகங்கள் பாதிப்புற்ற நிலையில் பலர் இருப்பதும். அதனாலேயே பூங்கொடி இறப்பதும் தெரிகிறது. வேலு மகளுடன் தனித்து, மனைவியைப் புதைப்பதுடன் படம் முடிகிறது. பின்னணியில் அவனது துயரத்தை வெளிப்படுத்தும் நாட்டுப்புறப் பாடல் சோகமாக ஒலிக்கிறது. தேன் சிறந்த படமாக மனதில் நிற்க இதுபோல பல சினிமா இலட்சணங்கள் நிறைந்து கிடக்கின்றன.



**'சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்'**

**2015** எடுக்கத் தொடங்கி **2018**இல் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு வந்த இந்தப் படம் திரையரங்குகளைத் தவிர்த்த காரணத்தால் **2021**இலேயே அதிகம் பேரால் கவனிக்கப்பட்டது. வசந்த் எஸ் சாய் இயக்கிய பாடல்களற்ற படம் இது. அசோக மித்திரன் (விமோசனம்), ஆதவன் (ஓட்டம்), ஜெயமோகன் (தேவகி சித்தியின் நாட்குறிப்பு) ஆகிய எழுத்தாளர்கள் எழுதிய மூன்று பெண்களை மையமாகக் கொண்ட சிறுகதைகள் இந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்



ஏராளமான குப்பைகள் மனதினுள்ளேயே குடிகொண்டிருக்கின்றன. அவற்றை அகற்றும் வரை அவற்றைத் தவிர்த்து வேறொன்றையும் எண்ணவே முடியாது. நாமும் நிறையக் குப்பைகளை அடுக்கிப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறோம். அவற்றையே எண்ணிக்கொண்டு அலைகிறோம். எதையுமே ஆக்கபூர்வமாகச் செய்யமுடியாது தவிக்கிறோம். அமைதி தேடி அலைகிறோம். இப்போது மீண்டும் வினாவிற்கு வருவோம். பழைய குப்பைகளை அகற்றுவதெப்படி?

மறத்தல் என்கிற ஒரு விடயம் சாத்தியமற்றது. மறக்க முயற்சிக்கும் ஒவ்வொரு முறையும் புதுப்பித்துக்கொள்கிறோம். எனவே மாற்று எண்ணங்களை இட்டு நிரப்புவதனூடாக பழையவற்றை ஓரங்கட்டிச் செல்வாக்கிழக்கச் செய்யமுடியும். முயலலாம் எனினும் அப்படியொரு முயற்சியை ஈடுபாட்டுடன் செய்கிறோமா? ஒரு வழியில் நாய்கள் துரத்துகின்றன என்று கொண்டால் மாற்று வழிகளில் செல்வதனூடாக நாயச்சத்திலிருந்து விடுபடுகிறோமே அவ்வாறுதான் எண்ணங்களுக்கும் மாற்றுவழிகளை இனங்காண வேண்டும்.

இந்த மாற்றானது சுயநம்பிக்கையுடன் எமது முழு ஆளுகைக்கு உட்பட்டிருப்பதை உறுதி செய்துகொள்வது அவசியமாகும். அவ்வாறில்லையெனில் நாம் எம்மையிழந்து பிறரின் தயவில் இயங்க வேண்டிய அவலம் ஏற்பட்டுவிடலாம். அது மிக ஆபத்தானது. பிறரது தயவு எனும்போது அவரும் ஒரு குப்பை காவியாக அல்லது அவர் தனக்கான வழித்தெரிவோடு இயங்குபவராக இருக்கலாம். அப்படியெனில் அவர் என்பது வேறு நான் என்பது வேறு என்பதை மறக்கக்கூடாது.

முன்னொரு பகுதியில் நான் இன்னொருவனாக இல்லை இன்னொருவன் நானாகவும் இல்லை என்கின்ற உண்மையை உணர்ந்துகொள்வதன் அவசியம் பற்றியதாகப் பகிர்ந்திருக்கிறோம். எனவேதான் பிறரில் தங்கியிருப்பதைத் தவிர்க்கவேண்டியுள்ளது. எனக்காக நான் மட்டுமே சிந்திக்கவும் செயற்படவும் முடியும். அதுவே உறுதியானது. நேர்விளைவுகளை வழங்கக்கூடியது என்பது எப்போதும் நினைவிலிருப்பது அவசியமானது.

செயற்பாடு என்று வரும்போது பிறது உதவிகள் தவிர்க்கப்பட முடியாததாக இருக்கலாம். ஆனால் எண்ணங்களில் அவ்வாறான நிலைப்பாடுகள் இருக்கமுடியாது. நானே எனக்காக எண்ணமுடியும். பிறனொருவன் எனக்காக எண்ண முடியாது என்கிற உண்மை முக்கியமானது. அவனது குப்பை வேறு எனது குப்பை வேறு. ஏப்படி இருவரும் இணைந்து அகற்றுவது சாத்தியமாகும்? அவனுக்கு நாய்களில் அச்சமில்லை. நாயுள்ள வீதியை அவன் பயன்படுத்தட்டும். அச்சத்தைச் சுமந்தபடி நானும் அவனோடு போவது அவசியமா?

செயல்களில் மட்டுமல்ல சிந்தனையாற்றலிலும் நபர்களுக்கிடையே வேறுபாடுகள் உண்டென்பது நினைவிருக்கட்டும். மாற்றுவழித் தெரிவு எனக்கானதாயிருக்க வேண்டும். தொட்டு ணர்ந்த விடயங்களை ஒருவன் பிறருக்குக் கூறலாம். அனுபவிக்க வைப்பது என்பது முற்றுமுழுதாகச் சாத்தியப்படாது. ஆக அனுபவம் என்பது சுயமாகப் பெறப்படவேண்டிதொன்றே. அந்த ஈடுபாட்டு வழிவந்த அனுபவமென்பது தொட்டும் பட்டும் உணரப்பட வேண்டியதொன்று. பார்த்தோ கேட்டோ பெறுவது அனுபவமல்ல அறிவுதான்.

பார்ப்பதும் கேட்பதும்கூட மாயமானதாக இருப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன என்பது கவனத்துக்குரியது. அவை செவிவழி கேட்ட இட்டுக்கட்டல்களாகவோ (புராணப்)புழுகுகளாகவோ கண்களால் கண்ட தற்செயல்களாகவோ கற்பிதங்களிலிருந்து உருப்பெற்ற மாயக்காட்சிகளாகவோ இருக்கலாம் என்பதை கவனத்தில்கொள்ளவேண்டும். எம்மை அலைக்கழித்து அலையவிடும் வேலையை இவைதான் கச்சிதமாகச் செய்கின்றன. மனம் ஒருநிலை நின்று சுயம் தொடர்பான ஆய்விற்கான தடைகளாக உள்ளன.


மனம் ஒரு நிலையில் நிற்கக்கூடிய ஒன்றா? இல்லையே என்னும் குரல் கேட்கிறது. உண்மைதான். ஓரிடத்தில் நிற்கமுடியாது அலைகிற ஒன்றுதான். அந்த அலைவுதான் நிம்மதி என்கிற ஒன்றை அணுகவிடாது தடுத்துக்கொண்டிருக்கிறது. அலைவுதான் ஆறியிருந்து சிந்தித்துக் கேள்வி கேட்டு தானே பதில் தேடும் பொறுமையை அல்லது ஆற்றலைத் தொலைக்கிறது. சுயமாகச் சிந்தித்து தெளிவடையும் வரை குப்பைகளால் சிக்கல் தொடரவே செய்யும்.

ஆக இப்போது குப்பையகற்றல் செயலொழுங்கில் பெரும் பாதிப்பைச் செய்வது அலையும் மனம்தான் எனும் தீர்மானத்திற்கு வரமுடியும். மனம் ஏன் அலைகிறது? அதனை எப்படி நிறுத்துவது? நிலையாக நிற்க வைக்க முடியுமா? என்பதான தொடர் வினாக்களை எமக்குள் நாமே எழுப்புதல் அவசியமானது. அதனை எவ்வாறு செய்வது? சிந்திப்போம்.

---

## மனம் தொட்ட ...





திரைப்படத்தில் படமாக்கப்பட்டுள்ளன. லட்சுமி பிரியா சந்திரமௌலி, பார்வதி மேனன், காளீஸ்வரி ஸ்ரீனிவாசன் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

முதன்மைக் கதாபாத்திரங்களில் நடித்திருந்த காளீஸ்வரி (அறிமுகம்), பார்வதி, லட்சுமிப்ரியா ஆகிய மூவருமே பாராட்டத்தக்க வகையில் நடித்திருந்தனர். குறிப்பாகக் கணவனின் ஆதிக்கத்தை எதிர்க்கத் துணியும் எளிய பெண்ணாகக் காளீஸ்வரி மூவரில் முதலிடம் பிடித்தார்.

இதைவிட 2021ஆம் ஆண்டில் தனுஷின் நடிப்பில் கர்ணன், ஆர்யாவின் நடிப்பில் வெளியான சார்பட்டா பரம்பரை, வருட முடிவில் சிம்புவின் நடிப்பில் வெளியாகிய மாநாடு, அதற்கு முன்னர் சிறு சிறு கதைக்கோர்வைகளாக யதார்த்தப் பாணியில் வெளியாகிய கசட தபற சாதி ஒடுக்குமுறைக்கு ஆளாகும் சிகை திருத்தும் தொழிலாளியாக நகைச்சுவை நடிகர் யோகிபாபு நடித்த மண்டேலா ஆகியவையும் சுவாரஸ்யமான கதைக் களங்களுடன் பார்வையாளர்களைக் கவர்ந்த திரைப்படங்களே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அவளுக்குச் செயற்கைக் கால் பொருத்தப்பட்டிருந்தது. முப்பத்தி இரண்டு வயதாகியிருந்தாலும் பெருமளவு கல்வி பயின்றிருந்தாலும் ஜாயை ஒரு குழந்தை போலத்தான் திருமதி ஹோப்வெல் கருதினாள்.



# நன்மக்கள்

ஃப்ளானரி ஓ கானர்

தமிழில் : எஸ்.கயல்

தனிமையில் இருக்கையில் சலனமற்ற ஒரு முன்னோக்கு முகபாவனை, ஆட்களைக் கையாளும்போது பயன்படுத்துவதற்கென அப்படியே நேர்மாறான ஒன்று என இரு வேறுவிதமான முகபாவனைகளைத் திருமதி ஃப்ரீமேன் தன் கைவசம் வைத்திருந்தாள். அவளுடைய முன்னோக்கு முகபாவனை, நிதானமாக அதே சமயம் வேகமாக முன்னேறிச் செல்லும் ஒரு கனரக வகை டிரக் போன்றது. அவளுடைய கண்கள் இடமோ வலமோ திரும்பாமல் இருந்தாலும் வாசித்துக்கொண்டிருக்கும் சிறுகதையின் இடையில் ஒரு மஞ்சள்நிற அடிக்கோடிட்ட வாசகத்தைக் கண்டதும் நம் கவனம் அதன் மீது திரும்புவதைப் போலத் திரும்பக் கூடியவை. அந்த இன்னொரு உணர்ச்சியை அவள் எப்போதாவதுதான் பயன்படுத்துவாள். ஏனெனில் தான் பேசிய ஒரு வரியைக்கூட மாற்றிப் பேசவேண்டிய அவசியமே அவளுக்குப் பெரும்பாலும் ஏற்பட்டதில்லை. ஆனால் அவ்வாறு நிகழும்போது அவளுடைய முகம் அப்படியே அசைவற்று இருக்கும். அவளுடைய கறுத்த விழிகள் கிட்டத்தட்ட கண்ணுக்குப் புலப்படாத ஒரு அசைவுடனிருக்கும். அப்போது அவை காட்சியிலிருந்து மறைந்துவிடுவது போலத் தோற்றமளிக்கும். அத்துடன், ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கப்பட்ட தானிய மூட்டைகள் போல திருமதி ஃபிரீமேன் திண்ணென்று அங்கு நின்றுகொண்டிருந்தாலும் அந்தக் காட்சியைப் பார்ப்பவர் கண்களுக்கு அவள் அங்கிருந்து மறைந்துவிட்டாற் போலிருக்கும்.

இது போன்ற நேரங்களில் திரு.ஹோப்வெல் அவளிடம் எதைப் பற்றியும் பேசமாட்டார். திருமதி ஃபிரீமேன் இரைச்சலான சத்தத்துடன் தேவைக்கதிகமாகப் பேசுவாள். எந்த விஷயத்திலும் அவள் மீது தவறு இருப்பதாக அவளை ஏற்றுக்கொள்ளவைக்க நம்மால் முடியாது. அப்படியே அசையாது நிற்கும் அவளைப் பேசவைக்க முடிந்தாலும்கூட, 'நான் அப்படி ஒன்றைச் சொல்லியிருக்கலாம். ஒருவேளை அப்படி நான் சொல்லி இருக்கமாட்டேன்' என்பது போன்று எதையாவது சொல்வாள். அவ்வாறில்லை எனில், சமையலறை உச்சியில் அடுக்கப்பட்டிருக்கும் அழுக்கு படிந்த குப்பிகளின் மீது தன் பார்வையைச் செலுத்தியபடி, 'சென்ற கோடைக்காலத்தின் போது வாங்கி அடுக்கிய அத்திப்பழங்கள், நீங்கள் சரியாகச் சாப்பிடாததால் இன்னும் அப்படியே இருக்கின்றன' என்பாள்.

அவர்கள் தங்களுடைய மிக முக்கியமான வேலையைக் காலை உணவின் போது சமையலறையில் மேற்கொள்வார்கள். திருமதி ஹோப்வெல் தினமும் காலை ஏழு மணிக்குக் கண்விழித்ததும் முதல் வேலையாகத் தன்னுடைய அறையிலும் ஜாயினுடைய அறையிலும் இருக்கும் எரிவாயு ஹீட்டர்களின் மின்னோட்டத்தை இயக்கி குளிரை மட்டுப்படுத்துவாள். ஜாயின் தலைமுடி பொன்னிறத்தில் இருக்கும். அவளுக்குச் செயற்கைக் கால் பொருத்தப்பட்டிருந்தது. முப்பத்தி இரண்டு வயதாகியிருந்தாலும் பெருமளவு கல்வி பயின்றிருந்தாலும் ஜாயை ஒரு குழந்தை போலத்தான் திருமதி ஹோப்வெல் கருதினாள். தன் தாய் உணவு உட்கொள்ளும் நேரத்தில் கண்விழித்து, குளியலறைக்குள் அசமந்தமாக நுழைந்து ஜாய் அதன் கதவை அறைந்து சாத்திய சிறிது நேரத்துக்குள் திருமதி ஃபிரீமேன் அந்தக் கதவின் பின்பக்கம் வந்து நிற்பாள். 'உள்ளே வா' என்ற அம்மாவின் அழைப்பு கேட்கும். உடனே அவர்கள் தாழ்வான குரலில் பேசிக்கொள்வார்கள். எது யாருடைய குரல் எனப் பிரித்தறிய இயலாத அளவுக்கு அது இரகசியமாக ஒலிக்கும்.

குளியலை முடித்துவிட்டு ஜாய் வீட்டுக்குள் நுழையும்போது வழக்கமாக வானிலை அறிக்கை முடிவடைந்து, திருமதி ஃபிரீமேனின் மகள்களான கிளைனீஸ் அல்லது கரமேய் குறித்த தகவல் அறிக்கை வாசிக்கப்பட்டுக்கொண்டிருக்கும். ஜாய் அவர்களை கிளிசரின் என்றும் கேரமல் என்[illegible] நிறத் தலைமுடியுடைய பதினெட்டு வயது கிளை[illegible]கள் இருந்தனர். பொன்னிறத் தலைமுடி கொண்ட அவளுடைய தங்கை கரமேய்க்குப் பதினைந்து வயதுதானிருக்கும். ஆனால் அதற்குள் திருமணமாகி, பிள்ளைத்தாய்ச்சியாக இருந்தாள். எதையும் சாப்பிட முடியாமல் அவள் தொடர்ந்து வாந்தி எடுத்துக்கொண்டிருந்தாள். மருத்துவர் இறுதியாகத் தந்த அறிக்கை வந்ததில் இருந்து துல்லியமாக அவள் எத்தனை முறை வாந்தியெடுத்தாள் என்ற குறிப்புகளைத் திருமதி ஃபிரீமேன் திருமதி ஹோப்வெல்லிடம் காலை வேளைகளில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

தனக்குத் தெரிந்த வரையில் கிளைனீசும் கரமேயும் மிகச் சிறந்த பெண்கள் என்றும், திருமதி ஃபிரீமேன்தான் மிகச் சிறந்த பெண்மணி என்றும், எந்த இடத்துக்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்ல உகந்தவள் என்றும் அங்கு சந்திக்க நேரிடும் எவரிடம் வேண்டுமானாலும் அவளைத் தயக்கமின்றி அறிமுகப்படுத்தலாம் என்றும் எல்லோரிடமும் சொல்வது திருமதி ஹோப்வெல்லுக்கு மிகப் பிடித்தமான ஒன்று. அதன் பிறகு ஃபிரீமேன் தம்பதியரை எப்படி அந்த வீட்டில் குடியமர்த்த நேரிட்டது என்பதையும், அவர்கள் இறைவனால் அவளிடம் கொண்டுவந்து சேர்க்கப்பட்டவர்கள் என்பதையும், நான்கு வருடங்களாக அவள் அவர்களை எப்படிப் பேணிப் பாதுகாக்கிறாள் என்பதையும் கூறுவாள். அவள் அவர்களை இவ்வளவு நீண்ட காலம் குடித்தனக்காரராக வைத்திருந்ததற்குக் காரணம் அவர்கள் சமுதாயத்தில் கீழான நிலையில் இல்லாமல் மேட்டுக்குடி மக்களாக இருந்ததுதான்.

ஃபிரீமேன் தம்பதியினர் தங்களைப் பற்றி அறிந்துகொள்ளும் பொருட்டு இதற்கு முன் அவர்கள் குடியிருந்த வீட்டின் உரிமையாளருடைய எண்ணைத் தந்திருந்தனர். திருமதி ஹோப்வெல் அந்த எண்ணை அழைத்தபோது அவர், 'திரு ஃபிரீமேன் என்னவோ சிறப்பாக விவசாயம் செய்வார்தான். ஆனால் மற்றவர் விஷயத்தில் மூக்கை நுழைப்பதில் திருமதி ஃபிரீமேனை மிஞ்ச இந்த உலகில் வேறு ஆளே இல்லை' என்றார். 'அவளுக்கு எல்லாவற்றைப் பற்றியும் எல்லாமே தெரிய வேண்டும். ஒரு விஷயம் நடந்துமுடிந்து அதன் சூடு ஆறுவதற்குள் அவளுக்கு அது தெரியவில்லையென்றால் அவள் தலையே வெடித்துவிடும். திரு ஃபிரீமேனைப் பொறுத்தவரை என்னால் நிச்சயமாக நற்சான்று அளிக்க முடியும். ஆனால் என்னாலும் என் மனைவியாலும் ஒரு நொடிகூட அதற்கு மேல் அந்தப் பெண்மணியைப் பொறுத்துக்கொள்ள முடியாத நிலை எங்களுக்கு ஒரு நாள் ஏற்பட்டது' என்றார். இதைக் கேட்டதில் இருந்து அவர்களைக் குடிவைப்பது குறித்த முடிவைத் திருமதி ஹோப்வெல் சில நாட்களுக்குத் தள்ளிப் போட்டாள்.

குடியிருக்க வீடு கேட்டு அவர்களைத் தவிர யாரும் விண்ணப்பிக்காததால் வேறு வழியின்றி அவர்களையே ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயம் திருமதி ஹோப்வெல்லுக்கு ஏற்பட்டது. ஆனால் திருமதி ஃபரீமேனை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை அவள் அப்போதே மிகத் தெளிவாக முடிவுசெய்துவிட்டாள். அந்தப் பெண் எல்லா விஷயங்களும் தனக்குத் தெரிய வேண்டும் என்கிற குணமுடையவள் என்பதால் எல்லா விஷயங்களையும் அவளுக்குத் தெரிய வைப்பது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா விஷயங்களுக்குள்ளும் அவளைப் பிணைப்பது என்று திருமதி ஹோப்வெல் முடிவு செய்தாள். அதாவது எல்லா விஷயங்களுக்கான பொறுப்பையும் அவளிடம் தந்து அவளை அதற்குப் பொறுப்பாளியாக நியமித்துவிடுவது என்பதுதான் அந்த முடிவு. திருமதி ஹோப்வெல்லுக்கு எனச் சொந்தமாக மோசமான குணங்கள் எதுவும் இல்லை. ஆனால் மற்றவர்களின் குணங்களை ஆக்கப்பூர்வமான விதத்தில் பயன்படுத்திக் கொள்ளும் திறன் அவளுக்கு இருந்தது. இப்படியாக நான்கு வருடங்கள் ஃபிரீமேன் தம்பதியரை அவள் தன் வீட்டில் வாடகைக்குக் குடியிருக்க அனுமதித்திருந்தாள்.

'குறையற்றது என்று எதுவுமில்லை' என்பது திருமதி ஹோப்வெல்லுக்கு மிகப் பிடித்த பொன்மொழிகளில் ஒன்று. அவளுக்குப் பிடித்த இன்னொன்று, 'அவ்வளவுதான் வாழ்க்கை' என்பது. அப்புறம், 'அவரவர்க்கென ஒரு கருத்து இருக்கும்' என்கிற மிக முக்கியமான இன்னொன்று. இந்தச் சொற்றொடர்களை எல்லாம் வழக்கமாக மேஜையின் அருகே அமர்ந்திருக்கையில் மென்மையான வற்புறுத்தும் தொனியில் அவள் சொல்வது, 'அவளைத் தவிர வேறெவருக்குமே அது தெரியாது' என்பது போலிருக்கும். கனத்த உருவமுடைய ஜாயின் முகத்திலிருந்த அனைத்து உணர்ச்சிகளையும் அவளுடைய மாறாத சினம்,



சிறு தடயமின்றி அழித்துவிட்டிருந்தது. அவள் நட்பிணக்கமற்ற தன் நீல நிறக் கண்களுடன் பக்கவாட்டில் இருந்து அவர்களை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். குருட்டுத் தன்மையை விரும்பி அடைந்து, அதைத் தொடர்ந்து தக்கவைக்கும் வழிமுறை அறிந்த ஒருவரின் பார்வையாக அது இருந்தது.

திருமதி ஹோப்வெல், 'வாழ்க்கை என்பது அவ்வளவுதான்' என்று திருமதி ஃபிரீமேனிடம் சொன்னால், அவள், 'இதை நான் எப்போதுமே நினைப்பதுண்டு' என்பாள். எந்த விஷயத்தையும் அவளைத் தவிர வேறு எவராலும் முதன்முதலில் நினைத்திருக்க இயலாது. அவளைத் தவிர வேறு யாராலும் அதை நினைத்திருக்க வாய்ப்பே இல்லை. அவள் திருமதி ஹோப்வெலைவிட வேகமாக இருந்தாள். அவர்கள் அந்த வீட்டுக்குக் குடிவந்த சில நாட்களுக்குப் பிறகு திருமதி ஹோப்வெல் அவளிடம் பேசும்போது, 'நீங்கள் ஒரு அதிவிரைவு வண்டி' என்று கண் சிமிட்டினாள். திருமதி ஃபிரீமேன், 'அது எனக்குத் தெரியும். நான் எப்போதுமே வேகமாக இருப்பேன். மற்றவர்களைவிட வேகமாக இருப்பதற்குச் சிலரால்தான் முடியும்' என்றாள்.

'ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம்' என்றாள் திருமதி ஹோப்வெல்.

திருமதி ஃபிரீமேன், 'ஆமாம். பெரும்பாலானோர் அப்படித்தான்' என்றாள்.

'இந்த உலகம் வித்தியாசமான மனிதர்களால் ஆனது'.

'இதை நான் எப்போதுமே நினைப்பதுண்டு'.

இம்மாதிரியான உரையாடல்களைக் காலை உணவின்போதும், அதைவிட அதிக அளவில் மாலை நேரச் சிற்றுண்டியின் போதும் ஜாய் கேட்டுப் பழகியிருந்தாள். சில சமயங்களில் இரவு உணவின் போதும் இது நடப்பதுண்டு. விருந்தினர் யாருமற்ற நேரங்களில் திருமதி ஹோப்வெல்லும் ஜாயும் சமையலறையிலேயே உணவு உண்டனர். அது அவர்களுக்கு வசதியாகவும் இருந்தது. அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் எதோ ஒரு கட்டத்தில் திருமதி ஃபிரீமேன் எப்படியோ அங்கு ஆஜராகிவிடுவதோடு, அவர்கள் சாப்பாட்டை முடிக்கும்வரை அவர்களைப் பார்த்தபடி அங்கேயே நிற்பாள். கோடைக் காலமாக இருந்தால் வாசலில் நிற்பவள், குளிர்காலமென்றால் தன்னுடைய ஒரு முழங்கையை குளிர்சாதனப் பெட்டியின் மீது ஊன்றி நின்றுகொண்டு அவர்களைக் குனிந்து பார்த்துக்கொண்டோ, தன்னுடைய ஸ்கர்ட்டின் பின்பக்கத்தை இழுத்துவிட்டபடி எரிவாயுவினால் இயங்கும் அறையைச் சூடேற்றும் கருவியின் அருகேயோ நிற்பாள். சில சமயங்களில் சுவரின் மீது சாய்ந்தபடி தன்னுடைய தலையை இடம் வலமாக ஆட்டுவாள். அங்கிருந்து கிளம்புவதற்கான அறிகுறியே அவளிடம் தென்படாது. இவையெல்லாமே திருமதி ஹோப்வெல்லுக்குப் பெரும் சோதனையாக இருந்தது. ஆனால் அவள் மிகுந்த பொறுமைசாலி. எதுவுமே குறைபாடற்றதாக இருக்காது என்பதை உணர்ந்திருந்தவள். ஃபிரீமேன் தம்பதியரிடம் அவள் மேட்டுக்குடி வர்க்கத்தினரைக் கண்டாள். இந்தக் காலகட்டத்தில், இந்த வயதில் மேட்டுக்குடியினர் குடித்தனக்காரர்களாகக் கிடைத்தால் அவர்களைத் தக்கவைத்துக்கொள்வதே புத்திசாலித்தனம் என நினைத்தாள்.

**கோடைக் காலமாக இருந்தால் வாசலில் நிற்பவள், குளிர்காலமென்றால் தன்னுடைய ஒரு முழங்கையை குளிர்சாதனப் பெட்டியின் மீது ஊன்றி நின்றுகொண்டு அவர்களைக் குனிந்து பார்த்துக்கொண்டோ, தன்னுடைய ஸ்கர்ட்டின் பின்பக்கத்தை இழுத்துவிட்டபடி எரிவாயுவினால் இயங்கும் அறையைச் சூடேற்றும் கருவியின் அருகேயோ நிற்பாள்**

சமூகத்தில் கீழ் நிலையில் இருந்த ஆட்களுடன் அவளுக்கு ஏராளமான அனுபவம் இருந்தது. ஃபிரீமேன் தம்பதியருக்கு முன்பிருந்த குடித்தனக்காரர்கள் எவரையுமே ஒரு வருடத்திற்கு மேல் அவள் அங்கு குடியிருக்கவிடவில்லை. அந்த விவசாயிகளின் மனைவியர் நாம் வெகுகாலம் நம்மோடிருக்க விரும்பும் வகையான பெண்கள் இல்லை. நெடுங்காலத்துக்கு முன் தன் கணவரை விவாகரத்து செய்திருந்த திருமதி ஹோப்வெல்லுக்கு வயல்களில் தன்னுடன் நடை பயில்வதற்கு ஒரு ஆள் தேவைப்பட்டது. அவள் இதற்காக ஜாயை வற்புறுத்த நேர்ந்தால் ஜாய் தன் முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு படு மோசமாக எதாவது பேசுவாள். திருமதி ஹோப்வெல், 'சந்தோசமாக வரமுடியாதென்றால் நீ வரவே வேண்டாம்' என்பாள். தன் கால்களைக் குறுக்கி வைத்து, தோளை விறைப்பாக்கி, கழுத்தை இலேசாக முன்புறம் சாய்த்தபடி நிற்கும் ஜாய், 'உனக்கு வேண்டுமென்றால் சொல். நான் இங்குதான் இருக்கிறேன். இதோ 'இப்படி' இருக்கிறேன்' என்பாள்.

ஜாய்க்குப் பத்து வயதிருக்கையில் அவர்கள் ஒருமுறை வேட்டைக்குச் சென்றபோது ஜாயுடைய காலில் தவறுதலாகக் குண்டு பாய்ந்துவிட்டது. இதனால் திருமதி ஹோப்வெல் தன் மகளின் இத்தகைய நடத்தையை மன்னித்தாள். தன் மகளுக்கு முப்பத்தி இரண்டு வயதாகிறது என்பதையும் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவள் ஒற்றைக் காலுடன் வாழ்வதையும் நினைத்துப் பார்க்கவே திருமதி ஹோப்வெல்லுக்குக் கடினமாக இருந்தது. இயல்பாக நடக்கக் கூடிய மகிழ்வான நிகழ்வுகள் ஏதுமற்ற, ஒரு சிறு நடன அசைவைக்கூட செய்திராத முப்பது வயதான குண்டுப் பெண்ணாகத் தன் மகளைப் பற்றி நினைப்பது அவள் இதயத்தைக் கிழித்தது. அதைவிட இன்னும் சிறு குழந்தையாக அவளைப் பாவிப்பதே திருமதி ஹோப்வெல்லுக்கு மகிழ்ச்சி அளித்தது. அவளுடைய உண்மையான பெயரே ஜாய்தான். ஆனால் அவளுக்கு இருபத்தியொரு வயதாகி அவள் வெளியே செல்லத் தொடங்கியதுமே அவள் அதைச் சட்டப்படி மாற்றிக்கொண்டாள். ஜாய் என்ற அழகான தன் பெயரைச் சட்டப்பூர்வமாக மாற்றிக்கொள்ளும்வரை இது பற்றி அவள் தன் அம்மாவிடம் எதுவுமே சொல்லவில்லை. அனைத்து மொழிகளிலும் தேடிச் சலித்து, இருப்பதிலேயே அசிங்கமான ஒரு பெயரைத்தான் அவள் தேர்ந்தெடுத்திருப்பாள் என்று திருமதி ஹோப்வெல்லுக்கு நன்றாகத் தெரியும். இப்படியாக ஜாயினுடைய சட்டப்பூர்வமான பெயர் ஹல்கா என்று மாறியது.

இந்தப் பெயரை நினைத்தபோதெல்லாம் போர்க்கப்பலின் அகன்ற மேற்பகுதிதான் திருமதி ஹோப்வெல்லின் நினைவுக்கு வந்தது. அவள் தன் மகளை அந்தப் பெயரைக் கூறி அழைக்காமல் ஜாய் என்றே எப்போதும் அழைப்பாள். ஜாய் அதற்கு இயந்திரகதியில் பதில் சொல்வாள். அம்மாவுடன் வயல்வெளிகளில் நடைபோவதில் இருந்து தன்னைக் காப்பாற்றிய திருமதி ஃபிரீமேனை ஹல்கா பொறுத்துக்கொள்ளக் கற்றுக்கொண்டாள். கிளைனீசும் கரமேயும் அந்த வீட்டில் இருந்ததால் அவர்களையும்! திருமதி ஹோப்வெல்லின் கவனம் அவர்கள் பக்கமாகச் சிறிது சிதறியது. இல்லையெனில் அவளுடைய முழு கவனமும் ஹல்கா மீதே இருந்திருக்கும். அந்த வகையில் கிளைனீசும் கரமேயும் கூட ஜாய்க்குப் பயன்பட்டனர். திருமதி ஃபிரீமேனிடம் கடுமையாக நடந்துகொள்ளத் தன்னால் இயலவில்லை என்பதை உணர்ந்த போது ஜாய்க்கு திருமதி ஃபிரீமேனைச் சிறிதும் பிடிக்காமல் போனது. விசித்திரமான மனக்கசப்புகளைத் தன்வசம் கொண்ட திருமதி ஃபிரீமேன், பல நாட்கள் தொடர்ந்து யாருடனும் கலகலப்பாகப் பேசாமல் அமைதியாக இருப்பாள். ஆனால் அவளுடைய மகிழ்வின்மைக்கான காரணத்தைப் பார்த்தால் அது எப்போதுமே முக்கியமற்ற ஒன்றாக இருக்கும். ஒரு நேரடித் தாக்குதலோ, காமம் வழிகிற பார்வையோ, கண்ணெதிரே அப்பட்டமாகத் தெரியும் ஒரு அசிங்கமான விஷயமோ எதுவுமே அவளைப் பாதிக்காது. எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென ஒரு நாள் அவள் ஜாயை 'ஹல்கா' என்று அழைக்கத் தொடங்கினாள்.

இது தெரிந்தால் திருமதி ஹோப்வெல் கோபப்படுவாள் என்பதால் திருமதி ஃபிரீமேன் எப்போதுமே அவள் கண்முன்னே இப்படி அழைக்கமாட்டாள். தானும் ஜாயும் வீட்டைவிட்டு வெளியே ஒன்றாக இருக்க நேர்கையில், எதையாவது பேசிக்கொண்டே வந்து இறுதியில் 'ஹல்கா' என்று முடிப்பாள். பெரிய கண்ணாடி ஒன்றை அணிந்திருக்கிற ஜாய் எனும் ஹல்காவின் முகம் இதைக் கேட்டதுமமே, திருமதி ஃபிரீமேன் தன்னுடைய அந்தரங்கத்துக்குள் அத்துமீறி நுழைந்ததைப் போல கோபத்தில் சிவந்துவிடும். அவள் அந்தப் பெயரைத் தன் அந்தரங்கமான விஷயமாகக் கருதினாள். மிக அசிங்கமாக இருப்பதாலேயே அந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தவளுக்கு அதன் அதியற்புதப் பொருத்தம் பிறகுதான் பிடிபட்டது. உலைக் களத்தில் தங்கியிருக்கிற, மோசமாக வியர்வை வழிகிற அக்னி தேவதை போலவும், எவருடைய குரலுக்கு இறைவி வந்து நின்றாகவேண்டும் என்று அனைவரும் நினைக்கின்றனரோ அந்தப் பெயரைப் போலவும் ஹல்கா எனும் பெயர் அவளுக்குத் தோன்றியது. அப்பெயரைத் தன்னுடைய ஆகச் சிறந்த கலைப் படைப்பாக அவள் கருதினாள். அவளுடைய மிகப் பெரிய வெற்றிகளில் ஒன்று அவளுடைய அம்மாவால் அதை முற்றிலுமாக அழித்தொழிக்க முடியவில்லை என்பதுதான். அதைவிடப் பெரிய வெற்றி அவளால் ஜாயிலிருந்து தன்னை ஹல்காவாக மாற்றிக்கொள்ள முடிந்தது என்பதே. ஆனாலும் அந்தப் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மூலம் திருமதி ஃபிரீமேன் அடைந்த மகிழ்ச்சி அவளை எரிச்சல்படுத்தியது.

எதையும் சந்தேகத்துடன் உன்னிப்பாக உற்றுப் பார்க்கிற திருமதி ஃபிரீமேனின் எஃகு போன்ற கூர்மையான கண்கள் எதோ ஒரு இரகசியத்தைத் தேடிக் கண்டடையப் போவது போல ஹல்காவின் முகத்தைக் கடந்து இன்னும் ஆழமாக வேறெங்கோ ஊடுருவிச் சென்றன. ஹல்காவைப் பற்றிய எதோ ஒரு விஷயம் அவளை ஈர்த்தது. தன்னுடைய செயற்கைக் கால்தான் அவளை ஈர்த்தது என்பதை ஹல்கா பிறகு புரிந்துகொண்டாள். இரகசிய தொற்றுநோய்கள், மறைக்கப்பட்ட உருக்குலைந்த உடல் உறுப்புகள், குழந்தைகள் மீதான தாக்குதல்கள் ஆகியவை குறித்த தகவல்களின் மீது திருமதி ஃபிரீமேனுக்குத் தனிப்பட்ட விருப்பம் இருந்தது. நோய்களைப் பொறுத்தவரை நீண்ட கால நோய்களும் குணப்படுத்த முடியாதவையும்தான் அவளுடைய விருப்ப வகைகள். வேட்டையின்போது நிகழ்ந்த விபத்தைப் பற்றியும், அவளுடைய கால் எப்படி வெடித்துச் சிதறியது என்பதையும், அவள் சுயநினைவை இழக்கவில்லை என்பதையும் திருமதி ஹோப்வெல் திருமதி ஃபிரீமேனிடம் விளக்கமாகக் கூறுவாள். ஒரு மணி நேரத்துக்கு முன்னர் நடைபெற்ற ஒரு நிகழ்வைப் போல ஒவ்வொரு முறையும் திருமதி ஃபிரீமேனால் அதை ஆவலுடன் கவனித்துக் கேட்க முடியும்.

அன்று காலை கொடூரமான ஒரு சத்தத்துடன் ஹல்கா சமையலறைக்குள் நுழைவது கேட்டது. அந்த மோச மான சத்தமில்லாமல் அவளால் நடக்க முடியும் என்பது திருமதி ஹோப்வெல்லுக்கு உறுதியாகத் தெரியும். ஆனாலும் அத்தகைய ஓசை எழுப்பியபடி ஹல்கா வந்தாள். உள்ளே நுழைந்ததும் அவர்களை ஒரு பார்வை பார்த்தாளே தவிர எதுவும் பேசவில்லை. சிகப்பு நிற கிமோனோவை (ஜப்பானியர்களின் பாரம்பரிய உடை) அணிந்து திருமதி ஹோப்வெல் தன் தலை முடியின் சுருள் தன்மையைப் பாதுகாக்க மெல்லிய துணியால் அதைக் கட்டிக்கொண்டு உணவு மேஜையினருகே அமர்ந்து தன் காலை உணவைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். திருமதி ஃபிரீமேன் தன்னுடைய முழங்கையைக் குளிர்சாதனப் பெட்டியின் மீது தொங்கவிட்டுக்கொண்டு உணவு மேஜையைப் பார்த்தபடி இருந்தாள். அடுப்பில் முட்டைகளை வேகவைத்த ஹல்கா, தன் கைகளைக் கட்டிக்கொண்டு வழக்கம்போல அவர்கள் எதிரே நின்றுகொண்டிருந்தாள். திருமதி ஹோப்வெல் ஹல்காவை நிமிர்ந்து பார்த்தாள். அப்போது திருமதி ஃபிரீமேனுக்கும் ஹல்காவுக்கும் இடையே மறைமுகமான பார்வைப் பரிமாற்றம் நிகழும். அவள் இதே மாதிரி தொடர்ந்து அமைதியாக மட்டும் இருந்துவிட்டால் பார்வைக்கு அவ்வளவு ஒன்றும் மோசமாக இருக்க மாட்டாள். இனிய முகபாவனையால் அழகூட்ட முடியாத அளவுக்கு அவளுடைய முகம் அப்படியொன்றும் அழகற்றதில்லை. எல்லாவற்றிலும் நல்ல விஷயங்களையே பார்ப்பவர்கள், பார்வைக்கு அழகாக இல்லையென்றால்கூட அழகாகவே காட்சியளிப்பார்கள் என்று திருமதி ஹோப்வெல் சொல்வதுண்டு.

ஜாயை இப்படிப் பார்க்கும் போதெல்லாம் தன் குழந்தை முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்ற நினைவு எழுவதை ஹோப்வெல்லால் தவிர்க்க முடிவதில்லை. அந்தப் படிப்பால் ஜாயிடம் எந்த மாற்றமும் நிகழவில்லை. இப்போது அவள் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றுவிட்டபடியால் இனி கல்லூரிக்குச் செல்வதற்கான எந்தச் சாக்குபோக்கும் அவளிடம் இல்லை. தங்களுடைய நேரத்தை இனிமையாகச் செலவழிப்பதற்காகப் பெண்கள் கல்விக்கூடங்களுக்குச் சென்று பயில வேண்டும் என்று திருமதி ஹோப்வெல் நினைத்தாள். ஆனால் ஜாய் அவற்றைக் கடந்துவிட்டாள். மறுபடி அங்கு செல்லுமளவுக்கு ஜாய்க்கு உடல் பலமும் இல்லை. மிகக் கவனமாகப் பார்த்துக்கொண்டால் நாற்பத்தி ஐந்து வயதுவரை அவள் உயிர் வாழ வாய்ப்பிருப்பதாக மருத்துவர்கள் திருமதி ஹோப்வெல்லிடம் கூறியிருந்தனர். ஜாயின் இதயம் பலவீனமாக இருந்தது. இல்லை

> **“ அவள் இதே மாதிரி தொடர்ந்து அமைதியாக மட்டும் இருந்துவிட்டால் பார்வைக்கு அவ்வளவு ஒன்றும் மோசமாக இருக்க மாட்டாள். இனிய முகபாவனையால் அழகூட்ட முடியாத அளவுக்கு அவளுடைய முகம் அப்படியொன்றும் அழகற்றதில்லை ”**

யென்றால் இந்தச் சிகப்பு மலைகளையும் மேட்டுக்குடி மக்களையும் விட்டு நெடுந்தொலைவு போய்விட்டிருப்பேன் என்பதை ஜாய் வெளிப்படையாகக் கூறுவாள்.

எங்காவது ஒரு பல்கலைக்கழகத்தில் ஜாயின் பேசுபொருள் குறித்த புரிதலுடைய மாணவர்களிடையே அவள் வகுப்பெடுத்துக்கொண்டிருந்திருப்பாள். சோளக் கொல்லை பொம்மை போல இங்கு அமர்ந்தபடியே திருமதி ஹோப்வெல்லால் அதைக் கற்பனை செய்து பார்க்கவும் அதைக் குறித்துப் பேசவும் முடிந்திருக்கும். ஆனால் இப்போதோ ஆறு ஆண்டுகளாகப் பயன்பாட்டில் இருக்கும் பழைய ஸ்கர்ட்டும், சாயம் போன குதிரை வீரனின் உருவம் பொறிக்கப்பட்ட மஞ்சள் நிற முழுக்கைச் சட்டையும் அணிந்தவாறு நாள் முழுக்க இந்த வீட்டிலேயே அமர்ந்திருக்கிறாள். இது முட்டாள்தனமானது என்றும் இதிலிருந்தே அவள் இன்னும் குழந்தைதான் என்பதும் தெரிவதாக திருமதி ஹோப்வெல் கருதினாள். ஜாய் அறிவாளிதான். ஆனால் சிறிதும் விவேகமற்றவள். வருடங்கள் செல்லச் செல்ல மற்றவர்களிடமிருந்து அவள் வித்தியாசமானவளாக மாறிக்கொண்டே போவதாகவும், அவளுடைய உப்பிப் பெருத்த உடல், கடுமையான சுபாவம், மாறுகண் ஆகியவை மென்மேலும் வளர்ந்துகொண்டே போனதாகவும் திருமதி ஹோப்வெல்லுக்குத் தோன்றியது.

அத்துடன் ஜாய் பேசக்கூடிய விநோதமான விஷயங்கள் இருக்கிறதே! சாப்பிட்டுக்கொண்டிருக்கும் உணவு வாயில் இருக்க, எந்த முன்னெச்சரிக்கையும் செய்யாமல் திடீரென உணவு மேஜையில் இருந்து முகம் சிவக்க எழுந்து, தன்னைப் பெற்ற அம்மாவிடமே, 'பெண்ணே! எப்போதாவது நீ உன்னுள் நோக்கி இருக்கிறாயா? உன்னுள் ஆழ்ந்து பார்த்து நீ யாராக இல்லை என்று பார்த்திருக்கிறாயா? கடவுளே!' என்று உரக்கக் கத்தி, பிறகு தொடர்ந்து பேச சக்தியிழந்து, தன் உணவுத் தட்டை வெறித்துப் பார்த்துக்கொண்டு, 'நாம் நம்முடைய சொந்த ஒளி இல்லை என்று மெல்பிரான்ச் (MALEBRANCHE) சொன்னது சரிதான். நாம் நம்முடைய சொந்த ஒளி இல்லை' என்பாள். இந்த சம்பாஷனை அப்போது நிகழ்ந்திருக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை இன்று வரை திருமதி ஹோப்வெல்லால் புரிந்துகொள்ள முடியவில்லை.

'புன்னகை புரிவதால் யாருக்கும் எந்த நட்டமும் ஏற்பட்டுவிடாது' என்றாள் திருமதி ஹோப்வெல். ஜாய் இதைத் தன் புத்திக்குள் செலுத்தக்கூடும் என்று நினைத்தே அவள் இதைச் சொன்னாள்.

ஜாய் தன் ஆராய்ச்சிப் படிப்பைத் தத்துவ இயலில் செய்துவைத்திருப்பது திருமதி ஹோப்வெல்லுக்குப் பேரிழப்பைத் தந்தது. 'என் மகள் ஒரு செவிலி' என்றோ 'என் மகள் ஒரு பள்ளி ஆசிரியை' என்றோ சொல்லலாம். 'என் மகள் ஒரு வேதியியல் பொறியாளர்' என்றுகூட சொல்லலாம். ஆனால், 'என் மகள் ஒரு தத்துவவியலாளர்' என்று நம்மால் சொல்ல முடியாது. இந்தத் தத்துவம் போன்ற விஷயங்கள் எல்லாம் கிரேக்கர்கள், ரோமானியர்களுடன் முடிந்து போனவை. நாள் முழுக்க ஒரு குழிவான நாற்காலியில் கழுத்தை அழுந்தவைத்தபடி அமர்ந்து எதையாவது படித்துக்கொண்டிருக்கும் ஜாய், எப்போதாவது நடைபயிற்சி செய்வாள். ஆனால் நாய்களையோ பூனைகளையோ பறவைகளையோ இயற்கையையோ அழகிய இளைஞர்களையோ அவளுக்குப் பிடிப்பதில்லை. இளைஞர்களை அவள் பார்க்கும் விதம் அவர்களின் முட்டாள்தனத்தை அவளால் நுகர்ந்து பார்க்கமுடிவது போலிருக்கும்.

ஒரு நாள், ஜாய் ஒரு நூலைப் படித்துக்கொண்டிருந்ததை திருமதி ஹோப்வெல் பார்த்தாள். இடையில் அவள் அதை வைத்துவிட்டுப் போகவும், அதைத் திறந்து பார்த்த திருமதி ஹோப்வெல், அதிலிருந்த எதோ ஒரு பக்கத்தை எடுத்து வாசித்தாள். 'ஆனால் அறிவியலோ தன்னுடைய தெளிந்த நுண்ணறிவையும், தீவிரத்தன்மையையும் மீண்டும் புதிதாக உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் தன்னுடைய அக்கறை 'எது என்ன' என்பது குறித்து மட்டுமே என்று அறிவியல் அறிவிக்க வேண்டும். அறிவியல் மட்டும் இருந்தால் அச்சமும் பொய்யான நம்பிக்கைகளும் எப்படிச் சாத்தியமாகும்? அறிவியல் சொல்வது சரி என்றால், ஒரு விஷயம் உறுதிப்படுகிறது. இன்மை குறித்த எது ஒன்றைப் பற்றியும் அறிவியல் எதுவும் அறிந்துகொள்ள விரும்பவில்லை. இன்மை குறித்த அறிவியலின் கடுமையான அணுகுமுறை என்பது இதுதான். இன்மை பற்றி எதுவும் அறிந்துகொள்ள வேண்டாம் என்று நாம் விரும்புவதன் மூலமாகவே இது நமக்குத் தெரிகிறது' என்று அதில் இருந்தது. பென்சிலால் நீல நிறத்தில் அடிக்கோடிடப்பட்டு இருந்த இந்த வரிகள் தீய சக்திகளை விரட்டுவதற்காகச் சொல்லப்படுகிற, எளிதில் புரிந்துகொள்ள இயலாத மந்திர உச்சாடனம் போல திருமதி ஹோப்வெல்லுக்குத் தோன்றியது. வேகமாக அந்த நூலை மூடிவைத்தவள் காய்ச்சல் கண்டவளைப் போல அந்த அறையைவிட்டு வெளியேறினாள்.

இன்று காலை ஜாய் உள்ளே நுழைந்தபோது திருமதி ஃபிரீமேன், 'இரவு உணவுக்குப் பிறகு நான்கு முறை வாந்தி எடுத்துவிட்டாள். இரவு மூன்று மணிக்குப் பிறகும்கூட தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தாள். நேற்றெல்லாம் நிலைப்பேழையின் இழுப்பறைகளில் எதையோ தேடி சலசலப்பான சத்தமேற்படுத்திக் கொண்டும், அடுத்து எதன் மீது தாக்குதல் நடத்தலாம் என்று யோசித்தபடி அப்படியே நின்றுகொண்டும் இருந்தது தவிர நேற்று முழுதும் அவள் வேறெதுவும் செய்யவில்லை' என்று கரமேயைப் பற்றி புகார் கூறிக்கொண்டிருந்தாள்.

காபி குடித்தபடி, 'அவளை ஒழுங்காகச் சாப்பிடச் செய்யுங்கள்' என்று முணுமுணுத்த திருமதி ஹோப்வெல், தனக்கு முதுகு காட்டி ஸ்டவ் அருகே நின்றிருந்த ஜாயைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பைபிள் விற்பனை செய்வதற்காக வந்திருந்த விற்பனைப் பிரதிநிதியிடம் ஜாய் என்ன பேசியிருப்பாள், அவளால் எவ்விதமான உரையாடலை அவனுடன் நிகழ்த்தியிருக்க இயலும் என்று திருமதி ஹோப்வெல்லால் கற்பனை செய்துபார்க்க இயலவில்லை.

கெச்சலாகவும் உயரமாகவும் இருந்த அந்த இளைஞன் தொப்பி அணிந்திருக்கவில்லை. அதற்கு முன் தினமும் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டவன், இன்று வந்திருக்கிறான். தன் கையில் வைத்திருந்த கறுப்பு சூட்கேசின் பாரம் தாங்காமல் கதவின் மீது ஒரு பக்கமாகச் சாய்ந்தான். கீழே விழுந்துவிடுவது போன்றிருந்த அந்த நிலையிலும் மகிழ்ச்சி ததும்பும் குரலில், 'இனிய காலை வணக்கம்! திருமதி சிடார்ஸ்' என்று சொல்லிக்கொண்டே அந்த சூட்கேசைத் தரைவிரிப்பின் மீது வைத்தான். பளீரென்ற நீல நிற சூட்டும், தேவையான அளவுக்கு காலின் மேற்புறம் வரை இழுக்கப்பட்டிராத மஞ்சள் நிறக் காலுறைகளுடனும் இருந்தவன் பார்ப்பதற்கு அவ்வளவொன்றும் மோசமாக இல்லை. அழுந்தவாரிய பழுப்பு நிறத் தலைமுடிக் கற்றையொன்று துருத்திக்கொண்டிருந்த பெரிய எலும்புகளுடைய அவனுடைய முகத்தின் முன்நெற்றியில் கிடந்தது.

அவள், 'நான் திருமதி ஹோப்வெல்' என்றாள்.

'ஓ' என்றவன், வியப்படைந்தது போல நடித்தாலும் அவன் கண்கள் என்னவோ ஒளிர்ந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலும் காமமும் சரியாக இருந்தால் மற்றதெல்லாம் பிரச்சினையே இல்லை

அராத்து

ஆண் - பெண் உறவுச் சிக்கலில் இருக்கும் அடிப்படைப் பிரச்சினைகளை புரிந்து கொள்ளாவிட்டாலும் பெரிய சிக்கல் இல்லை. எப்படியாவது வண்டி ஓடிவிடுகிறது. ஏனென்றால், இந்த அடிப்படைப் புரிதல் சிக்கல்களால் தங்கள் இணை மீது யாருக்கும் ஜென்மப் பகையோ, நிரந்தர விரோதமோ வருவதில்லை. இன்னும் கேட்டால், சில மணி நேரங்களில் அல்லது சில நிமிடங்களில்கூட இதனால் ஏற்படும் எரிச்சலிலிருந்து மீண்டு, காதல் துளிர் விட்டுவிடும்.

கணவனுக்காக மனைவி ரசித்து, கவனம் செலுத்தி ஒரு தேநீர் போட்டுக்கொண்டு வந்து கொடுக்கையில், அவள் கண்களைக்கூட கவனிக்காமல், இடது கையால் வாங்கி வைத்துக் கொண்டு, மடிக்கணினியை நோண்டிக்கொண்டு, எருமை மாடு 'சுர் புர்' என்பதுபோல அதைக் குடித்தால் மனைவிக்குக் கொலை வெறி வரத்தான் செய்யும்.

இதனால் உண்டாகும் சண்டையின் முடிவில், அடுத்த சில நிமிடங்களில் ஒரு கதகதப்பான கட்டிப்பிடித்தல் மூலமோ அல்லது மிருதுவான முத்தம் மூலமோ இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும்.

ஒரு ஆண் அவசரமாக கணினியில் அலுவலக வேலை செய்துகொண்டிருக்கும்போது, மனைவி தன்னுடைய தாய்வீட்டுக் கதைகளை அப்போதுதான் சுவாரஸியமாகச் சொல்லிக் கொண்டிருந்தால், அவன் அதை சுவாரஸியமில்லாமலே கேட்டு ம்... கொட்டிக்கொண்டிருந்தபோதும் தொடர்ந்து தொண தொணத்துக் கொண்டிருந்தால் மடிக்கணினியைத் தூக்கி அடிக்கலாம் என்று கணவனுக்கும் தோன்றத்தான் செய்யும்.

அப்போதைக்கு 'சுள் வள்' என நாயவதாரம் எடுத்து எச்சில் தெறிக்கக் கத்தினால், அவள் முகத்தை ஆமை முகம்போல மாற்றிக்கொண்டு வெறுப்பில் சென்றுவிடுவாள். ஆனால், அடுத்த சில நிமிடங்களில் குளித்து முடித்து ஈரத்தலையுடன் இடையில் மின்னல் தெறிக்கும்படிக்கு கண்ணாடி முன்பு நின்று மையிட்டுக்கொண்டு இருக்கும்போது சற்று நேரத்துக்கு முன்பு ஏற்பட்ட பிரச்சினை முடிவுக்கு வந்திருக்கும்.

இன்னும் சொல்லப்போனால், இருவருக்குமிடையிலான இந்த அடிப்படை இந்தப் பிரச்சினை ஒரு கட்டத்தில் சுவாரஸ்யமான நக்கலாகவோ அல்லது அடுத்தவரால் ரசிக்கும்படியான விசயமாகவோ போய்விடும். 'என் செல்லத்துக்கு, கேம் விளையாடிக்கொண்டிருந்தா நான் எவ்ளோ செக்ஸியா டிரெஸ் பண்ணினாலும் தெரியாது!' என்று செல்லம் கொஞ்சிக்கொண்டே பின்னங்கழுத்தில் அவள் முத்தமிட்டால், அவன் கேம் ஆடுவதைத் தூக்கிப் போட்டுவிட்டு, ஒரு வினாடியில் இந்த 'கம்பேடபிலிட்டி பிரச்சினை'யை முடிவுக்குகொண்டு வந்துவிடுவான்.

யாரும் தங்களை அடுத்தவருக்கு ஏற்றார்போல மாற்றிக்கொள்வதில்லை. அவரவர் அப்படியே தொடர்ந்தாலும், அது பெரிய சிக்கலாகாமல், தங்களுக்குப் பிடிக்காத விடயத்தை செய்யும்போதுகூட கோபம் வராமல், ரசிக்கக் கூடிய விடயமாக, செல்லம் கொஞ்சக்கூடிய விடயமாக எது மாற்றுகிறது?

காரணம் காதல். காதலில் ஒருவரை ஒருவர் ஏமாற்றவில்லை. அடுத்து காமம். இருவருக்கும் இடையில் நிறைவான காமம் ஓடிக்கொண்டு இருக்கிறது. இவை இரண்டு மட்டும் சரியாக செட்டாகிவிட்டால் மற்ற பிரச்சினைகள் எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடும் அல்லது ஒன்றுமே இல்லாததாகிவிடும். உச்சகட்டமாக அது கொண்டாடப்படக்கூடிய விடயமாகக்கூட ஆகிவிடும். 'அதுக்கு ஒண்டும் தெரியாது. ஒழுங்கா போய் கத்திரிக்காய்கூட வாங்கிக்கொண்டு வரத் தெரியாது, எங்க போனாலும் ஏமாந்துட்டு வரும்' என்று காதல் பொங்க சில பெண்கள் சொல்வதை நீங்கள் கவனித்து இருக்கக்கூடும். இதே விடயத்தில், காதல் மிஸ் ஆகிவிட்டால், வார்த்தைகள் எப்படி சுடுசுடுவென்று வரும் என்பது உங்களுக்கே தெரியும்.

நண்பர்கள் பிறந்த நாள் விழாவில் ஒரு ஆசாமி இரவு 8 மணிக்கே புறப்படுவான். சொற்பமாகத்தான் குடித்திருப்பான். மீசை மட்டும் நனைந்திருக்கும் என்று வையுங்களேன். 'ஏன் இவ்ளோ கெதியாப் போறாய்?' என்று பதறினால், 'அய்யய்யோ... வீட்ல இருக்காளே ஒருத்தி, ராட்சஸி! யாரையும் பிடிக்காது. நான் யார்கூடயும் பழகக் கூடாது. இரவு 9 மணிக்கு மேல போனா ஹால்ல பேய் மாதிரி ஒக்காந்து இருப்பா. பிறகு விடிய விடிய டார்ச்சர்தான்!' என்று சொல்லிவிட்டு ஓடுவான். [illegible] வெறுப்பை [illegible] முடியும். முன் சொன்ன அதே காரணம்தான்.



ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான இந்தக் காதல், காமம் சார்ந்த முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல், அடிப்படைப் புரிதல் பிரச்சினைகள் மற்றும் ஆண் பெண் வேறுபாடு பற்றி மட்டுமே பேசி பஜனை செய்துகொண்டிருந்தால், வேலைக்காகாது! எந்த பஜனை முடிந்தாவது எம்பெருமான் தோன்றியிருக்கிறாரா? அதேபோலத்தான் இங்கும் நடக்கும்!

ஆண் பெண் வேறுபாடு, மன அமைப்புகள், இருவருக்கும் இடையில் இணக்கமற்றத் தன்மையை உருவாக்கும் காரணிகள் என்பதையெல்லாம் பெரும்பாலானவர்கள் அறிந்தே வைத்திருக்கிறார்கள். அறிந்து வைத்திருந்து என்ன புண்ணியம்? நடைமுறைப்படுத்தாமல் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக்கொள்வதால் யாருக்குப் பயன்?

இந்த விடயத்தை எடுத்துக்கொள்ளலாம். பெண்கள் தங்கள் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளும்போது அவர்கள் எதிர்பார்ப்பது தீர்வு அல்ல. மாறாக என் பிரச்சினைகளைக் காது கொடுத்து கேள் போதும் என்பதைத்தான். ஆண்களிடம் எந்தப் பிரச்சினை வந்தாலும் அதை முழுதாக கேட்டு முடிக்கும் முன்பே தீர்வைச் சொல்லத் தொடங்கிவிடுவார்கள். இந்த அடிப்படையான குணாதிசய மாறுபாட்டையெல்லாம் உளவியலாளர்கள் எப்போதோ கண்டறிந்து சொல்லிவிட்டார்கள். பலரும் இதைப் படித்தும் கேட்டும் புரிந்துவைத்திருக்கிறார்கள். ஆனாலும் பெரும்பாலானோர் நடைமுறைப்படுத்துவது இல்லை.

ஆக, இங்கு சிக்கலானது புரிதல் குறைபாட்டில் இல்லை. நாய் ஒரே மாதிரி குலைப்பதுபோல, பூனை எப்போதும் 'மியாவ் மியாவ்' என்பதுபோல, ஆறறிவு படைத்த மனித இனமும் என்னதான் புரிந்துகொண்டாலும் அதைச் செயல்படுத்தாமல், தங்களின் அடிப்படைத் தன்மையை மாற்றியேகொள்ளாமல் 'வள் வள்' என்றும் 'மியாவ் மியாவ்' என்றுமே கத்திக் கொண்டிருக்கிறது. சுயநலம்தான் காரணம். ஆண் பெண் இருவரும் அவ்வளவு சுயநலமிகள். குறிப்பாகப் பெண்கள் இதில் மாஸ்டர்கள்!

பகுத்தறிவை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று, தெரியாத விடயத்தைத் தெரிந்து கொண்டு, அதைப் பகுத்தறிந்து தெளிவடைவது. இரண்டு, நன்கு அறிந்து புரிந்துகொண்டு தெளிவடைந்த விடயத்தை நம் வாழ்விலும் நடைமுறைப்படுத்துவது. சோகம் என்னவென் றால், பெரும்பாலும் பகுத்தறிவு முதலாவதற்குதான் பயன்படுகிறது. தான் அனைத்தும் கற்ற புத்திசாலி அல்லது சிந்தனையாளன் எனப்

**“ யாரும் தங்களை அடுத்தவருக்கு ஏற்றார் போல மாற்றிக்கொள்வதில்லை. அவரவர் அப்படியே தொடர்ந்தாலும், அது பெரிய சிக்கலாகாமல், தங்களுக்குப் பிடிக்காத விடயத்தை செய்யும்போதுகூட கோபம் வராமல், ரசிக்கக் கூடிய விடயமாக, செல்லம் கொஞ்சக்கூடிய விடயமாக எது மாற்றுகிறது ”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலும் ...

பெருமையடித்துக்கொள்ளவே பெரும்பாலும் பகுத்தறிவு பயன்படுகிறது.

சில உதாரணங்களைப் பார்ப்போமா?
ஃபெமினிஸத்தை நன்கு அறிந்திருக்கும் பெண் தன் சக பெண்ணைப் போட்டு மிதிப்பது!

கம்யூனிஸத்தைக் கரைத்துக் குடித்து தன்னை ஒரு கம்யூனிஸ்டாக காட்டிக் கொள்வதில் பெருமையடையும் ஒருவன், பிஸினஸ்மேன் ஆனதும் தன் நிறுவனத் தொழிலாளிகளை ஒடுக்குவது, சுரண்டுவது!

வேதங்கள், மத நூல்கள், இதிகாசங்களைக் கரைத்துக் குடித்து ஆன்மிகத்தை முழுதாக உணர்ந்ததாகப் பேசுவோர், ஆன்மிகம் வழிகாட்டும் அடிப்படை அன்புக்கு எதிராக மக்களைக் கொன்று குவிக்கும் வெறுப்புக்குத் தூதர்கள் ஆவது!

இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். மேற்குறிப்பிட்ட உதாரணங்களில் வருபவர்கள் பகுத்தறிந்து புரிந்துகொண்டவர்கள், ஆனால் வாழ்வில் நடைமுறைப் படுத்தாதவர்கள். இவர்கள் அனைவரும் சராசரிக்கும் மேலானவர்களாக சமூகத்தில் கருதப்படுபவர்கள். இவர்கள் லட்சணமே இதுவென்றால், சராசரி மனிதனை நினைத்துப்பாருங்கள்.

ஆண் - பெண் உறவுச் சிக்கல்களில் என்னதான் எல்லாமே நன்றாகப் புரிந்தாலும், விளங்கினாலும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. கூட்டணி ஆட்சி நடக்கும்போது, 'குறைந்தபட்ச வேலைத் திட்டம்' என்ற எல்லைகளை வகுத்துக்கொண்டு, ஆட்சிசெய்வதுபோல வாழ்வில் யாரும் வாழத் தயாராக இல்லை.

ஆக, காதலும் காமமும் இணைந்த பாரம்பரியமான வழியையே இரு தரப்புகளும் நாட வேண்டியிருக்கிறது. ஆனால், அங்கேயும் வேறொரு சிக்கல் இருக்கிறது. என்ன சிக்கல்?

பல்வேறு விடயங்களில் பெரும் வேறுபாடுகளுடன் திரியும் ஆணும் பெண்ணும் காதலிலும் காமத்திலும் மட்டும் ஒரே மாதிரி இருப்பார்களா என்ன? இங்கேயும் கன்னாபின்னாவென வேறுபாடுகள். குறிப்பாக, பெண்களிடம் ஏராளமான எதிர்பார்ப்புகள் இங்கேயும் கிளர்ந்தெழுந்து நிற்கின்றன.

எனக்குத் தெரிந்த நான்கு கதைகளைத் தொகுத்து ஒன்றாகத் தருகிறேன்.

காதலை முதன்முதல் வெளிப்படுத்தும் காலகட்டத்தில் ஆண் நெருங்கி நெருங்கி வர பெண் விலகிக்கொண்டே இருக்கிறாள். ஒருகட்டத்தில் அவளும் நெருங்கி நெருங்கி வர காதல் கை கூடுகிறது. ஆண் நெருக்கம் இன்னும் அதிகமாகிறது. பெண் அவனுக்கு இணையாக நெருங்கி வர, காதல் உக்கிரம் ஆகிறது. 24 மணி நேரமும் ஒருவர் நினைப்பாக இன்னொருவர் இருப்பது, அனைத்தையும் பகிர்ந்துகொள்வது, அனைத்து வேலைகளையும் ஒன்றாகவே பார்ப்பது என்று காமத்தில் முயங்கி முத்துக்குளித்து காதல் உச்சம் பெறுகையில் பெண் முதன்முதலாக ஆண் தொடக்கத்தில் காட்டிய காதல் வேகத்தை அப்போதுதான் வந்தடைகிறாள்.

வந்தடைந்ததோடு அல்லாமல் அதன் பிறகு அவளின் தீவிரம் நாளுக்கு நாள்கூட ஆரம்பிக்கிறது. அவளுக்கு அவளுக்குத் தீவிரம்கூடத் தொடங்கும் தருணத்தில், இவன் தீவிரம் குறையத் தொடங்குகிறது. அதன் பிறகு அவள் எப்போதும் அவனுடன் இருக்க விரும்புகிறாள். அவனை மூச்சடைக்க வைக்கிறாள். இவனோ அவளில்லாமல் சற்று நேரம் ஆசுவாசமாக மூச்சுவிடலாம் என்று ஏங்குகிறான்.

ஏன் இப்படி திடீர் குழப்படி வருகிறது?
(அடுத்த சனிக்கிழமை பேசுவோம்)

# வேலைக்கு விண்ணப்பத்திற்கு அவசியமான முகப்புக் கடிகதம்

**சிறீதர்.எஸ்**

சில வருடங்கள் முன்பு லண்டனில் பணிபுரிந்துகொண்டிருந்த என் மேலதிகாரியிடம் நண்பர் ஒருவருக்காக வேலைக்குக் கேட்டிருந்தேன். "அவது சுயவிவரக்கோவையை அனுப்பச் சொல்லு" என்று கேட்டிருந்தார். நானும் நண்பரிடம் மின்னஞ்சல் முகவரி கொடுத்து அனுப்பச் சொன்னேன். அவர் அனுப்பியும் வைத்திருந்தார். ஆனால் என் மேலதிகாரி அவரை நேர்முகத் தேர்வுக்குக்கூட அழைக்கவில்லை. பின்னர் நான் கேட்டதற்கு, "உன் நண்பர் இப்படித்தான் அவர் சுயவிவரக்கோவையை அனுப்பி இருக்கிறார், பார்!" என்று காட்டினார்.

அந்த மின்னஞ்சல் கீழ்வருமாறு இருந்தது:

அன்புள்ள மார்க்,
இத்துடன் என் பயோடேட்டாவை அனுப்பி இருக்கிறேன்.
நன்றியுடன்
ராஜீவ்

"இதுதானா தன்னைப் பற்றி அவருக்கு



**எல்லா வேலைக்கும் ஒரே முகப்புக் கடித வடிவங்கள் வேண்டாம். விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக எழுதுங்கள். அது அந்த வேலைக்கு மட்டுமானதாகதான் இருக்க வேண்டும். பழைய கடிதத்தை பிரதி செய்து அதனை வேலைக்கு ஏற்றபடி திருத்தி எழுதுகிறேன் என்றெல்லாம் முனையவேண்டாம்.**

சொல்ல இருப்பது?" என்று என் மேலதிகாரி கேட்டதற்கு என்னால் பதில் சொல்லமுடியவில்லை.

தனித்துவமான சுயவிவரக்கோவை (பயோடேட்டா) தயாரிப்பது எப்படி ஒரு முக்கியமான வேலையோ, அதைப்போலவே தனித்துவமான முகப்புக் கடிதம் எழுதுவதும் முக்கியமான ஒன்று. ஒரு வேலைக்கு விண்ணப்பிக்க உங்கள் சுயவிவரக்கோவையை அனுப்பும்போது அந்த மின்னஞ்சலில் உங்களைப் பற்றி சுருக்கமானதொரு விவரணையை எழுதவேண்டும். சுருக்கம் முக்கியம்.

உங்களைப் பற்றி எழுதுங்கள் என்றால் சிலர், 'நான் 1978இல் பிறந்தேன்' என்று தொடங்கி விடுவார்கள். அந்த மின்னஞ்சல் [illegible] ஒன்றரைப் [illegible] இன்றி மூன்று அல்லது நான்கு பந்திகளில் உங்களைப் பற்றிய விவரணை இருக்கவேண்டும்.

அந்த விளக்கம் சுருக்கமாக மட்டுமின்றி சுவாரசியமாகவும் இருத்தல் அவசியம்.

நீங்கள் எந்தப் பள்ளியில் படித்தீர்கள், எந்த ஏரியாவில் வளர்ந்தீர்கள் போன்றவை அநாவசியம். நீங்கள் எப்பேர்ப்பட்ட திறமையாளர் என்பதுதான் முக்கியம். வேலைக்கு விண்ணப்பித்து சுயவிவரக்கோவை அனுப்பும்போது மின்னஞ்சலில் அந்த முகப்பு வரிகளை எழுதுங்கள். அந்த வரிகள் பின்வரும் எளிய விதிகளை பின்பற்றி இருக்குமாறு அமைத்துக்கொள்ளுங்கள்.

**திறமை திறமை, திறமை:**
நீங்கள் விண்ணப்பிக்கும் வேலைக்கு ஏற்றதாக உங்கள் திறன் உள்ளதா என்பது மட்டும்தான் நீங்கள் குறிப்பிடவேண்டியது. அதனைத் தெளிவாக ஓரிரு வரிகளில் எழுதுங்கள். நீங்கள் விண்ணப்பிக்கும் வேலை எதுவென்று உங்களுக்குத் தெரியும், அதற்கு நீங்கள் எப்படி பொருத்தமானவர் என்பதும் கூடவே தெரியும்படி அந்த வரிகள் அமைய வேண்டும்.

**ஏற்கனவே இருக்கும் வடிவங்கள் வேண்டாம்:**
சுயவிவரக்கோவை தயாரிப்பதற்குச் சொன்னதுதான் இதற்கும். எல்லா வேலைக்கும் ஒரே முகப்புக் கடித வடிவங்கள் வேண்டாம். விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக எழுதுங்கள். அது அந்த வேலைக்கு மட்டுமானதாகதான் இருக்க வேண்டும். பழைய கடிதத்தை பிரதி செய்து அதனை வேலைக்கு ஏற்றபடி திருத்தி எழுதுகிறேன் என்றெல்லாம் முனையவேண்டாம். வெற்றுத் திரையில் புதிதாக யோசித்து எழுதுங்கள்.

**வேலையில் சேர்ந்த கற்பனை:**
எழுதும் முன்பு கண்களை ஒரு நிமிடம் மூடி நீங்கள் அந்த வேலையில் சேர்ந்தேவிட்டது போல நினைத்துக்கொள்ளுங்கள். புதிய நிறுவனத்தில் புதிய மேசையில் அமர்ந்திருக்கிறீர்கள். அப்போது உங்கள் வேலையை எப்படி அணு குவீர்கள்? உங்கள் சிந்தனை, செயல் எல்லாம் எப்படி அமையும்?

இப்போது கண்ணைத் திறந்து எதிரே கணினித் திரையைப் பாருங்கள். உங்கள் சிந்தனையை எழுதத் தொடங்குங்கள்.

**தன்னம்பிக்கை:**
உங்கள் முகப்புக் கடிதம் என்பது வேலைக்கு உங்கள் பொருத்தத்தை விளக்குவது. எனவே, அது தன்னம் பிக்கையில் மிளிரவேண்டும். "அய்யா, சாமி வேலை குடுங்க" என்ற ரீதியில் போகக்கூடாது.

**திமிர்கூடாது:**
கடிதத்தில் தன்னம்பிக்கை மிளிர வேண்டுமே தவிர முகப்புக் கடிதம் திமிர்த்தனமாக இருக்கக் கூடாது. 'இந்த ஆளுக்கு ஓவர் கொழுப்பு' என்று படிப்பவர் நினைத்துவிடக் கூடாது. சரி, நீங்கள் எழுதுவது திமிராக தொனிக்கிறதா, அல்லது தன்னம்பிக்கையில் தொனிக்கிறதா என்று எப்படி புரிந்துகொள்வது?

உங்களைப் பற்றி எழுதும்போது திறமையை தைரியமாக தடைகள் இன்றி விளக்குங்கள். அதேநேரம் நீங்கள் விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றி எழுதும்போது பெருத்த மரியாதை தொனிக்க எழுதுங்கள். இப்படி எழுதியதைப் படிப்பவர் அந்த வித்தியாசத்தை உணரக் கூடும். 'இந்த நபர் தைரியமான ஆசாமிதான், அதே நேரம் மரியாதை தெரிந்தவர்' என்ற முடிவுக்கு கடிதம் அவரைக் கொண்டுவந்துவிடும்.

**வேலை பற்றிய விபரம்:**
உங்கள் முகப்புக் கடிதத்தில் நீங்கள் விண்ணப்பிக்கும் வேலை பற்றிய விவரம் ஓரிரு வரிகள் வரவேண்டும். அதாவது நீங்கள் வேலை விவரணை ஆவணத்தை முழுவதும் படித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்போ உங்கள் எதிரி

கு.கணேசன்



தமிழர்கள் கலோரித் தேவையைப் பெரும் பாலும் கார்போக்கள் குவிந்துள்ள அரிசி, கோதுமை, ரவை என்பவற்றில் தயாரிக்கப்பட்ட புட்டு, இடியப்பம், இட்லி, தோசை, ஆப்பம், களி, கஞ்சி, கூழ், உப்புமா, சப்பாத்தி, புரோட்டா, நூடுல்ஸ், சோறு போன்றவைதான் பூர்த்திசெய்கின்றன. இவைதான் உடற்பருமனுக்கு வலை வீசுகின்றன.

சின்ன கணக்கு சொல்கிறேன். மத்திய வயதில் உள்ள ஒருவருக்குத் தினமும் 120 கிராம் கார்போதான் தேவை. அவரோ தினமும் 400 கிராம் கார்போவை சர்வ சாதாரணமாக சாப்பிடுவதாக ஒரு புள்ளிவிவரம் சொல்கிறது.

இதிலிருந்து 100 கிராம் குளுக்கோஸ் உடலுக்குக் கிடைக்கிறது. இது சுமார் 20 தேக்கரண்டி வெள்ளைச் சீனி சாப்பிடுவதற்குச் சமம். இவ்வளவு குளுக்கோஸ் நமக்குத் தேவையில்லை. இதை எரிக்க தினமும் ஆறு கிலோ மீற்றர் ஓடவேண்டும். இது இயலாதபட்சத்தில், இந்த அதீத குளுக்கோஸ் கொழுப்பாக மாறி, உடற்பருமனுக்கு 'அழைப்பு' விடுக்கிறது.

அடுத்து, கார்போக்களில் கிடைக்கும் குளுக்கோஸ் எளிதாகச் செரிமானம் ஆகும் தன்மையுடையது. புட்டு குடலுக்கு வந்து சேர்ந்ததும் கணையத்திலிருந்து இன்சுலின் சுரந்து, தாயிடமிருந்து பிறந்த சிசுவை செவிலியர் ஒருவர் குளிப்பாட்டி பத்திரமாகத் தொட்டிலில் படுக்கவைக்கிற மாதிரி, இட்லியிலிருந்து குளுக்கோஸைப் பிரித்து, உடல் செல்களுக்கு எடுத்துச் சென்று தேவையான பயன் கிடைக்கச் செய்கிறது. குளுக்கோஸ் தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்றால், அதைக் கல்லீரலுக்கு எடுத்துச் சென்று, கிளைக்கோஜனாக மாற்றி வயிற்றுக்குத் தள்ளிவிடுகிறது. இதனால்தான் தொப்பை தொடங்குகிறது.

பெரும்பாலும் கார்போக்கள் சாப்பிட்ட மூன்று மணி நேரத்துக்குள் செரிமானமாகி விரைவில் பசித்துவிடும். எனவேதான், காலை எட்டு மணிக்குச் சாப்பிட்டுவிட்டு அலுவலகம் சென்றால், பதினொரு மணிக்குக் ஏதாவது ஒன்றிரண்டை வயிற்றுக்குள் தள்ள வேண்டியதிருக்கிறது.

இந்தப் பழக்கம் நீடிக்கும்போது, உடலில் சேரும் கலோரிகள் எகிறுகின்றன. இப்படி எகிறும் கலோரிகள் உடற்பருமனுக்குத் தோரணம் கட்டுகின்றன.

கார்ப்போக்களை அதிகமாகச் சாப்பிடுபவர்களுக்கு இன்சுலின் மட்டுமல்லாமல், இரைப்பையில் பசியைத் தூண்டும் கிரிலின் ஹார்மோனும் அதிகமாகச் சுரக்கிறது. இதனால் இவர்களுக்கு அடிக்கடி பசிக்கிறது. பசியைக் கட்டுப்படுத்த, இவர்கள் அடிக்கடி உணவு சாப்பிடுகிறார்கள்.

அப்படிச் சாப்பிடுவதும் கார்ப்போக்களாகவே இருக்கும்போது, திறந்து போட்ட வீட்டில் திருடனும் நுழையலாம் தெரு நாயும் நுழையலாம் என்று சொல்வது மாதிரி, இவர்களுக்கு உடற்பருமனும் வரலாம்; அதைத் தொடர்ந்து நீரிழிவு, பிசிஓடி போன்ற தொல்லை தரும் தோழிகளும் கரம் கோத்துக்கொள்ளலாம். எனவே, உடற்பருமனை ஓரங்கட்ட விரும்புகிறவர்கள் முதலில் செய்ய வேண்டிய காரியம், கார்போக்கள் சாப்பிடுவதைக் கட்டுப்படுத்துவதுதான்.

(தொடர்ந்து பேசுவோம்)

## வேலைக்கு ...

விட்டிருக்கிறீர்கள். அதில் கேட்கப்பட்ட திறன்கள் பற்றி முழுவதும் அல்லது பெருமளவு அறிந் திருக்கிறீர்கள் என்பதை உங்கள் விண்ணப்பத் தைப் படிப்பவருக்குத் தெரியவைக்கவேண்டும். அப்போது உங்களைக் குறித்த மரியாதை அவ ருக்கு அதிகரிக்கும்.

**வேலை பற்றிய ஆர்வம்:**

நீங்கள் விண்ணப்பிக்கும் வேலையில் சேருவது குறித்த உங்கள் ஆர்வம் கடிதத்தில் வெளிப் படவேண்டும். 'இந்தப் பணியில் விரைவில் இணைந்து நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கு பங்களிக்க ஆவலாக இருக்கிறேன்' போன்ற வரிகள் இடம்பெற வேண்டும். இதனை சும்மா மேம் போக்காக எழுதினால் படிப்பவருக்கு நம்பிக்கை வராது. எனவே உண்மையிலேயே ஆத்மார்த்தமாக அந்த வரிகள் அமைய வேண்டும். அதாவது உங்களுக்கு உண்மையிலேயே ஆர்வம் இருந்தால் அந்த வரிகளும் உண்மையாக வெளிப்படும். இல்லையேல் பாசாங்காக மட்டுமே படிப் பவருக்குத் தோன்றும்.

கடைசியாக இந்த ஒரு வரியை மட்டும் மனதில் ஏற்றிக்கொள்ளுங்கள் உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும் மனிதவளத் துறை முகாமையாளருக்கு உங்கள் சுயவிவரக் கோவையைத் திறந்து படிக்கலாமா வேண்டாமா என்ற முடிவை உங்கள் முகப்புக் கடிதம்தான் தீர்மானிக்கப்போகிறது. எனவே அந்தக் கடிதத்தை முடிந்த அளவு கவனத்துடனும் நீங்கள் விண்ணப்பிக்கும் நிறுவனத்தின் மீதான முழு மரியாதையுடனும் உருவாக்குங்கள்.

வெற்றி பெறுங்கள்!

## திசையறு சொல்லரங்கு-2

சொல்லாடலொன்றால்
சொல்லிடுக்குகள் வழி
இழுத்துச் செல்லப்படுகிறேன்.

அகன்றும் ஒடுங்கியும்
அடுக்கப்பட்டிருந்த
சொல்லிடுக்குகளில்
உறைந்துபோயிருக்கும்
வித்துவங்கள்.

அது ஒரு
பெரு வெளியல்ல
ஒடுங்கிக் குவிந்த
சிறு புள்ளிதான் போலும்.
திரும்பவும் வழியில்லை.
ஒற்றை வழித்தடம்.

தெரிவுகளென்று
ஏதுமேயில்லை.
அதுவும்
அவையும் மட்டுந்தான்.



கடந்துபோன பல
நூறாண்டுகளில்
உலர்ந்தனசாயிருந்தன.

நவீனம் என்பதான
சுட்டிகளுடன்
சந்திடுக்குகள் சில
இருந்தன.


பின்நவீனமென
குறியிடப்பட்ட
முடல் சந்திடுக்குகளில்
தூசியும் இல்லை.

இழுத்துச் செல்கிற
சொற்கள்
இருந்தாறக்கூட இல்லை.
காற்றில்லை.
ஒளியில்லை.
அதுதான் காரணமாக்கும்?.

-கை.சரவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மவூர்ச் சுத்துமாத்து



கார்த்திகேசு - யாழ்.நகர்

## ஒன்லைன் சுத்துமாத்து

கொரோனா முடக்க காலத்தில் இணையவழிப் பரிமாற்றங்கள் முக்கியமாகின. இணையவழிப் பணம் - பொருள் பரிமாற்றத்தில் பல சுத்துமாத்துச் சம்பவங்கள் நடந்துள்ளன. தொடர்ந்தும் நடக்கின்றன. இணையவழியில் பொருள் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் தனியான - பெரியதொரு சுத்துமாத்துகளின் இருப்பிடமாக இருக்கிறது. கொழும்பு மற்றும் தென்னிலங்கையிலிருந்து இயங்கும் இணைய வழிப் பொருள் கொள்வனவுப் பரிமாற்றங்களால் பலர் ஏமாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதைவிட நம்மூரிலும் பல சுத்துமாத்துகள் வளர்ந்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக வங்கிகள் சார்ந்த சுத்துமாத்துகளே அதிகம்.

அதாவது கொரோனா தீநுண்மிச் சூழலில் தமது சேவைக்காக அதிகமானவர்கள் வங்கிக்குள் வந்து கூடி விடக்கூடாது என்கிற காரணத்தைக்காட்டிப் பல தொகைப் பணம் பறிக்கப்பட்டிருக்கிறது.

எனது வீட்டு மின்சாரப் பட்டியலைக்கொண்டு சென்று தொடக்கத்தில் தபாலகத்தில் அதற்கான பணத்தைக் கட்டியபோது மேலதிகமாகக் குறிப்பிட்ட தொகைப் பண அறவீடு இருந்தது. மக்கள் வங்கியில் கொண்டுசென்று செலுத்தினாலோ மின்சார சபைக்குச் சென்று நேரடியாகச் செலுத்தினாலோ அந்த அறவீடு தவிர்க்கப்படும் என்று தபாலகத் தரப்பினர் சொல்லினர். மின்சார சபையை விட மக்கள் வங்கி அருகில் இருந்ததால் அதில் கொண்டுசென்று கட்டியபோது அந்த அறவீடு இல்லாது போனது. பின்னர் கொரோனா வந்து முடக்கங்கள் - வங்கி நடவடிக்கைகள் குறைப்பு என்றாகிய நிலையில் மின்சாரப் பட்டியலைக் கொண்டு சென்று கட்டப் போனபோது பண வைப்பு இயந்திரத்தில் அதைச் செலுத்தலாம் என்று சொல்லி ஊழியர்கள் தவிர்த்தனர்.

அதன் பின்னர் காவலாளி ஒருவர் என்னை அழைத்துச் சென்று அந்தப் பட்டியலுக்கு இயந்திரத்தில் பணத்தை உள்ளீடு செய்வது எவ்வாறு என்று சொல்லித்தந்தார். அவ்வாறு கட்டியபோது அந்த இயந்திரம் தனது சேவைக்கென்று சிறுதொகைப் கோரப்படும் என்றது. வங்கியில் இலவசமாகப் பெற முடிந்த சேவையைச் அதில் ஏன் பணம் கொடுத்துச் செய்யவேண்டும்...?

அதைவிடக் கொரோனா காலத்தில் இணைய வழிப் பணப்பரிமாற்றங்கள், சேவைகளை அரசும், வங்கிகளும் ஊக்குவிக்கத் தொடங்கிய பின்னர் வங்கிகளுக்குப் போகையில் ஐயாவிடம் கைபேசி இருக்கிறாதா? இருந்தால் நீங்கள் வங்கிக்கு வரத்தேவையில்லை, அதிலேயே எல்லாம் செய்து கொள்ளலாம், பணம் எடுத்தால் குறுந்தகவல் வரும், பணம் வைப்பிலிட்டால் குறுந்தகவல் வரும் எல்லாவற்றுக்கும் இப்போது வசதியிருக்கிறது என்று சொல்லி அதைச் செயற்படுத்தி எனக்குக் காட்டியும் தந்தார்கள். அது என்னவோ சுலபமாக இருந்தாலும் அதற்குப் பணம் அறவிடப்படும் என்பதை அவர்கள் அப்போது சொல்லவில்லை. கைபேசி இணைய வங்கிச் சேவைக்காகக் குறிப்பிட்டளவு பணத்தை எனது கணக்கிலிருந்து பெற்றுள்ளதாக மாதாந்தம் குறுந்தகவல் வந்தபோதுதான் தெரிந்தது அதற்கும் பணம் பெறப்படுகிறது என்று.


வங்கிக்குச் செல்வது, காத்திருப்பது, நேரவிரயம், போக்குவரத்து அலைச்சல் என்பன தவிர்க்கப்பட்டு கைபேசிக்கான இணையச் செலவு மற்றும் அவர்கள் மாதாந்தம் அறவிடும் சேவைச் செலவு என்பன சேர்க்கப்படுவதால் அதனால் பாதிப்பில்லை. ஆனால் இவற்றைச் செயற்படுத்தும்போது இவ்வாறு அறவீடுகள் உள்ளன என்பதைக் கூறாமல் தவிர்க்கும் தந்திரம் கண்டிக்கத்தக்கது.

# சிம்புவுடன் காதலா...? என்ன சொல்கிறார் அகர்வால்...?


மீண்டும் காதல் வலையில் சிக்கிய சிம்பு...!, சிம்பு - நிதி அஹர்வால் காதல்...!, இந்த முறையாவது சிம்புவின் காதல் கைகூடுமா...?, சிம்பு - நிதி அகர்வால் காதல் திருமணம்...! என்றெல்லாம் அடுத்தடுத்துச் செய்திகள் வெளியாகிச் சமூக ஊடகங்களிலும் அண்மையில் சூடுபிடித்திருந்தது இந்த விவகாரம்-. இது சர்ச்சை என்றும் நெருப்பில்லாமல் புகை வராது ஆகவே இது சர்ச்சையில்லை என்றும் பலர் கன்னைகட்டிக் கதைத்து வருகிறார்கள்.

தமிழ் மற்றும் தெலுங்கில் பிரபலமான நடிகையாக இருப்பவர் நிதி அகர்வால். ஹிந்தியில் வெளியான 'முன்னா மைக்கேல்' படம் மூலம் அறிமுகமான இவர், அதன் பிறகு தமிழ்ப் படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். தமிழில் சிம்புவுடன் 'ஈஸ்வரன்', ஜெயம் ரவியுடன் 'பூமி' ஆகிய படங்களில் நடித்திருந்தார். ஈஸ்வரன் படத்துக்குப் பின்னர் சிம்புவும் நிதி அகர்வாலும் காதல் கொள்கிறார்கள் என்று சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின. சிம்புவுக்கு இந்த விவகாரம் புதில்லை என்றாலும் புதுமுக நடிகை நிதிக்கு இது புதிது. அதனால் தன்னையும் சிம்புவையும் பற்றிய இந்தக் கதைகள் வதந்தி என்று சொல்லி இந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் நிதி.

"நம்மைப் பற்றி எப்போதும் ஏதாவது எழுதப் பட்டுக் கொண்டேதான் இருக்கும். அதில் சில விடயங்கள் உண்மையாக இருக்கலாம், சில உண்மைக்கு மாறானவையாக இருக்கலாம். எது உண்மை, எது உண்மை இல்லை என்பது நம் பெற்றோருக்குத் தெரிவது மட்டும்தான் முக்கியம். மக்கள் பேசுபவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளளத் தேவையில்லை. நம்முடைய வேலைதான் அவர்களுக்குப் பதில் சொல்லவேண்டும். அப்படி நடப்பதற்காக நான் காத்திருக்கிறேன்" என்று கூறியுள்ளார் அவர். எது எப்படியோ சிம்புவைச் சுற்றி இப்போதும் இதுபோன்ற சர்ச்சைகள் முளைத்துக்கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் என்னவோ இதில் இப்போது புதிதாகச் சிக்கியது நிதி அகர்வால்தான்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெமினி றோய்

# குட்டி போடும் குட்டி ரோபோ...!

இந்தப் பூமியை வேற்றுக்கிரகவாசிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் தருணம் வெகு தொலைவில் இல்லை என்றும் அவர்களின் பிடிக்குள் பூமி இருக்கவே எதிர்காலத்தில் வாய்ப்புண்டு என்றும் அறிவியலாளரும் வான்வெளி ஆராய்ச்சியாளருமான ஸ்ரீபன் ஹக்கீம் ஒரு தடவை சொல்லியிருப்பார். அவர் சொன்னது நடக்கப்போகிறதோ இல்லையோ இந்தியத் திரைப்பட இயக்குநர் ஷங்கர் சொன்னது நடக்குமாப்போல இருக்கிறது.

ரஜினிகாந்தை வைத்து அவர் இயக்கிய எந்திரன் படத்தில் தனக்கு நன்மையளிக்கும் என்ற எண்ணத்தில் மனிதன் உருவாக்கும் உணர்வுடைய ரோபோவால் மனிதர்களுக்கு நிகழும் எண்ணிலாத் துன்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். ஏகப்பட்ட அழிவுகளுக்கு வித்திடுகின்ற அந்த ரோபோ தன்னைப்போல பல ரோபோக்களை உருவாக்கித் தனது திட்டங்களைச் செயற்படுத்துவதும் அதைத் தடுக்கவும் நிறுத்தவும் மனிதர்கள் படாதபாடு படுவதும் அதற்குள் பல இழப்புகள் அழிவுகளுக்கு முகம்கொடுத்துவிடுவதும் நிகழ்கிறது. முடிவில் ஒருவழியாக ரோபோ அழிக்கப்படுகிறது.

அந்தத் திரைப்படத்தில் காட்டப்பட்ட தைப் போன்ற நிலைதான் இனி உண்மையிலும் நடக்கப்போகிறதோ என்று பலரையும் பயம் பற்றிப் பிடித்துள்ளது. அதற்குக் காரணம் குட்டிபோட்டுத் தானாகவே தனது இனத்தைப் பெருக்கக்கூடிய ஒரு வகை ரோபோவை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருப்பதுதான்.

**குட்டி ரோபோ...!**

தன்னைப்போலவே மற்றொரு ரோபோவை அதுவும் இளம் ரோபோவைத் தானாகவே உருவாக்கக் கூடிய ரோபோவைச் சில ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். ரோபோ என்றதும் இதுவரையும் ஆங்கிலப் படங்களும், ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளும் காட்டிய ரோபோ போன்று இருக்கும் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு.

இந்தப் புதிய ரோபோ கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு மிகச் சிறியது. கிட்டத்தட்ட 1 மில்லி மீற்றர் அளவுடையது. கணினியைப் பயன்படுத்தி ஆனால் உலோகங்கள் இல்லாமல் உயிரினச் சேர்க்கைகளால் இந்த ரேபோ உருவாக்கப்பட்டிருப்பதுதான் இதிலுள்ள விநோதமும் புதினமும். இதனால்தான் இதுவரையான காலங்களில் உருவாக்கப்பட்ட உலோக, இலத்திரனியல், மென்பொருள்களைக் கொண்ட ரோபேக்களில் இருந்து இது தனித்துத் தெரிகிறது.

உலோகமற்ற உயிருள்ள இந்த ரோபோவுக்குப் பயோ போட்ஸ் (BIOBOTS) என்று பெயரிட்டுள்ளனர் இதைக் கண்டுபிடித்த குழுவினர்.

**குட்டி போடும்...!**

உலோகமற்ற ஆனால் உயிருள்ள இந்த ரோபோ உருவாக்கப்பட்ட விதம் சற்று வித்தியாசமானது. ஆபிரிக்காவில் வாழ்கின்ற ஒரு வகைத் தவளை இனத்திலிருந்து (AFRICAN CLAWED FROG - XENOPUS LAEVIS) வளரிளம் கருவிலுள்ள இதயத் தசைகளின் செல்களையும் தோலிலுள்ள செல்களையும் பிரித்தெடுத்துக் கணினித் தொழில்நுட்

**முதலில் இந்த ரோபோ வகை உயிரினத்தை விஞ்ஞானிகள் காயப்படுத்தியபோது - உருச்சிதைத்தபோது அது தனானாகவே தன்னைத்தானே சரிசெய்து பழைய நிலைக்குத் திரும்பியிருக்கிறது.**



பத்தின்மூலம் ஒன்றுசேர்த்து உயிரூட்டி உருவாக்கப்பட்டதுதான் இந்த ரோபோ. அந்த இனத் தவளையிலிருந்து உருவாக்கப்பட்ட காரணத்தால் இந்த ரோபோவுக்கு ஜெனோபோட்ஸ் ( XENO BOTS) என்று பெயரும் வைத்துள்ளனர். கிட்டத்தட்ட 3ஆயிரம் செல்களைப் பயன்படுத்திக் கிட்டத்தட்ட 1 மில்லி மீற்றர் அளவில் உருவாக்கப்பட்டு விட்ட இந்த ரோபோவுக்கு நடக்கவும், நீச்சலடிக்கவும், பொருள்களை நகர்த்தவும், இன்னும் பல உத்தரவுகளைச் செயற்படுத்தவும் கற்றுக்கொடுக்கப்பட்டு விட்டது.

கற்றுக்கொடுத் தவற்றைக் கச்சிதமாகச் செய்துவந்த இந்த ரோபோ

கணினி சொல்லாத சிலவற்றைத் தானாகச் செய்யவும் தொடங்கியிருக்கிறது. இதுதான் மனிதர்களுக்கு அச்சுறுத்தலாகவும் திகைப்பாகவும் இருக்கிறது. முதலில் இந்த ரோபோ வகை உயிரினத்தை விஞ்ஞானிகள் காயப்படுத்தியபோது - உருச்சிதைத்தபோது அது தனானாகவே தன்னைத்தானே சரிசெய்து பழைய நிலைக்குத் திரும்பியிருக்கிறது. அத்தோடு மேலும் புதினமளிப்பதாக அது குட்டிபோடவும் செய்திருக்கிறது. ஆய்வகத்தில் இதை வளர்த்துக் கொண்டிருக்கையில் தன்னைச் சுற்றியிருந்த தளர்வான செல்களை எல்லாம் ஒன்றுதிரட்டித் தன்னைப்போல தனியான மற்றொரு ரோபோவை அது உருவாக்கியிருக்கிறது. இந்த இனப்பெருக்க முறையை இயக்கவியல் சுயப் பிரதிபலிப்பு என்று தமிழ்ப்படுத்துகிறார்கள். அதாவது அது குட்டி போட்டிருக்கிறது.

**ஆச்சரியத்திலும் அச்சத்திலும் ஆராய்ச்சிக் குழு**

இவ்வாறு தானாகவே தன்னை மாற்றியமைக்கவும் தன்னைப்போல ஒன்றை உருவாக்கவும் செய்கின்ற இந்த ரோபோ எதிர்காலத்தில் பூமியில் தன்னிச்சையாகவே நிலைகொள்ளக்கூடும் என்றும் மனிதர்களின் கட்டுப்பாட்டை மீறிச் செயலாற்றக்கூடும் என்றும் இதைக் கண்டுபிடித்தவர்கள் அச்சத்திலும் அதேநேரம் ஆச்சரியத்திலும் இருக்கிறார்கள்.

கண்ணுக்கே தெரியாத இந்தச் சிறிய ரோபோவை மனித உடலுக்குள் புகுத்தி மருத்துவ ஆராய்ச்சிகளைச் செய்யவும், பாதிக்கப்பட்ட உறுப்புகளுக்கு மருந்திடவும், மாற்றியமைக்கவும், நீர் நிலைகளிலுள்ள கண்ணுக்குத்தெரியாத மிகச் சிறிய பிளாஸ்ரிக் தீங்குகளைக் கண்டறிந்து தனியாக்கவும், பிளாஸ்ரிக் மற்றும் உலோகப் பயன்பாடில்லாத ரோபோ ஆகையால் இயற்கைக்குப் பாதிப்பில்லை என்றும் இதனால் பல நன்மைகள் இருக்கின்றன என்றும் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

அவற்றை யெல்லாம் தாண்டி மிகப் பெரிய அச்சமே பலருக்கும் இருக்கிறது. அதாவது இது மனிதர்களின் கட்டுப்பாட்டுக்குச் செவி சாய்க்காமல் தன்னிச்சையாகச் செயற்படும் திறனுடன் இருப்பதால் உடலுக்குள் அனுப்பப்பட்டுத் தனக்குரிய பணியைச் செய்த பின்னர் மனித மூளைக்குள் செல்லும் வாய்ப்பு உண்டாகினால் அதைக் கட்டுப்படுத்த வாய்ப்புண்டு...! அதைவிட அனைத்துச் செயல்களிலும் தன்னிச்சையாகச் செயற்பட்டால் கண்ணுக்குத் தெரியாத அதைக் கண்டறிந்து சிறை வைப்பதும் சாத்தியமில்லை. இவ்வாறாகப் பல யோசனைகளால் இதைக் கண்டுபிடித்த அமெரிக்க ஆராய்ச்சிக் குழுவும் குழம்பிப் போய்த்தான் இருக்கிறது...!

7ஆம் அறிவு படத்தில் காட்டப்பட்டதுபோல உயிரியல் போர் ஒன்றுக்கும் இது வித்திடலாம்...! எது எப்படியோ இப்போதைக்கு இருக்கும் கொரோனா தீநுண்மி பிரச்சினைக்கு மத்தியில் இந்தப் புதிய புரட்சி ரோபோவும் ஆராய்ச்சியுடன் மாத்திரம் மட்டுப்பட்டிருப்பதே ஆறுதல்...! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்காக உழைக்க வேண்டும்...!

நியூட்டன்

"உங்களால முடியாவிட்டால் எங்களிட்டத் தாருங்கோ" என்கிற வார்த்தைகளே தற்போது இலங்கையின் அரசியல் தரப்புகள் மத்தியில் அதிகம் பேசப்பட்டு வருகின்றன. அதாவது தற்போதைய அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆட்சியை முன்கொண்டுசெல்லும் திறன் இல்லை என்றும் அவருக்கு அது இயலாமல் இருக்கிறது என்றால் பதவியை விட்டு ஒதுங்குவதே அவருக்கு நல்லது என்றும் அர்த்தப்படவே இந்தச் சொல்லாடலைப் பலரும் கூறுகின்றனர். இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மனோ கணேசன், சிவாஜிலிங்கம், விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரின் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. போதாக்குறைக்கு முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவோ தான்தான் அடுத்த அரச தலைவர் ஆவேன் என்கிறார்.

சஜித் பிரேமதாசவும் அதையே கூறுகிறார். அரசுக்கு எதிரான இத்தகைய எதிர்க்கருத்தையே ஆளும் பொது மக்கள் கட்சியின் கூட்டுக்கட்சிகளும் வெளிப்படுத்துகின்றன. ஆனால், இவற்றுக்கெல்லாம் பதிலளிக்கும் முகமாக "யாரும் இந்தக் கட்சியைவிட்டு வெளியேறிச் செல்லலாம். அதேவேளை யாரும் கட்சியுடன் புதிதாக இணையலாம்" என்றுள்ளார் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச. அத்தோடு இவ்வாறாக அரசுக்கு எதிரான கருத்தைக்கூறி வருபவர்களின் பதவிகளையோ அதிகாரங்களையோ கேட்டாபாய ராஜபக்ச தரப்பு பறித்ததாகத் தெரியவில்லை. ஆனால், பலரைப் பதவியிலிருந்து அகற்றியது மக்களே.

சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராசா, துரைரட்ணசிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன் எனத் தமிழ்த் தலைவர்களின் பதவிகளை மக்களே பறித்தார்கள். எனவே ஆட்சி கவிழும் அல்லது அதைக் கைப்பற்றுவோம் எனச் சவால் விடுபவர்கள் இவ்வாறு கூச்சலோ அறிக்கையோ விடுவதைத் தவிர்த்து மக்கள் மத்தியில் இறங்கி அவர்களுக்காகச் செயற்படவேண்டும்.

சீனத் தலைவர் மாஓ சேதுங் குறிப்பிட்டதுபோல மக்களிடம் செல்ல வேண்டும். "மக்களிடம் செல்லுங்கள். மக்களுடன் வாழுங்கள்" என்று அவர் கூறியதைச் செயற்படுத்துவதே தற்போது அரசை வீழ்த்த நினைப்பவர்களின் வியூகமாக இருக்க வேண்டும். தவிர கனவு காண்பதும் வாய்ச்சாவடல் விடுவதுமல்ல. இதுவரை தேர்தல்கள் நடந்த சமயங்களில் தாம் எப்படியெல்லாம் வெல்வோம் என்று பத்திரிகைகளில் கூறிப் படுதோல்வியடைந்த தலைவர்கள் இதுகுறித்து அதிகம் சிந்திக்க வேண்டும்.

மக்களுக்குப் பொய்யுரைப்பதையும் மக்கள் முன் புளுகு மூடையை அவிழ்த்து விடுவதையும் தவிர்க்கவேண்டும். இதையெல்லாம் விடுத்து மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அதற்குத் தீர்வு தேடிக்கொடுத்தால் போதுமானது. மக்கள் அவர்களை ஆதரிப்பார்கள்.



2020ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அரசு சார்பாக வடக்கில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதன் யாழ்ப்பாணத்தில் முதன்மை வாக்குகளைப் பெற்றதும் கிழக்கில் சிறைக்குள்ளிருந்தவாறு தேர்தலில் போட்டியிட்ட சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) முதன்மை வாக்குகளைப் பெற்றதும் தமிழ்த் தேசியம் எத்தகு நிலையில் வந்து நிற்கிறது என்பதையே காட்டுகின்றது. தற்போதைய அரசானது ஆட்சியில் இருந்து இறங்கினாலும் தேர்தல் ஒன்றின் மூலமே வெற்றி பெற்று நாடாளுமன்றம் செல்லமுடியும் என்பதை அரசை வீழ்த்துவோம் என்று கூறுபவர்கள் ஒருபோதும் மறக்கக்கூடாது.

அரசை வீழ்த்துவது இரண்டாம் பட்சமானது. முதலில் மக்களின் மனங்களை வெல்வதற்குத் தலைவர்கள் மக்களை நோக்கிச் செல்ல வேண்டும். அவர்களுக்காக உழைக்கவேண்டும். ■

## பிறகெதற்கு இங்கே இருக்கிறோம்?




மிருகக் காட்சிச் சாலை ஒன்றில் ஒரு தாய் ஒட்டகமும் அதன் குட்டியும் அடைக்கப்பட்டிருந்தன. தனது தாயிடம் அந்தச் சுட்டிக் குட்டி இப்படிக் கேட்டது,

குட்டி - அம்மா...! எங்கட கண் ஏன் வீங்கின மாதிரி இருக்குது...? மற்ற மிருகங்களுக்கு அப்பிடியில்லையே...?

தாய் - அது பாலைவனத்து மணல் காற்றில் கிளம்பும்போது கண்களைப் பாதிக்காமல் இருப்பதற்கு அப்படியுள்ளது.

குட்டி - எங்கட கால்கள் ஏன் நீளமாகப் பெரிதா இருக்கு.

தாய் - அது பாலைவன மணலுக்குள் புதையாமல் நாம் நீண்ட தூரம் நடப்பதற்காக

குட்டி - எங்கட தோல் ஏன் கனமாகவும் கரடு முரடாகவும் இருக்கு


தாய்- அது பாலைவனத்தில் முட்கள் குத்தாமல் இருப்பதற்கு

குட்டி - எங்கட உடம்பில உள்ள எல்லாமே பாலைவனதுக்கு உரியது என்றால் பிறகெதற்கு [illegible] இங்க இருக்கிறோம்

(மனிதர்களின் சிந்தனைக்கு...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சாயில் களைகட்டிய வள்ளப் பொங்கல்...!




பவித்திரா

தமிழர் திருநாள் தைப்பொங்கல். தமிழர்களின் புதுவருடமும் அன்றுதான். சிங்கள - தமிழ்ப் புதுவருடமாகச் சித்திரை இருந்தாலும் ஆங்கிலப் புதுவருடத் தொடக்கம்போல தமிழ்ப் புதுவருடத் தொடங்கம் தை முதலாம் திகதிதான். ஆங்கில மாதத்தின் ஜனவரியின் நடுப்பகுதியில் தமிழர் தை ஆரம்பிக்கிறது. தைத்திருநாளில் அதாவது தமிழர் புதுவருடத்தில் பெரும் இயற்கையான சூரியனுக்கு நன்றி செலுத்துவது தமிழர்களின் பாரம்பரியமாக இருக்கிறது. தாம் வாழும் பூமியின் சுழற்சிக்கும் அந்தப் பூமியில் உயிரினச்சூழல் நிலைப்பதற்கும் ஆதார சக்தியாக இருப்பது சூரியன்.

கண்ணுக்குத் தெரிந்த கடவுள் என்று சூரியனைத்தான் குறிப்பிடமுடியும். பூமியின் சுழற்சிக்கு, பூமியில் உயிரினச்சூழல் உயிர்ப்புக் கொள்ளத் தக்கவாறு ஒளியையும் வெப்பத்தையும் வழங்குவது அதன்மூலம் தாவர, விலங்கு, நீர்ச் சுற்றோட்டம் என அனைத்தையும் இயக்கும் சக்தி சூரியனே. அதன் மூலமே உயிரினச்சூழலும் அதன் பெருக்கமும் நிலைபேறும் தொடர்ந்து நிலைக்கிறது - நிகழ்கிறது. இத்தகைய பெரும் சக்தியான சூரியனுக்கு வழிபாடியற்றுவது தமிழர்களின் பழக்கமாக இருக்கிறது. அதுதான் சூரியனுக்கு நன்றி செலுத்தும் பொங்கல் பண்டிகை. பூமியில் தாவரச் சூழலுக்கு உயிரளிக்கின்ற சூரியன் அதன் மூலம் மனிதர்களுக்கு உணவளிக்கிறான். அத்தகைய சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாக அவன் மூலம் தமக்குக் கிடைக்கின்ற உணவைச் சமைத்துச் சூரியனுக்குப் படைக்கின்றனர். இனிப்பாகப் பொங்கல் செய்து அவனுக்குப் படைத்து மகிழ்கின்றனர்.

**சூரியப் பொங்கலின் தொடர்ச்சி....**

சூரியனுக்கு நன்றி செலுத்தும் பொங்கலை உழவர்களுக்குரிய திருநாளாகச் சிறப்பித்துத் தைத் திருநாளை உழவர் திருநாள் என்றழைக்கும் பண்பே இருக்கிறது. ஆனால் சூரியன் உழவர்களின் உயிரினச் சூழலுக்கு மாத்திரம் ஆதாரமாகவிருப்பதில்லை. பூமியிலுள்ள அனைத்து உயிரினச் சூழலுக்கும் ஆதாரமாக இருப்பதால் உழவர்களைத் தாண்டிப் பலதரப்பினரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களே. சூரியனுக்கு நன்றி செலுத்தி முடித்த மறுநாள் உழவர்கள் தமது



தொழிலுக்கு உதவியளிக்கும் மாடுகளுக்கு நன்றி செலுத்தினர். அதைப்போலவே கரையோரச் சமூகத்தினரான மீன்பிடிகாரர்கள் தமது தொழிலுக்கு ஆதாரமான வள்ளம் என்கிற கடற்கலத்துக்கு நன்றி [illegible] கடற்கலங்களுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை சாவகச்சேரி - கொடிகாமப் பகுதிகளின் கரையோரப் பிரதேசங்களில் இம்முறை களைகட்டியிருந்தது பலரையும் கவர்ந்தது.

**கச்சாய்க் கிராமத்தில்**
**வள்ளப் பொங்கல் கொண்டாட்டம்**


கச்சாய் என்கிற கரையோரக் கிராமத்து மக்கள் அனைவரும் மீன்பிடியையே தமது தொழிலாகக் கொண்டவர்கள். அதிலும் குறிப்பாக இறால் பிடித்தலைப் பிரதான தொழிலாகக் கொண்டவர்கள் போருக்குப் பின்னர்தான் அவர்கள் மத்தியில் இந்த வள்ளப் பொங்கல் பிரசித்தமடைந்தது.

**சூரியன் உழவர்களின் உயிரினச் சூழலுக்கு மாத்திரம் ஆதார மாகவிருப்பதில்லை. பூமியிலுள்ள அனைத்து உயிரினச் சூழலுக்கும் ஆதாரமாக இருப்பதால் உழவர்களைத் தாண்டிப் பலதரப்பினரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களே.**

இப்போது அது மிக உச்ச அளவில் கொண்டாடப்படும் பண்டிகையாக இருக்கிறது. வள்ளப்பொங்கலின்போது தமது கடற்கலங்களைக் கரையேற்றித் தூய்மைப்படுத்துவார்கள். பின்னர் அதற்கு வீபுதி, சந்தனம், குங்குமம் தரிப்பார்கள். அதற்கு முன்புறமாக அடுப்பை அமைத்து வழமையான பொங்கலையிடுவார்கள். அதேநேரம் வள்ளத்துக்குள் கும்பம் வைத்துக் குத்துவிளக்குத் தீபம் ஏற்றி வைப்பார்கள். பொங்கல் பொங்கி முடிந்ததும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வள்ளத்துக்குள் வழையிலைகளை வைத்து அதைப் படைப்பார்கள். தேவாரம் உள்ளிட்ட பஞ்சபுராணங்களை ஓதுவார்கள். அனைவரும் கூடியுண்பார்கள். இந்தப் பொங்கல் தருணத்தில் கடற்கரையில் அனைத்து மீனவர்களது கலங்களும் வரிசையில் அடுக்கிவிட்டாற்போல தொடராகப் பொங்கும் காட்சியும் கொட்டகைகளை அமைத்துப் பொங்கலுக்குரிய வேலைப்பாடுகளில் அவர்களது குடும்பங்கள் மற்றும் உறவினர்கள் இறங்கியிருப்பதுமாக அந்தத் தருணம் அவர்களுக்குப் பெருமகிழ்வளிப்பதாக இருக்கும். அத்துடன் வெடிகள் கொழுத்தியும் குதூகலித்துக்கொள்வார்கள்.

**வள்ளப்பொங்கலுடன் பல நிகழ்வுகள்**

கடந்த காலங்களில் வள்ளப்பொங்கல் கச்சாய் மக்கள் மத்தியில் களைகட்டி வருவதால் இதை அறிகின்ற வெளித்தரப்பினர் அங்கு படையெடுப்பது அதிகரித்திருக்கிறது. கிட்டத்தட்ட பருத்தித்துறையில் நடக்கின்ற பட்டத் திருவிழாவைப்போல என்று சொல்லலாம். இதனால் இந்த வள்ளப்பொங்கலையொட்டிப் பல நிகழ்வுகளைக் கடற்கரைத் திடலில் நடத்தும் வழக்கம் உருவாகியிருக்கிறது. ஓட்டப் போட்டி, நீர் விளையாட்டுகள், நீச்சல், படகோட்டம், முட்டி உடைத்தல் எனப் பலவிளையாட்டுகள் கரையோர மக்களாலேயே திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த வருடம் இதற்கெல்லாம் புதிதாக தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் இங்கு முகாமிட்டுத் தமது பொருள்களைத் தவணைக் கொடுப்பனவு முறையிலும் நேரடி விற்பனையிலும் ஈடுபடும் வேலைகளில் ஈடுபட்டன. பெரும் இசையெழுப்பிகள், கரகாட்டம் போன்ற பெண் நடனக் காட்சிகள், இசை வாத்தியங்களை இசைக்கும் கலைஞர்களின் கொண்டாட்டம் எனப் பலவற்றை நிகழ்த்தின. தொலைக் காட்சிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சமையலறை உபகரணங்கள், இசைப் பெட்டிகள், இன்னுமுள்ள இலத்திரனியல் பொருள்களின் கூடாரமாகக் கரையோரம் மாறியிருந்தது. இவ்வாறாகப் புதிய புதிய வரவுகளும், நிகழ்வுகளும் இருந்தாலும் கரையோர மக்கள் வேஷ்டி, சாறமணிந்து தமது பாரம்பரியத்தை மறக்காமல் தமது தொழிலுக்கு உதவிய கடற்கலங்களுக்கு நன்றி செலுத்தியேத அனைவரது மனங்களிலும் நிலைத்தது. வள்ளப் பொங்கலும் வள்ளங்களின் நீர்ச் சறுக்கல் காட்சிகளுமே மனதில் ஆழப்பதிந்தன. ■

---

## மனித குலம் காக்க . . .


'பூவுலகில் பாதி'யை இயற் கைக்கு அர்ப்பணித்தல் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்து **'HALF-EARTH: OUR PLANET'S FIGHT FOR LIFE' (2016)** என்கிற நூலை எழுதியபோது அவருடைய வயது **87.** பருவநிலை மாற்றத்தைத் தீவிரமடைய வைக்கும் உயிரினங்கள் திரளாக அற்றுப்போதலையும், சூழலியல் உருக்குலைவையும் தடுத்து நிறுத்த முடியும் என்று வில்சன் நம்பினார். அவரது கடைசி ஆசை, நிறைவேறாக் கனவு என்று இந்தக் கருத்தாக்கத்தை கூறலாம் என்கிறார் அமெரிக்க சூழலியல் எழுத்தாளர் ஜெரிமி ஹான்ஸ்.

மக்களின் நன்மைக்காகவும் இயற்கையின் நன்மைக்காகவும் பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணித்துப் பாதுகாக்க வேண்டும். அந்தப் பகுதியில் மனிதர்களைத் தவிர்த்த மற்ற உயிரினங்கள் செழித்து வாழ்வதற்கு இடமளிக்க வேண்டும். இதன் மூலம் இயற்கை தனக்குத் தானே புத்துயிர் ஊட்டிக்கொள்ளும். தன் வாழ்நாளின் பெரும் பகுதியைப் பரிணாமவியல் ஆராய்ச்சிக்காகச் செலவிட்ட ஒருவர், பூவுலகுக்கும் மனித குலத்துக்கும் அளித்த மிகப் பெரிய கொடை இந்தக் கருத்தாக்கம் என்று ஜெரிமி குறிப்பிடுகிறார்.

பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணித்தால் **80%** உயிரினங்களைக் காப்பாற்ற முடியும். குறிப்பாக, உயிரினப் பன்மை மிகுந்த கடல் பவளத் திட்டுகள், வெப்பமண்டல மழைக்காடுகள் உள்ளிட்டவற்றைக் காப்பது அவசியம். இது சாத்தியமானால் உயிரினங்கள் திரளாக அற்றுப் போதலையும் ஒட்டுமொத்த சூழலியல் சீர்குலைவையும் தவிர்க்க முடியும். மனித நாகரிகமும் பேரழிவிலிருந்து தப்பும்.

**சாத்தியமற்றதா?**

மனிதத் தூண்டுதலால் உலகில் பேரழிவு **(ANTHROPOCENE)** நடைபெற்றுவரும் காலம் என்று நாம் வாழும் காலம் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்தப் பின்னணியில் பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணிப்பது என்பது நடைமுறை சாத்தியமற்ற அறிவியல் புனைவைப் போல் தோற்றமளிக்கலாம். இன்றைய தேதிக்குப் பூவுலகின் நிலப்பரப்பில் **17%** காடுகளும் **7%** பெருங்கடல்களும் ஏதோ ஒரு வகையில் பாதுகாப்பைப் பெற்றுள்ளன. அப்படியென்றால், பூவுலகில் பாதியைக் காப்பதற்கான இடைவெளி பெரிது. அதேநேரம் இது சாத்தியமற்றதல்ல. உலக சராசரி வெப்பநிலை மேலும் **1.5** டிகிரி



செல்சியஸ் அதிகரிக்காமல் தடுத்து நிறுத்த, **'30-க்கு 30'** என்கிற திட்டத்தை மார்ஷல் தீவுகள் **2016**-ல் முன்மொழிந்தன. அதன்படி பூவுலகின் **30%** நிலப் பகுதியையும் **30%** கடல் பகுதியையும் பாதுகாக்க **50** நாடுகள் முன்வந்துள்ளன.

இப்படிச் செய்வதன்மூலம் புவியை வெப்பப் படுத்திவரும் கரியமில்வாயு கூடுதலாகக் கிரகிக்கப்படும், தூய தண்ணீர் கிடைக்கும், மண் வளம் பெறும், உயிரினங்கள் செழிக்கும், இன்னும் என்னென்ன வகைகளிலெல்லாம் இயற்கை மீள வழியுண்டோ அத்தனை வழிகளிலும் இயற்கை மீண்டெழும். அதன் பலனாக மனித குலம் உட்பட அனைத்து உயிரிகளும் காக்கப் படும், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் பூவுலகு இழந்த ஆரோக்கியத்தைத் திரும்பப் பெறும். பூவுலகுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கு இ.ஓ.வில்சன் முன்வைத்த இந்த அருமருந்து, உத்தரவாதமாகப் பலன் கொடுக்கும். ஆனால், அந்தத் தீர்வைச் செயல்படுத்துவது யாரோ சிலருடைய கைகளில் இல்லை. நம் ஒவ்வொருவர் கைகளிலுமே உள்ளது என்பதைத் தன் பணி, எழுத்து வழியாக உணர்த்தி வில்சன் நம்மிடமிருந்து விடைபெற்றிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலம் காக்க ஓர் அருமருந்து!

'நவீன கால டார்வின்', 'டார்வினின் வாரிசு' என்றெல்லாம் புகழப்படும் இ.ஓ.வில்சன் (எட்வேர்ட் ஆஸ்போர்ன் வில்சன்) ஒரு பரிணாமவியலர், உயிரி-புவியியலர், சமூக உயிரியலர், எறும்பியலர் (MYRMECOLOGIST). கடந்த நூற்றாண்டின் சிறந்த அறிவியல் எழுத்தாளர்களில் ஒருவரும்கூட. அமெரிக்காவின் மாசசூசிட்ஸ் மாகாணத்தில் 2021 நத்தாருக்கு அடுத்த நாள் 92 வயதில் காலமான அவர், உயிரியலின் வழியாக உலகைப் புரிந்துகொள்ள முயன்றவர். அறிவியல் ஆராய்ச்சிகளின் மூலம் தான் பெற்ற வெளிச்சத்தை வாழ்நாள் முழுவதும் உலகுக்குக் கடத்திக்கொண்டிருந்த அவர், உலகம் இன்றைக்கு எதிர்கொண்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக 'பூவுலகில் பாதி'யை (HALF-EARTH) இயற்கைக்கு அர்ப்பணித்தல் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்தார். அந்தக் கருத்தாக்கத்தைத் தெளிவுபடுத்தி அவர் வலியுறுத்திய விதத்துக்குப் பின்னால், நீண்டதொரு ஆராய்ச்சிப் பயணம் இருக்கிறது.



### சிற்றுயிர் உலகம்

'ஒவ்வொரு குழந்தைக்கும் பூச்சிகளைப் பின்தொடர்ந்த இளமைக் காலம் ஒன்றிருக்கும். அந்த இளமைக் கால ஆர்வத்தைத் தாண்டி நான் வெளியே வரவில்லை. சூழலியலை ஆராய்ந்து பார்ப்பதிலும் குழந்தைகளுக்குப் பெருவிருப்பம் இருக்கும். பூச்சியியலை நான் தேர்ந்தெடுத்ததற்கு இப்படிக் குழந்தை மனத்துடன் இருந்தது ஒரு காரணம் என்றால், மற்றொரு காரணம், என்னால் ஒரு கண்ணால் மட்டுமே பார்க்க முடியும் என்பது. அதனால்தான் சிறிய விடயங்களை உற்றுநோக்குவதில் கவனம் செலுத்தினேன்' என்று சுயசரிதையில் வில்சன் குறிப்பிட்டுள்ளார். அவருடைய ஏழு வயதில் தூண்டிலிட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, வலுவாக இரையைக் கடித்த ஒரு முள்மீனை நீரிலிருந்து வேகமாகப் பிடித்து இழுத்தபோது, மீனின் துடுப்பிலிருந்த கூர்மையான முள் அவருடைய வலது கண் பாவையை வெட்டிவிட்டது. அதனால் வாழ்நாள் முழுக்க ஒரு கண்ணால் மட்டுமே தெளிவாகப் பார்க்கக்கூடிய நிலை அவருக்கு உண்டானது.

இளமைக் காலத்தில் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் பகுதியில் உள்ள ராக் கிரீக் பூங்கா பகுதிக்கு வில்சன் அடிக்கடி சென்று திரும்பினார். 'ஒரு நாள் மக்கிக்கொண்டிருந்த ஒரு மரக்கிளையை வெளியே எடுத்தேன். அதன் அடியில் சிட்ரோனெல்லா எறும்புகள் இருந்தன. அந்தக் கூட்டத்திலிருந்த உழைப்பாளி எறும்புகள் சிறிதாக, பருத்து, மஞ்சள் நிறத்தில் புத்திசாலிகளாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தன. அந்த எறும்புகளிலிருந்து எலுமிச்சைவாசம் வந்தது. அன்று எறும்புகள் குறித்து மனத்தில் பதிந்த அந்த பிம்பம் என் வாழ்நாள் முழுக்கத் திரும்பத் திரும்ப ஒரு நீங்காத காட்சியாக மனத்தில் பளிச்சிட்டுக்கொண்டே இருந்தது' என்கிறார்.

பதின்ம வயதின் இறுதியில் பூச்சியியலர் ஆகும் ஆர்வத்துடன் ஈக்களைச் சேகரிக்கத் தொடங்கினார். அப்போது இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்ததன் காரணமாகப் பூச்சி மாதிரிகளைக் குத்திவைக்கும் குண்டூசிகள் கிடைப்பது சிக்கலாக இருந்தது. இதன் காரணமாகச் சிறு குப்பிகளில் சேகரித்து ஆராயக் கூடிய எறும்புகளின் மீது அவருடைய கவனம் திரும்பியது.



### உயிரினச் சமநிலை

புகழ்பெற்ற ஹார்வேட் பல்கலைக்கழகத்தில் 1956-ல் பயிற்றுவிக்கும் பணியில் சேர்ந்தார். எறும்பு வகைப்பாட்டியலராகவும் அவற்றின் பரிணாமவியல் வளர்ச்சி குறித்தும் ஆராயத் தொடங்கினார். சக எறும்புகளுடன் தொடர்பு கொள்வதற்காக பெரமோன் எனும் வேதிப்பொருளை எறும்புகள் பயன்படுத்துகின்றன என்பதை முதலில் கண்டறிந்தவர் அவர்தான். 1960-களில் பிரபலக் கணிதவியலரும் சூழலியலருமான றொபேர்ட் மெக்ஆர்தருடன் இணைந்து வில்சன் பணியாற்றினார். ஃபுளோரிடா கீஸ் என்கிற சிறு தீவில் 'உயிரின வகைகள் சமநிலைக் கோட்பாடு' குறித்து அவர்கள் ஆராயத் தொடங்கினார்கள்.

இதற்காக அங்கிருந்த அலையாத்தித் தீவுகளில் பரிசோதனை மேற்கொண்டார்கள். முதலில் அந்தத் தீவுகளில் இருந்த பூச்சி வகைகளைக் கணக்கெடுத்தார்கள். பிறகு, அங்கிருந்த சிற்றுயிர்கள் அனைத்தையும் புகையூட்டி அழித்தார்கள். பிறகு புதிய உயிரின வகைகள் அந்தத் தீவுக்கு எப்படி வந்து, பெருகத் தொடங்குகின்றன என்பதை ஆராய்வதற்காக அவர்கள் காத்திருந்தார்கள். ஒரே ஆண்டில் அந்தச் சிறு தீவுகளில் இருந்த பல்லுயிர் வகைகள் ஒரு யுகத்துக்கு முந்தைய நிலைக்குத் திரும்பின. பிறகு, உயிரினப் பன்மை சமநிலையை எட்டி, அந்த இடத்தில் அவை நிலைத்திருக்கத் தொடங்கின.

இந்த நேரடிக் கள ஆய்வு முடிவுகள் அடிப்படையில், உயிரின வகைகள்-அவை வாழும் நிலப்பரப்பு இடையிலான சமன்பாடு எனும் கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இந்த ஆய்வு முடிவின்படி, ஒரு தீவில் வாழும் உயிரின வகைகளில் சமநிலை நிலவுகிறது என்பதுடன், அந்தத் தீவு சுருங்கினால், சில உயிரின வகைகளுக்கு இடமில்லாமல் போகும் என்பதும் உண்மையானது. அதாவது, ஓர் அளவுக்கு மேல் தீவுகளால் கூடுதல் உயிரின வகைகளைத் தாங்க முடிவதில்லை, அப்படித் தாக்குப்பிடிக்க முடியாத உயிரினங்கள் அழிந்துபோகின்றன. இந்த ஆய்வு அடிப்படையிலான 'தீவு உயிரி-புவியியல் குறித்த கோட்பாடு' என்கிற புத்தகம், சூழலியலர்களுக்கு நிரந்தரப் பாடமாக மாறியது.

சமூக நடத்தைகள் மரபணுக்களால் தீர்மானிக்கப்படுகின்றன என்கிற கருதுகோள் அடிப்படையில், 1975-ல் அவர் எழுதிய 'SOCIOBIOLOGY: THE NEW SYNTHESIS' (சமூக உயிரியல்) என்கிற நூல் பெரும் சர்ச்சைக்குள்ளானது. சுயநலமற்றுப் பிறருக்கு உதவும் குணம் மரபணு வழியாகவும் இயற்கைத் தேர்வு மூலமாகவும் வந்திருக்கலாம் என்று விலங்கு சமூகங்களை முன்வைத்து வில்சன் கூறினார். குறிப்பாக, அந்த நூலின் கடைசி அத்தியாயத்தில் மனித சமூகத்தில் அதிகாரப் படிநிலை நிலவுவதற்கு மரபணுரீதியிலான காரணங்கள் இருக்கலாம் என்கிற கருதுகோளை அவர் முன்வைத்திருந்தார். மனித சமூக நடத்தைகளுக்கும் மரபணுக்கள் காரணமாக இருக்கலாம் என்று அவர் கூறியதே சர்ச்சைக்குள்ளானது.

**ஒவ்வொரு குழந்தைக்கும் பூச்சிகளைப் பின்தொடர்ந்த இளமைக் காலம் ஒன்றிருக்கும். அந்த இளமைக் கால ஆர்வத்தைத் தாண்டி நான் வெளியே வரவில்லை. சூழலியலை ஆராய்ந்து பார்ப்பதிலும் குழந்தைகளுக்குப் பெருவிருப்பம் இருக்கும். பூச்சியியலை நான் தேர்ந்தெடுத்ததற்கு இப்படிக் குழந்தை மனத்துடன் இருந்தது ஒரு காரணம்**

சமூக உயிரியல் அடிப்படையில் அவர் எழுதிய 'ON HUMAN NATURE' (1978) புலிட்சர் பரிசைப் பெற்றது. பிறகு, பெர்ட் ஹால்டாப்ளருடன் இணைந்து அவர் எழுதிய 'THE ANTS' (1990) நூலும் புலிட்சர் பரிசைப் பெற்றது. சர்ச்சைக்குரிய சமூக-உயிரியல் கருதுகோளுக்கு மாறாக, உயிரி-புவியியல் சார்ந்த வில்சனின் பங்களிப்பே பரவலான கவனத்தைப் பெற்றது, குறிப்பிடத்தக்க ஒன்றாகவும் மாறியது.

### பெரும் கொடை

புத்தாயிரத்துக்குப் பிந்தைய ஆண்டுகளில் மட்டும் 14 புத்தகங்களை அவர் எழுதியிருக்கிறார்.

(22ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தறியாளர்கள் வயிற்றில் அடிப்பானேன்...!

களுவாஞ்சிக்குடி, நிமலன்

கைத்தறி நெசவுத் துணிகளுக்கும், புடவைகளுக்கும் மவுசு அதிகம். அவை ஒவ்வொன்றும் கைவினைஞர்களால் பாரம்பரிய முறைப்படி மிகக் கவனமாகச் செய்யப்பட்டுவதால் தரத்திலும் உயர்வானவை. இலங்கையிலும் இந்தியாவிலும் இதுவே நிலமை.

விசேடமாக இந்தியாவில் கைத்தறிப் பட்டுப் புடவைகளுக்கு அதிக கேள்வியுண்டு. நெசவின் தொடக்கம் கைத்தறியானாலும் இன்று இயந்திரங்களாலும் உற்பத்தி செய்யப்படும் நிலமை உருவாகிவிட்டது. ஆனாலும் தரத்திலும் பாவனையிலும் உயர்ந்து நிற்பவை கைவினைஞர்களால் ஆக்கப்படும் உடுதுணிகளே. தேவை அதிகரித்திருப்பதால் தற்போது நெசவு பெரிய ஆலைகளில் இயந்திரம்மூலம் நெய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறான பெரும் உற்பத்தியாளர்களுக்கு ஒரு துணியைச் செய்வதற்கு ஏற்படும் செலவு மிகவும் குறைவானது. அதிகளவில் உற்பத்தி நடப்பதால் வருமானம் அதிகம். ஆனால் கைத்தறி நெசவைத் தனிநபராகவும், ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களைக் கொண்டும் ஈடுபடுவோருக்கு அதிக செலவு, கூலிகள் அதிகம், துணியை அல்லது சேலையை நெய்வதற்கு அதிக காலம் என இயந்திரக்காரர்களைவிடச் செலவீனங்கள் அதிகமாகவும் வருமானம் மிகக் குறைவாகவும் இருக்கிறது. இதனால் தயாரிப்புகளுக்கான உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது.

உதாரணமாக ஒரு சேலை நெய்வதற்குக் கைத்தறி நெசவில் ஈடுபவோருக்கு 700 ரூபா அளவில் செலவாகிறது என்று வைத்தால் இயந்திர நெசவாளர்களுக்கு 300 அல்லது 350 ரூபாவே செலவாகும் நிலையிருக்கிறது. ஆனால் அந்தச் சேலையை ஆயிரம் ரூபாவுக்குச் சந்தைக்குக் கொண்டுவரும்போது கைத்தறி நெசவாளர்களுக்கு 300 ரூபா இலாபம் கிடைக்க, இயந்திர நெசவாளர்களுக்கோ 700 ரூபா வரை லாபம் கிடைத்து விடுகிறது. இதனால் கைத்தறி நெசவுத்தொழில் செய்பவர்கள் அதிக நஷ்டத்தை அடைகின்றனர்.

இதுபோதாதென்று இயந்திர நெசவாளர்கள் தாம் தயாரித்த சேலைகளுக்கு விளம்பரத் துண்டுகளைச் சேர்க்கும்போது அந்தத் துணிகள் கைத்தறியில் தயாரிக்கப்பட்டவை என அச்சடித்துப் பொய்கூறி விற்பனைக்கு விடுகின்றனர். காரணம் கைத்தறி நெசவுத் துணிகளையே மக்கள் விரும்புவதாகவும், சந்தையில் கேள்வியுள்ளதாகவும் இருக்கிறது. இதனால் இந்த இயந்திரப் பெரும் முதலாளிகள் தாம் மேலும் இலாபம் அடைவதற்காக ஏழை நெசவாளர்களின் வயிற்றிலடிக்கும் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

இயந்திர நெசவுத் துணிகளைக் கைத்தறி நெசவுத்துணி என்று நம்ப வைக்கப்படுவதால் கைத்தறி நெசவின் தரத்துக்கும் பங்கம் விளைவிக்கப்படுகிறது. இந்தப் பெரும் முதலாளிகளுடன் போட்டி போட முடியாத நிலையில் கைத்தறி நெசவாளர்களின் முயற்சிகள் படிப்படியாகக் கைவிடப்படும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறாகப் பாரம்பரியமாக நெசவில் ஈடுபடுபவர்கள் எதிர்கொண்டுவரும் இடர்களை இனங்கண்டு அந்த நெசவாளர்களுக்குக் கைகொடுப்பதற்கு அனைவரும் ஒன்றுசேர வேண்டும்.





## சமந்தா மகிழ்ச்சியாக இருந்தால் நானும் மகிழ்ச்சியாக இருப்பேன்

மனம் திறந்த நாக சைதன்யா

சமந்தா மகிழ்ச்சியாக இருந்தால், நானும் மகிழ்ச்சியாக இருப்பேன் என்று நாக சைதன்யா கூறியுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நாக சைதன்யா - சமந்தா இருவருமே தங்களுடைய திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்தனர். இது திரையுலக வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இருவருக்கிடையே பல்வேறு திரையுலகப் பிரபலங்கள் பேசிய சமரசம் அனைத்துமே தோல்வியில் முடிந்தன. இந்த விவகாரம் குறித்து சமூக வலைதளங்களில் பெரிதும் விவாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் நாக சைதன்யா தனியார் ஊடகம் ஒன்றுக்கு அளித்தப் பேட்டியில் சமந்தாவுடனான விவாகரத்து குறித்து மனம் திறந்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

பிரிந்திருப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எங்கள் தனிப்பட்ட மகிழ்ச்சிக்காக நாங்கள் இருவரும் சேர்ந்து எடுத்த முடிவு அது. சமந்தா மகிழ்ச்சியாக இருந்தால், நானும் மகிழ்ச்சியாக இருப்பேன். எனவே இது போன்ற ஒரு சூழலில் விவாகரத்துதான் சிறந்த முடிவு - என்றார்.

இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகின்றது. நாக சைதன்யா மற்றும் அவரது தந்தை நாகர்ஜுனா இணைந்து நடித்துள்ள 'பங்கர்ராஜு' பொங்கல் தினத்தன்று வெளி வந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.01.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781